# திருக்காவலூர்க் கலம்பகம்

மூலமும் உரையும்



உரையாசிரியர் :

ரம்போலா மாஸ்கரனேஸ்

தமிழ் இலக்கியக் கழகம்

திருச்சிராப்பள்ளி-1

இரண்டாம் பதிப்பு : 1977



விலை ரூ. 2-00

சங்கம் பிரிண்டர்ஸ்,
7-A, ஆண்டார் வீதி, திருச்சி-2

# பதிப்புரை

கலம்பகம் என்பது ஒரு கலவைப் பிரபந்தம். தெய்வங்களை, அரசர்களைத் தலைவர்களாகக் கொண்டு பிரபந்தங்கள் எழுதப்பட்டுள்ளன. தெய்வங்களைப் பற்றி எழுதப்பெற்ற கலம்பகங்கள், தெய்வப் பெயரோடு மட்டும் நில்லாது அத்தெய்வங்கள் எழுந்தருளியுள்ள ஊர்ப்பெயரைக் கொண்டும் பாடப்பட்டவை. எடுத்துக்காட்டாக, மதுரைக் கலம்பகம், தில்லைக் கலம்பகம் முதலியன.

தமிழ் இலக்கியங்களில் கலம்பகம் என்னும் சிறு நூல் மிகுதியாக வழங்கப்படினும், கிறிஸ்துவ சமயத்தைச் சார்ந்த கலம்பக நூல் மிகச்சில. கிறிஸ்துவின் அன்னை கோயில் கொண்டுள்ள திருக்காவலூரைப் பற்றி விரமாமுனிவர் கலம்பகம் பாடியுள்ளது ஒரு சிலருக்கே தெரிந்திருக்கும். இவ்விலக்கிய நூலைப் படித்துச் சுவைத்துப் பயன் எய்துமாறு இதை வெளியிட்டுள்ளோம்.

இதற்குத் தெள்ளிய நடையில் உரை நடையெழுதி உதவிய திருச்சிராப்பள்ளிப் பேராசிரியர் எம். ரம்போலா மாஸ்கரேனஸ் M.A., அவர்களுக்கும், அணிந்துரை உதவிய அன்பர் திருமுறைக் கலைஞர் தி. பட்டுச்சாமி ஓதுவார் அவர்களுக்கும், அச்சேற்றுவதற்குப் பொருள் உதவிய தூத்துக்குடி - வேம்பாறு திரு. ஜே. எக்ஸ். கர்வாலோ அவர்களுக்கும், உழைப் உதவிய திரு. தம்பி ஐயா பர்னாந்து அவர் எங்கள் கழகத்தின் சார்பில் மிகுந்த நன்றி க.

1/75 } **தமிழ் இலக்கியக் கழகம்**

# அணிந்துரை

திருக்காவலூர்க் கலம்பகம் என்பது திருச்சிராப்பள்ளி மாவட்டம் அரியலூர் வட்டத்தில் கொள்ளிட நதியின் வட பகுதியில் திகழும் திருமானூரின் அண்மையில் உள்ள ஏலாக்குறிச்சி என்னும் சிற்றூரின் ஒரு பகுதியாக விளங்கும் திருக்காவலூரில் திருக்கோயில் கொண்டுள்ள அன்னை மரியாளின் பெருமைகள் அருஞ்செயல்கள் அருள்புரியும் திறங்கள் முதலியவற்றைப் புகழ்ந்துகூறும் நூலாகும். இது திருக்காவலூரைப் பற்றிய கலம்பகம் என விரியும். திருக்காவலூர் - இஃது ஒரு சிற்றூர்; இங்குள்ள திருக் கோயிலின் பெயருமாம்.

**கலம்பகம்**— இது 96 வகைப் பிரபந்தங்களுள் ஒன்று; புயம், தவம், பாண், அம்மானை, களி, இரங்கல், கைக்கிளை, மறம் முதலிய பதினெட்டு உறுப்புகளைத் தன்னகத்தே கொண்டு பற்பல வகையான பாக்களால் நடந்து, அந் தாதித் தொடை பெற்று அமைவது.

திருக்காவலூர்க் கலம்பகம், இத்தலிநாட்டில் தோன்றி அந்நாட்டு மொழிகளை நன்கு பயின்று சிறப்புடன் தமிழ் நாட்டிலே வந்து தமிழ் இலக்கியம், இலக்கணம், தருக்கம் முதலியவற்றைத் தக்காரிடம் செவ்விய முறையில் கற்று உணர்ந்து கவிபாடும் வல்லமை வாய்ந்த தைரியநாதர் எனவும் வீரமாமுனிவர் எனவும் இந்நாட்டில் பெயர் பெற்ற பெஸ்கி அடிகளார் இயற்றிய சிற்றிலக்கியங்களில் ஒன்றுகும். இந்நூல் கி. பி. 18ஆம் நூற்றுண்டின் இடைப் பகுதியில் தோன்றியது எனலாம்.

அடிகளார் இயற்றிய தேம்பாவணி என்
நூல்போலத் திருக்காவலூர்க் கலம்பகமும்,
யாளின் பெருமையினைக் கூறும் சிறந்த அருங்
அருஞ்செயல்கள் முதலியவற்றையும் அவற்றை

முதலிய சொல்லணிகளாலும், உவமை முதலிய பொருள் அணிகளாலும் பற்பல பாக்களாலும் சித்திரித்துச் செவ்விய நடையில் மிளிர்வது.

இத்தகைய செய்யுள் நூலுக்குப் பலர் உரை எழுதியிருப்பினும் அவை கற்றோர்க்கே மிகப் பயன்படுவன. யாவரும் எளிமையாகப் பொருள் உணர்ந்து நூலைப்பயில வேண்டும் என்ற நன்னோக்கத்தால் எனது நண்பரும் திருச்சிராப்பள்ளி - புனித சூசையப்பர் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவரும் தமிழகப் புலவர் குழு உறுப்பினரும், திருச்சிராப்பள்ளித் தமிழ்ச்சங்கத் துணை அமைச்சருமான திரு. எம். ரம்போலா மாஸ்கரேனஸ், எம். ஏ., அவர்கள் இந்நூலின் ஒவ்வொரு செய்யுளுக்கும் கீழே ஏற்ற தலைப்புகள் அமைத்துச் செவ்விய உரைநடையினைப் பாட்டின் பொருள் விளங்கத் தந்துள்ளார்கள். அவ்வுரை நடை ஆற்றொழுக்குப் போல் செல்லுவது; கருத்துகளை மனத்தில் எளிதில் பதியவைப்பது. இவ்வுரையினது நடைத்தெளிவு, ஆசிரியர் பற்பல நூல் பயின்ற திறத்தாலும் மாணவர்க்குப் போதிக்கும் ஆற்றலாலும் வாய்ந்த தெளிவே என்பது மிகையாகாது.

இந்நூல், சொற்சுவை பொருட்சுவை உரைநடை நோக்கு முதலியன பெற்று விளங்குவதால் தமிழ்ப் பற்றுடையார் அனைவரும் இதனைப் பெற்றுப் பயன் பெறுவார்களாக.

22, கீழவீதி
மலைக்கோட்டை,
திருச்சிராப்பள்ளி
9—11—'75

இங்ஙனம்
வித்துவான் தி. பட்டுச்சாமி ஓதுவார்
தமிழகப் புலவர் குழு உறுப்பினர்.

# முகவுரை

—

"தஞ்சாவூரை அடுத்து ஏலாக்குறிச்சி என்ற சிற்றூர் உண்டு. இதில் வசித்த கிறிஸ்தவர்கள் பஞ்சத்தால் நலிந்தனர். இவர்களுடைய துயரம் கண்ட சுவாமி வீரமாமுனிவர் சிந்தை நொந்தார். தேவதாயின் உதவியைத் தேடினார். அவ்வூரில் அன்னையின் பெயரால் ஓர் ஆலயம் அமைத்தார். அவள் தன் அருட்காவலில் அவ்வூரினரை ஒருங்கு திரட்டினார். அப்பகுதிக்கு அவர் அமைத்த பெயர் திருக்காவலூர். திருக்காவலூர் நாயகியின் புகழைக் கலம்பகத்தால் பாடினார். அது அடிகளார் நிறுவிய இலக்கியப் பூஞ்சோலை; கற்கோவிலைச் சுற்றி எழுந்த கலைப் பூங்கா.

பலவகை மலர்களும் கலந்து அமைவது கலம்பக மாலை. இதுவே பேச்சு வழக்கில் கதம்பம் ஆகிறது. பலவகைப் பொருளும் அகத்துறை புறத்துறை பலவும் பலவகை யாப்பும் விரவிக் கலந்து வருவது கலம்பகம்.

நந்திக்கலம்பகம், குமரகுருபரர் இயற்றிய மதுரைக் கலம்பகம், எல்லப்ப நாவலர் செய்த அருணைக் கலம்பகம், இன்னவர் பாடினார் என்று அறியப்பெறாத அழகர் கலம்பகம் கலம்பகங்களில் புகழ் படைத்தவை. இக்கலம்பகங்களில் நயம், சொற்சுவை, இசை இன்பம், பொருட் பொலிவு திருக்காவலூர்க் கலம்பகத்திலும் தோய்ந்துள்ளமை காணலாம். இது தேவ அன்னையின் பெருமையைத் தெரிந்துரைப்பது. வேத நெறி ஒழுகி, மேற்கதி பெறுவதற்குக் கருவி நூலாய் அமைவது. இனி, இக் கலம்பக மலர்ச் சோலைக்குப் போவோம்."

இவ்வாறு 1949ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சத்திய போதினி வாசகர்களுக்கு அழைப்பு விடுத்து, அத்திங்கள் தொடங்கி 1951ஆம் ஆண்டு மே மாதம் ஈருகத் திங்கள் தோறும் வாசகர்களைத் திருக்காவலூர்க் கலம்பக மலர்ச்

சோலைக்கு இட்டுச்சென்று அங்கே கலம்பக விளக்கத்தைக் காணவும் காட்டவும் எனக்கு ஒரு வாய்ப்பு அமைந்திருந் தது. அக்காலத்தில் திருக்காவலூர்க் கலம்பகத்தையும் அதன் விளக்கத்தையும் நூலாக வெளியிடும் கருத்து எனக்கு ஏற்படவில்லை. என் விளக்கத்திற்கு நான் பயன் படுத்திக்கொண்ட அருளப்ப நாவலர் உரையுடன் அந்நூல் வெளிவரவேண்டும் என்ற ஆசை எனக்கிருந்ததைப் போலவே சில அன்பர்களுக்கும் இருந்ததை நான் அறி வேன். எக்காரணம் பற்றியோ அந்த எண்ணம் செயல்பட வில்லை. காலப்போக்கில் நாவலர் உரைநூல் கிடைப்பதும் அரிதாயிற்று.

வீரமாமுனிவரிடத்தும் திருக்காவலூர்த் தலத்திடத் தும் பெரிதும் நேயங்கொண்டிருப்பவரும் அடைக்கல அன்னையின் பக்தரும் தமிழ்ப்பற்று உடையவருமான தூத்துக்குடி-வேம்பாறு திரு. தம்பி ஐயா பர்னாந்து அவர் கள் திருக்காவலூர்க் கலம்பகம் வெளிவருதல் வேண்டும் என்பதில் கடந்த சில ஆண்டுகளாக அழுத்தமான விருப் பம் தெரிவித்து வந்தார்கள். அதற்கான செலவுகளையும் ஏற்றுக்கொள்ளும் ஏற்பாடுகளுடன் தமிழ் இலக்கியக் கழகச் செயலாளரைத் தூண்டி அந்நூல் வெளிவருவதற் கென விரைந்த முயற்சியில் ஈடுபட்டார்கள். திரு. தம்பி ஐயா பர்னாந்து அவர்களின் ஊக்கமும் திரு. ஜே. எக்ஸ். கர்வாலோ அவர்களின் பொருள் உதவியும் இந்நூலும் உரையும் வெளிவருவதற்கு அடிகோலின.

மன்றங்கள் அமைத்து வீரமாமுனிவர் ஆக்கிய நூல் களை எல்லாம் மறுபதிப்பாகக் கொணர்வதும், ஆராய்ச்சி நூல்களை வெளியிடுவதும் ஆகிய ஆக்கப் பணிகள் மேற் கொள்ளப்பெறும் இக்காலத்தில் தமிழ் வளர்த்த தவச் செல்வரின் மூன்றாம் நூற்றாண்டு விழாவின் முன்னோட்ட மாக மதுரை, புனித மரியன்னை உயர்நிலைப்பள்ளியில் கொண்டா டப்பெறும் நல்விழாவில் பூத்த புதுமலராகத் திருக்காவ லூர்க் கலம்பகம் மூலமும் உரையும் அரும்புவது பெரி தும் பொருத்தமுடையதாகின்றது.

இருள்வீற் றிருக்கும் நிழற்பூங்கா
இடைபூண் காவல் ஊரகத்தே
பொருள்வீற் றிருக்கும் திருக்கோயில்
பொன்னு சனத்தின் பொலிந்தாளும்
மருள்வீற் றிருக்கும் மணிமார்பின்
அணங்கைப் பாடி அடிபணிந்தான்
தெருள்வீற் றிருக்கும் மெய்ச்சுருதி
தெளிக்கும் வீர மாமுனியே

என்ற மாணுக்கனின் சிறப்புப் பாயிரத்துடன் நிறைவுறு கின்ற திருக்காவலூர்க் கலம்பகத்தைப் பதவுரை பொழிப்புரை அடிக்குறிப்புகளுடன் தஞ்சை அருளப்ப நாவலர் அவர்கள் சென்னப்பட்டணம் தத்துவபோதினி அச்சுக் கூடத்தில் 1872ஆம்ஆண்டு பதிப்பித்து வெளியிட்டுள்ளார்கள்.

இப்பதிப்பில் சில சாத்துக்கவிகள் இருக்கின்றன. அவற்றுள்புதுச்சேரிப் பாவலர் சவராயலுநாயகர் சொல்லியுள்ளவை வருமாறு :

தெருளப்பார் கடலுலகில் சிறந்தமா
வீரமுனி செய்த வேதப்
பொருளப்பார் கலம்பகத்தில் புதைபொருள்யா
தென்றெருவர் புகன்றல் வாணர்
மருளப்பா முடியாதென் றிசைப்பதைக்கண்
டுரையதற்கு வழுவி லாமால்
அருளப்பா அருளப்பா என்றமலன்
இவனை இவண் அனுப்பி னனே.

பார்மணக்கும் புலவர்பிரான் எனும்வீர
மாமுனிவர் பகர்ந்த வேதச்
சீர்மணக்கும் கலம்பகத்துக் கிலங்குமலங்
காரவுரை செய்தான் வாசத்
தார்மணக்கும் திண்புயனந் தஞ்சைஅருள்
அப்பனெனும் தமிழ்ப்பா வாணன்
ஏர்மணக்கும் பிள்ளைமுத்துப் பிள்ளைமான்
அஃதையச்சில் ஏற்றி னனே,

உரையாசிரியர்கள் **ம. ஆரோக்கியசாமி,** எம். ஏ., **அ. திரவியம்,** எம். ஏ., **புலவர் பி. மரியதாசு** ஆகியவர்களின் கூட்டு முயற்சியாலும், கும்பகோணம் ஆயர் **பேரருட் திரு. பவுல் அருள்சாமி** ஆண்டகையவர்களின் தூண்டுதலாலும் தாராளக் கொடையாலும் அண்மையில் திருக்காவலூர்க் கலம்பகம் மூலமும் விரிவுரையுமாக மலர்ந்துள்ளது.

செய்யுள் வடிவத்தை சிதைக்காமலும், பாட்டைப் பயின்றதும் பொருளைத் தெரிந்து கொள்ளும் முறையாகவும், ஏற்ற தலைப்புகளுடன் திருக்காவலூர்க் கலம்பகம் மூலமும் பொழிப்புமாக எம்பதிப்பு வெளிவருகின்றது.

திருக்காவலூர் நிறுவிய தேசிகரும், நமக்கும் ஒரு பாடல் பெற்ற தலத்தைப் பாங்குற அமைத்த பெருமகனுமான வீரமாமுனிவரின் ஈர நெஞ்சினை நினைந்து நினைந்து அவரியற்றிய கலம்பகத்தில் நனைந்து நனைந்து அருள் வீற்றிருக்கும் அன்னையைப் பாடும் பணியில் திளைத்துப் பயன்பெறுவோமாக.

திருச்சிராப்பள்ளி,
9—11—1975

ரம்போலா மாஸ்கரேனஸ்


# வீரமாமுனிவர் வரலாறு

விழுமிய செந்தமிழ் வித்தகராகிய வீரமாமுனிவர் இத்தலி நாட்டில் 1680ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8 ஆம் நாள் பிறந்து இந்நாடு 1711ஆம் ஆண்டு போந்து 1747 ஆம் ஆண்டு வரை இயேசு சமயத் தொண்டாற்றிய சீரியர் ஆவர். இவர் தாய்நாடு துறந்து, தமிழ்நாட்டில் இறந்து தமிழ்மொழியையே தம்மொழியாகவும் தமிழ் நாட்டையே தம் நாடாகவும் கொண்டவர்.

முதல் முதலாய்ச் சமயத் தொண்டாற்றி திருச்சபையை நிறுவுவதற்கண் முனைந்து நின்ற வீரமாமுனிவர் மணப்பாட்டிலும் தூத்துக்குடியிலும் தம் பணியைத் தொடங்கினார். கயத்தாற்றிலும் குருக்கள்பட்டியிலும் கடும்பாடுகளுக்கிடையில் தம் கடமைகளை நிறைவேற்றினார். அதன்பின் விருத்தாசலத்திற்கு அருகே கோனான்பட்டியில் பங்கு விசாரணைக் குருவானார். அங்கே கோயில் கொண்டெழுந்தருளிய மாதாவிற்கு பெரியநாயகி எனும் திருப்பெயர் புனைந்தார். அவ்வம்மையின் பக்தியைப் பரப்பினார். ஒருவாறு அல்லலின் நீங்கி அமைதியுற்ற வீரமாமுனிவர் அருந்தமிழை இறையருளால் அமைவுறக் கற்றார். தேம்பாவணியாம் திருக்காப்பியம் ஆரியநல்லூரில் செய்தருளினார்.

சின்னாள் பின்னர் தைரியநாதர் தொண்டைமான் நாட்டிலுள்ள ஆவூர்க் கிறிஸ்துவர்களைச் சந்தித்தார். மகமதியர்களால் அவர்களுற்ற இன்னல்களை விலக்கினார். சந்தாசாகிபின் நட்பையும் நன்மதிப்பையும் பெற்றார் அவரது உதவியால் கிறிஸ்துவர்களின் தொல்லைகளை நீக்கினார். அவரராலும் முனிவர் பாராட்டப் பெற்றார்.

பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னரால் திருச்சபைக் கிறிஸ்துவர்கள் பெரிதும் தீங்குறுவார் ஆயினர். அவ்வ



மதுரையில் உள்ள ஓவியத்தை முன்வைத்து
பம்பாய் ஓவியர் **ஒலிம்பியோ ராட்ரிக்ஸ்** அவர்களால்
தீட்டப்பெற்ற சித்திரம்
நன்றி : அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

மயம் வீரமாமுனிவர் அப்பகுதியிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு உதவி செய்யப்போந்தார். மராட்டியரது நாட்டிற்கு எல்லையாயமைந்த கொள்ளிடம் நதியின் வடபாலுள்ள ஏலாக்குறிச்சியில் ஒரு பகுதியை மதுரை நாயக்க மன்னன் கீழ், சிற்றரசனுக விளங்கிய மழவராயனிடமிருந்து நன்கொடையாகப் பெற்ருர். அங்கே அடைக்கல அன்னையின் திருக்கோவிலே அமைத்தார். நதியின் எதிர்ப்புறம் ஒரு மடமும் கட்டினர். அவ்விடத்திற்கெல்லாம் திருக்காவலூர் என்னும் பெயரைச் சூட்டினர். முனிவர் ஈண்டுப்பல ஆண்டு திருப்பணியாற்றினர். ஆரா அன்புடையவராய் அடைக்கல மாதாவின் மேல் திருக்காவலூர்க் கலம்பகம் என்னும் சிற்றிலக்கியத்தைப் புகழ்மாலையாகச் சாற்றினர்.

வீரமாமுனிவரின் பக்திப் பெருமையால் அடைக்கல மாதாவின் கோயிலாம் திருக்காவலூர்க் கோவிலில் புனித கித்தேரி அம்மாளின் அருள் திறமும் விளங்குவதாயிற்று. அன்னவளை அம்மானை பாடித் துதித்தார்.

இவ்வாறு செந்தமிழ்ச் செல்வமும் திருமறைச்செல்வமும் இந்நாட்டில் தழைத்தோங்குமாறு முனிவர் ஆற்றிய பணிகள் பலப்பல.

முனிவர் இயற்றிய தேம்பாவணி இவர் தம் பெயர் சார்ந்த புனித சூசையப்பர் என்னும் வளனரின் வாழ்க்கையை விரித்துரைக்கும் பெருங்காப்பியமாகும். வேதியர் ஒழுக்கம் உயர்தர உரைநடை நூலாகும். நிகண்டு முதலியன கற்க இயலாதவர்க்குப் பேருதவியாக இருக்கச் சதுரகராதியை இயற்றித் தந்தவர் வீரமாமுனிவர். ஐந்திலக்கணங்களைத் தொன்னூல் எனப் பெயரிட்டு செய்யுளில் இயற்றி அதற்குத் தாமே உரையும் எழுதியுள்ளார். அன்னை அழுங்கல் அந்தாதி, கித்தேரியம்மாள் அம்மானை முதலியவை இவர் இயற்றிய ஏனைய சிற்றிலக்கியங்களாம். பரமார்த்தகுரு கதை வீரமாமுனிவர் தமிழுக்குத் தந்த முதற் சிறுகதையாகும். செந்தமிழ் இலக்கணம், கொடுந்

தமிழ் இலக்கணம், போர்த்துக்கீசுத் தமிழ் அகராதி, இலத்தீன் தமிழ் அகராதி முதலிய மொழியாக்க நூல்கள் இயற்றிய வீரமாமுனிவர், மருத்துவத்துறையிலும் சில நூல்களை இயற்றித் தந்தார் என்பர். வீரமாமுனிவரின் மருந்துகளாக இன்றைக்கும் சில வழக்கில் இருப்பன நாம் அறிவோம்.

தொடக்க காலத்தில் சில ஆண்டுகள் . வேம்பாறு பங்கு விசாரணையையும் மேற்கொண்டிருந்த வீரமாமுனிவர் தம் வாழ்க்கையின் இறுதிக் கட்டத்தில் 1743 ஆம் ஆண்டில் வேம்பாற்றிற்கு இரு முறை வருகை தந்துள்ளார். இதைப் போலவே இவர்தம் இறுதிக்காலப் பணியை மதிக்கத் தக்க அளவிலே பெற்ற இடங்கள் தூத்துக்குடி, மணப்பாடு, அம்பலக்காடு முதலியனவாம்.



ஏலாக்குறிச்சி-திருக்காவலூர் - அடைக்கல அன்னை

# திருக்காவலூர்க் கோவில்*

## திருக்கோவில்

காவிரியாற்றின் வடகரையில், நறுமணங் கமழும் பூஞ் சோலையின் நடுவே, திருக்காவலூர்க் கோவில் அமைந்துள் ளது. அங்குள்ள அடைக்கல மாதா, கதிரொளி திகழும் கலையுடுத்து, மின்னுர் முடி புனைந்து, அங்கையில் செபமாலை தாங்கி, கருணை பொழியும் கண்களோடு வடதிசை நோக்கி நின்று காட்சி தருகின்றுள்.

"திருக்காவ லூரகத்துத்
திகழொளிவாய் மணிக்கோயில்
அருட்காவல் இயற்றிநமை
அளிப்பதுநின் தயையாமோ"

என்று அம்மாதாவை முனிவர் பாடித் தொழுதார்.

## கருணையின் சின்னம்

அன்பினுல் அகம் குழைந்து வழிபடும் அடியார்க்கு இறைவன் இரங்கி அருள் புரியும் கொள்கையை அடைக் கல மாதாவின் திருக்கரத்தில் அமைந்த செபமாலை தெளி வுறக் காட்டுவதாகும். அதைக் கண்டு இன்புற்ற அடியார்கள், "மண்ணவரை மேலேற்ற விண்ணவர் விடுத்த மணிவடமோ! அல்லல் விளைக்கும் வல்வினையை அறுத்தொழிக்கும் அரும் படையோ! ஆதரித்து அழைக்கும் அடியவரை அருளாற் பிணிக்கும் அருந் தளையோ" என்று வியந்து போற்றுவராயினர்.

---

★ டாக்டர் சேதுப்பிள்ளையவர்களின் திருக்காவலூர்க் கோவில் என்ற நூலை ஆதாரமாகக் கொண்டு திரட்டப் பெற்ற செய்திகள். இவற்றைத் தொகுத்தவர் திரு. தம்பி ஐயா பர்ஞந்து அவர்கள்.

## மாதாவின் அருள்

இவ்வாறு அருட்கோலம் கொண்டு எழுந்தருளிய அடைக்கல மாதா கண்ணினைக் காக்கும் இமைபோல் திருக்காவலூரைக் காத்து வந்தாள். ஒரு நாள் அவ் வூரின் ஒரு சாரமைந்த ஓலை வீடுகளில் தீப்பற்றிக் கொண்டது. அப்பொழுது அங்கு வீசிய நெடுங்காற்று அச் சிறு நெருப்பைப் பெரு நெருப்பாய் வளர்த்தது. காற்றினால் ஊற்றமுற்றெழுந்த கொடுங்கனல் எங்கும் பொறி வீசி ஏழையர் வீடுகளை எரிக்கத் தொடங்கிற்று. காற்றும் கனலும் கலந்து கேடிழைக்கக் கண்ட அவ்வூர்க் கிறிஸ்தவர்கள் செய்வதொன்றறியாது அற்றார்க்கு அபய மளிக்கும் அடைக்கல மாதாவைத் தொழுது பாடினார்கள்.

"நதிவழங்கு காவலூர்ப் பதிவழங்கு காவலே
நன்னையாக முன்னையாள் என்னையாளு மன்னையே"

என்று தொண்டரனைவரும் சேர்ந்து அழுது இசைத்த தொழுகுரல் நாற்றிசையும் பரந்தொலித்தது. அந் நிலையில் கண்டோர் வியப்புறக் காற்றின் வேகம் குறைந் தது. கனலின் வெம்மையும் தணிந்தது. அடைக்கல மாதாவை நம்பித் தொழுத அடியவர் குடிசைகள் நெருப்பிற்கு இரையாகாமல் நின்றன. அப் புதுமையைக் கண்ட பிற சமயத்தவரும் காவலூர் அன்னையின் பெருமை யறிந்து காணிக்கை செலுத்தத் தொடங்கினர்.

## இடுக்கண் தீர்த்த அடைக்கல மாதா

இவ்வாறாக அடைக்கல மாதா வழிபாடு பரவி வருங்கால் ஒரு நாள் காவலூர்க் கோவிலைச் சார்ந்த நந்த வனத்தில் ஒரு பசு நுழைந்து ஆங்கமைந்த பூஞ்செடி களையும் கொடிகளையும் மிதித்துச் சிதைத்து அழித்தது. பூஞ்சோலைக் காவலாளன் பசுவின் செயல் கண்டு ஆற்றாது பெருங் கழியால் அதனை நையப்புடைத்தான். அடியுண்ட பசு அருகேயிருந்த அருவியில் ஓடி விழுந்து உயிர் துறந்தது. காட்டில் இறந்து கிடந்த பசுவினைச்

கண்டு பதைத்தெழுந்த இந்து நேயர் பழிக்குப் பழி வாங்க முனைந்து நின்றார்; 'காவலூர்க் கோவில் வேதியனே பசுக் கொலை புரிந்த பாதகன்' என்று எங்கும் பறை சாற்றினர்; கன்றை இழந்து அலறிய ஒரு பசுவின் துயர்கண்டு தரியாது அருமருந்தனய அரசிளங் குமரனை முறை செய்து அறநெறியை ஆதரித்த வளவன் ஆண்ட சோழ நாட்டில் இவ்வன்கொடுமை நேர்ந்ததே என்று ஏங்கினர். அப்பொழுது அரியலூர் குறுநில மன்னன் அவ்வழியாகக் காட்டுக்கு வேட்டையாடச் சென்றான். காவலனைக் கண்ட ஊரார் கதித்தெழுந்து, அவன் அடிகளில் வீழ்ந்து நிகழ்ந்த தீமையை முறையிட்டார்; பசுக்கொலை புரியும் பாதகரை நாட்டினின்று ஓட்டிவிடல் வேண்டுமென்று மன்னனை நயந்து வேண்டினர்; அடியுண்டிறந்த பசுவினை அடவியினின்றும் எடுத்து வந்து அவன் முன்னே இட்டார். பசுவின் நிலை கண்ட காவலன் மனம் பதைத்தான். ஆயினும், காவலூர்க் கோவில் வேதியனே அதனைக் கொலை புரிந்தானென்று துணிதற்குரிய சான்று கிடையாமையால், ஊரார் கோபத்தை ஒருவாறு ஆற்றிச் சென்றான். காவலூர் மாந்தர் சீற்றத்தால் என்ன நேருமோ என்று அஞ்சியிருந்த திருச்சபைத் தொண்டர்கள் மலையென வந்த இடரைப் பனியெனத் துடைத்த அடைக்கல மாதாவின் அருள் நினைந்து மனமாரத் தொழுதார்கள்.

காவலூரிற் கோவில் கொண்டருளிய அடைக்கல மாதாவின் பெருமை நாற்றிசையும் பரவி வருதலை அறிந்த தரங்கம்பாடித் தேனிய சபையார் (Danish Missionaries) உருவ வழிபாட்டுக் கொள்கையை மறுத்துப் பொது மக்கள் மனத்தில் பெருங் குழப்பத்தை விளைக்கத் தலைப்பட்டார்கள்; "கிறிஸ்தவர்கள் தேவமாதாவின் உருவத்தையும், இயேசு நாதர் வடிவத்தையும், சிலுவையாகிய சின்னங்களையும் வணங்குதல் அஞ்ஞானம்" என்றார்கள். இங்ஙனம் தொன்மை சான்ற திருச்சபையின் கொள்கையை மறுத்துரைத்த தேனிய சபையார்க்கு வீரமா

முனிவர் 'வேத விளக்கம்' என்னும் நூலின் வாயிலாக மாற்றம் உரைத்தார்.

## தரங்கம்பாடித் தேனிய சபை

திருக்காவலூரில் வீரமாமுனிவர் எடுத்த அடைக்கல மாதா வழிபாட்டை இகழ்ந்துரைத்த தேனிய சபையார், தஞ்சையில் அரசுபுரிந்த மராட்டிய மன்னரின் ஆதரவு பெறுதற்குப் பெரிதும் முயன்றார்கள். அம்மன்னரது அன்பினைப் பெறுதற்குரிய வாய்ப்பும் காலத்திற் கிடைத்தது. சரபோஜி மன்னன் மேனியில் பெரும் பிளவை யொன்று புறப்பட்டது. அப்பிணியின் கொடுமைக்காற்றாது நெடுநாள் மன்னன் நலிவுற்றான். அரண்மனை மருத்துவர் அனைவரும் கைவிட்டார். அந்நிலையில் தென்மார்க்கு தேசத்தில் சிறந்த மருத்துவராய்த் திகழ்ந்த காசிபரை வருவித்துப் பார்த்தால் கடுநோய் தீர்ந்தொழியு மென்று தேனிய சபையார் அம்மன்னனிடம் தெரிவித்தார்கள். அம்மருத்துவரை விரைவில் வரவழைக்கப் பணித்தான் அரசன். அப்பணி தலைமேற்கொண்ட தேனிய சபையார் தென்மார்க்கு மன்னனுக்குத் திருமுகம் விடுத்தார். அம்மன்னன் காசிபரை உடனே அனுப்புவித்தான். காசிபர் தரங்கம்பாடித் துறையில் வந்தடைந்தாரென்று கேள்வியுற்ற தஞ்சை மன்னன் அவரைத் தக்க சிறப்புடன் அழைத்து வருமாறு தன் பரிவாரங்களை அனுப்பினான். அரச விருதுகளோடு அழகிய பரிகளும் கரிகளும் எழுந்து வரக்கண்ட தேனிய சபையார் மனம் தழைத்தார். காவலூர்த் திருச்சபையைச் சேர்ந்தோர் மனம் வாடி வருந்தினர். முன்னரே இயேசு சமயத் தொண்டரை முற்றும் வெறுத்த தஞ்சை மன்னன் தேனிய சபையின் சார்பாக வந்த மருத்துவருதவியால் பிணி தீர்ந்து எழுந்த பின்பு திருச்சபைக்கு என்ன தீங்குகள் செய்வானோ என்று ஏங்கி மயங்கினர். எனினும் "ஒன்றை நினைக்கின் அதுவொழிந் திட்டொன்றாகும்" என்னும் முதுமொழிக் கிணங்க காசிபர் தரங்கம்பாடியினின்று தஞ்சைக்குப் புறப்படக் குறித்திருந்த நாளில் பிணிவாய்ப்பட்டுப் படுத்தார்; மறுநாள் உயிர்

விடுத்தார். தேனிய சபையார் அருமணி இழந்த நாகம் போல் ஆருத் துயருற்ருர்; மராட்டிய மன்னைது ஆதரவைப் பெறுவதற்குப் பட்ட பாடெல்லாம் பாழாயிற்றென்று மனம் பதைத்தார். கவலை தீர்ந்த காவலூர்த் திருச்சபையார், கண்ணினைக் காக்கின்ற இமையிற் காக்கும் காவலூர் அன்னையின் கருணையை நினைந்து மனமார வாழ்த்தினர்.

காவலூர் மாதாவின் அருளால் கவலை நீங்கிய அடியார்கள் நாள்தோறும் நறுமலரும் தூபமும் சாந்தமும் கொண்டு அம்மாதாவைப் போற்றினர்கள். அடைக்கல மாதா எழுந்தருளியிருந்த பூஞ்சோலை கருதிய நலமெலாம் கனிந்தளிக்கும் கற்பகச் சோலையாக விளங்கிற்று. நல்லருள் தளிர்ப்ப, ஞான நிழல் குளிர்ப்ப, வரம் அரும்ப, சீர்மை கனிய நின்றது அச்செழுஞ் சோலை.

### முனிவர் ஆர்வம்

அப்பூஞ்சோலை விரிந்த நறுமலர்களில் அமர்ந்து தேனுண்டு பண்ணுர்ந்த பாட்டிசைத்த வண்டுகளைக் கண்டு மகிழ்ந்த முனிவர் தாமும் அடைக்கல மாதாவின் கண்ணியில் வண்டாக ஊர்ந்து, அன்னையின் கருணைத் தேன் பருகித் தண்டமிழ் பாட்டிசைக்கும் பேறு பெற விரும்பினர். புரை தீர்ந்த காவலூர்ப் பூம்பொழிலிற் புல்லாய்க் கிடந்து, மெய்யடியார் திருவடிப் பரிசம் பெற்றுப் பண்புற ஆசைப்பட்டார். திருக்காவலூர் அன்னை, பாவத் தீயினை ஆற்றுவாள்; மறை நூலினைத் தேற்றுவாள்; உயிர்ப்பிணியினை மாற்றுவாள் என்று முனிவர் போற்றி உரைத்தார்.

### அடியார் வழிபாடு

இத்தகைய அடைக்கல மாதாவை வழிபடப் போந்த அடியார்கள் அவ்வன்னையின் கருணையைப் பாட்டாலும் உரையாலும் பரவிப் போற்றுவாராயினர். அன்பர்கள் பாடிய பாடல்களை நாள்தோறும் கேட்டிருந்த சோலைக் கிளிகள் தாமும் அம்மொழிகளை மிழற்றி மகிழ்ந்தன. செவ்

வாய்ச் சிறு கிளிகள் பசுந் தழைகளினிடையே மறைந்து நின்று "காவலூர்த் தாயே! காத்தருள் வாயே" என்றும், "கன்னித் தாயே! கருணை செய்வாயே" என்றும் பவழ வாய் திறந்து பேசும்பொழுது அச் சோலையில் வைகும் அடியார்கள் ஐந்து பேரறிவும் செவிகளே கொள்ள ஆனந்த பரவச மடைந்திருப்பர்.

கல் நெஞ்சையும் உருக்கும் காவலூர்த் தாயின் கருணையாலும், மறத்துறை நீங்கிய மாதவர் அருளாலும் காவலூர்ச் சோலையில் வாழ்ந்த உயிர்களெல்லாம் பிணக்கம் நீங்கி இணக்கமுற்று வாழ்ந்தன. அச்சோலையில் மகிழ்ந்து நடமாடும் அன்னங்கள் மெல்லியல் அடியார் நடைகண்டு உள்ளழிந்து ஒதுங்கி ஓடுவதில்லை. கீதம் பாடும் குயில்கள் அடியார்கள் பண்ணொடு பாடும் பாட்டொலி கேட்டுப் பறந்தோடுவதில்லை. மரக் கொம்பினின்று உதிர்ந்த கனிகளை வீசியெறிந்து விளையாடும் அணிற் பிள்ளைகள் வேட்டை நாய்களின் நாட்டங்கண்டு வெருண்டு மரங்களில் ஏறி மறைவதில்லை.

பருந்தும் கிளியும்

இவ்வாறு இன்னுயிர்கள் அச்சமின்றி உயிர் வாழ்ந்த அச்சோலையில் ஒரு நாள் வேற்றூர்ப் பருந்தொன்று விரைந்து புகுந்து ஒரு பசுங் கிளியைக் காலினுற் கவர்ந்தெடுத்துப் பறந்தது. அறநெறி துறந்த பருந்தின் வசப்பட்டுப் பதறிய அஞ்சொற் கிள்ளை நடுங்கிய குரலால் "அன்னை மரியம்மையே! உன்னடைக்கலம்" என்று ஓலமிட்டது. அந்நிலையில் மறத்துறை மேவிய பருந்து தன் சிறகின் இயக்கமிழந்து காற்றேய்ந்த நிலையில் தலை கவிழ்ந்து விழும் காற்றாடி போன்று தரையிடை மயங்கி வீழ்ந்தது. அப்பொழுது அதன் கால்களில் அகப்பட்டிருந்த பசுங்கிளி விடுபட்டு, நடுக்கந் தீர்ந்து, பறந்து எழுந்தோடி, மரியம்மையின் திருவடியிலமர்ந்து, இன்னுயிர் காத்த அன்னாய்! போற்றி! பருந்தை மடக்கிய பாவாய்! போற்றி! அபயமளித்த அழிந்தாய்! போற்றி! என்று ஞானத்தால் நன்மொழி பகர்ந்தது.

**பேய்க் காணி**

நீர்வளம் பொருந்திய காவலூர்ப் பகுதியில் ஒரு காணி நிலம் நெடுங்காலமாக எருக்கும் குருக்கும் முளைத்துப் பாழ் நிலமாய்க் கிடந்தது. அதனைச் சுற்றியிருந்த வயல்கள், பசும் பயிரின் முகங்காட்டி இருபூவும் தவறாது செந்நெல் விளைத்தன. பாழாய்க் கிடந்த நிலத்தை அணுகவும் அஞ்சினர் உழவர். அந்நிலம் கடுஞ்சினமுற்ற ஒரு கூளியின் ஆளுகையில் அமைந்திருந்ததென்றும், அக்காணியில் ஏர்பூட்டி யுழுவோர் அப்பேயின் சீற்றத்திற்கு ஆளாவரென்றும் ஊரார் எண்ணியிருந்தனர். ஆயினும் மனத் திண்மை வாய்ந்த உழவன் ஒருவன் அப்பேய்க் காணியிற் பயிர்செய்யத் துணிந்து, அதன்கண் அடர்ந்து வளர்ந்திருந்த செடிகொடிகளைக் களைந்தெறிந்து நாலேர் பூட்டி உழுதான். அவன் துணிவினைக் கண்ட காவலூர்ப் பொது மக்கள், "ஒருவன் செய்யும் தவறு காரணமாக ஊரார்க்கு என்ன தீமை நேருமோ?" என்று ஏங்கி நடுங்கி நின்றார்.

**பயிரிட்டவன் பாடு**

நாற்று முடி திருந்தித் தழைத்தோங்கி வளரக் கண்டு அவ்வுழவன் மனந் தழைத்தான். அக்கம் பக்கங்களிலிருந்த நெற்பயிர்களினும் பேய்க்காணிப் பயிர் செழிப்புற்றிருக்கக் கண்டு ஊரார் ஐயமுற்றார். 'அஞ்சினவர்க்கே வெஞ்சினப் பேய்' என்றறைந்தான் ஒருவன். 'அஞ்சாதார்க்குச் சஞ்சலமில்லை' என்று பல்லவி பாடினன் மற்றொருவன். 'வினையை விதைத்தவன் வினையை அறுப்பான்' என்று விளம்பினன் ஒரு கிழவன். "காவலூரில் ஒன்ற வந்த மாதா, ஊர்ப்பேயை ஓட்டிற்றோ?" என்று வினவினன் ஒருவன். இவ்வாறு பலர் பலவாறாக எண்ணியும் பேசியும் வருகையில் அறுவடைக் காலம் வந்தடைந்தது. நல்ல நாளும் பொழுதும் பார்த்து, பேய்க்காணிப் பயிருக்குரியவனாய் உழவன் நாட்கதிர் கொண்டான்; அக் கதிரில் உருவி எடுத்த சில நெல்லைத் தன் மனையாளிடம் கொடுத்தான். கணவன் பாடுபட்டுத்

தேடிய புது நெல்லின் அரிசியைத் தன் மனத்தில் நிறைந்திருந்த அன்பொடு கலந்து அம்மாது நல்விருந்தாக்கியிட்டாள். அமுதுண்டு மகிழ்ந்த உழவன் வெளித் திண்ணையிற் சாய்ந்து கண்ணயர்ந்து உறங்கினன். கணவன் மனமார உண்டு சென்ற பின்பு எஞ்சிய உணவை அருந்திப் பரிகலம் திருத்திப் பாடு பார்த்திருந்த மனையாளும் மாலைப் பொழுதில் மயக்கமுற்றுக் குடிசையினுள்ளே படுத்தாள். அன்று அறுத்துவந்த கதிர்களின் தாள்களைப் பழைய வைக்கோலுடன் கலந்து தின்ற காளைகளும் தொழுவத்திற் படுத்தன. கதிரவன் மறைந்தான். காவலூர் மனைதொறும் மாதர் மணிவிளக் கேற்றிப் பூவும் பொரியும் தூவித் தெய்வம் தொழுதார்கள். நாட்கதிர் கொண்ட உழவன் மனையைக் காரிருள் சூழ்ந்து நின்றது. என்றும் கலகலப்பாய் விளங்கும் அம்மனை அன்று பொழுதடைந்து நெடுநேரமாகியும், ஒளியும் ஒலியுமின்றி அமைதியுற்றிருக்கக் கண்ட அயல் விட்டார் கைவிளக்குகளை எடுத்து வந்தார்; வெளித்திண்ணையிலும் வீட்டினுள்ளும் அசைவின்றிக் கிடந்த உழவனையும் அவன் மனைவியையும் விளக்கொளியில் உற்று நோக்கினர்; இருவர் முகங்களிலும் மரணக்குறி கண்டு அலறி அழுதார்; உழவனும் அவன் மனைவியும் இறந்தாரென்னும் செய்தி காவலூர் முற்றும் விரைவில் பரவியது. ஊரார் திரண்டுபோந்து வீடு முற்றும் சுற்றிப் பார்க்கையில் உழவனுக்குரிய காளைகளும் கால் பரப்பி இறந்து கிடக்கக் கண்டார்கள். பேய்க் காணியைப் பயிரிட்டதனுலேயே உழவன் குடும்ப மடங்கலும் இறந்து பட்டதென்று ஊரார் இரக்கமும் அச்சமும் எய்தினர். அந்நிகழ்ச்சிக்குப் பின்பு பேய்க் காணியைக் குறித்துப் பேசவும் அஞ்சினர் அவ்வூரார். அக் காணியில் விளைந்த நெல் அறுப்பாரின்றி உதிர்ந்தழிந்தது. அன்று முதல் அவ்வயலின் அருகே செல்வார் எவருமில்லை.

### அடைக்கலக் காணி

இவ்வாறிருக்கையில், காவலூர் அடைக்கல மாதாவின் அடித்தொண்டராய அன்பர் சிலர், குறும்பிழைக்கும்

கூலியை ஒறுக்கும் திறம்வாய்ந்த அன்னையின் அருட்டுணை கொண்டு அவள் பெயரால் அப்பேய்க் காணியை உழுது பண்படுத்தத் துணிந்தார்கள். கிறிஸ்தவர் அல்லாதவர்கள் மறைவாகத் தமக்குள்ளே பல பேசி முன் உயிரிழந்த உழவன் கதியே இவர்க்கும் நேருமென்று உறுதி கொண்டிருந்தார்கள். பருவத்தில் பண்படுத்தி, இயேசு சமயத்தை நேசித்த பள்ளியர்கள் தொளியில் நாற்று முடியை நட்டுக் கரையேறினார்கள். இளம் பள்ளியர் நேராகத் தத்தம் மனை நோக்கிச் சென்றனர். முதியவளாய ஒரு பள்ளி நாள் முழுதும் வேலை செய்த களைப்பினால் அக்காணி யினருகே நின்ற பெருமரத்தடியில் படுத்துறங்கினாள். அப்பொழுது கறுத்து வற்றிய யாக்கையும், கழன்ற பசுங் கண்ணும், தயிர் மத்துப்போன்ற தலையும், சுரை வித்துப்போன்ற பல்லுமுடைய ஒரு கோரவடிவம் அவ முன்னே தோன்றித் தன் காணியில் பயிரிடத் துணிந்தவரை ஒறுத்து அழிப்பதாக வஞ்சினம் கூறி அச்சுறுத்தியது. மெய் சோர்ந்த நிலையிலும் மரியம்மாளிடம் வைத்த மனம் சோராத அம் முதியவள், ‘அச்சந் தீர்க்கும் அம்மையே காப்பாய்!’ ‘பேயை ஒழிக்கும் தாயே காப்பாய்’ என்று முறையிட்டாள். அடைக்கல மாதாவின் பெயர் கேட்ட அலகை, கரம் பிசைத்து, அலக்கணுற்றது. “நேற்று வந்த இம்மரியம் மாள் ஆற்றலாலன்றோ எனக்குரிய காணியைக் கவரத் துணிந்தீர்? பல்லாண்டு இந்நிலத்தில் வாழ்ந்த எனக்குப் பகையாய் முளைத்த உழவரைக் கொல்லவும் வழியற்று உழல்கின்றேனே! யான் செய்த தீவினையாலே இவ்வடைக் கலத்தாள் காவலூர்க் கரையை வந்தடைந்தாள். இனி யான் என் செய்வேன்?” என்று மார்பிலறைந்து அலறி மாயமாய் மறைந்தது. இவற்றைக் கனவிற் கண்ட கிழவி பதைத் தெழுந்தாள்; நிலத்தினருகே எவரும் இல்லாமை கண்டு இருளும் வேளையில் தன் வீட்டை நோக்கி நடந்தாள்; சேரியில் தத்தம் வேலை முடித்து வேம்படியிற் கூடியிருந்த மாதரிடம் தான் கண்ட கனவை விரித்துரைத்தாள். அக்கதை கேட்டு வியப்புற்ற பள்ளரும் பள்ளியரும் பேய்த் திறமறுக்கும் மாதாவின் பெருமை அறிந்து மன


மாரத் தொழுதார்கள். நெடுநாளாகப் பேய்க் காணி என்று பெயர் பெற்றிருந்த விளை நிலம் அன்றுமுதல் அடைக்கலக் காணி என்று பெயர் பெற்று, மாதாவின் திருக்காணியாய் மதிப்புற்று விளங்கிற்று.

இன்னும் வறுமையால் வருந்திஞேரும், தொழுநோய் முதலிய பிணிகளால் துன்புற்ருேரும், மையலுற்று மயங்கிஞேரும், நஞ்சுண்டு நடுங்கிஞேரும், கூளியின் வசப்பட்டுக் குறுகிஞேரும், திருக்காவலூரிற் போந்து அடைக்கல மாதாவின் அடியிணை தொழுது நலிவு நீங்கி நலமுற்ருர்.

**ஏலாக்குறிச்சி நிலையம்**

தமிழகத்தின் களஞ்சியம் எனப் புகழ்பெற்ற தஞ்சை நாட்டை அந் நாளில் மராட்டிய மன்னர் ஆண்டு வந்தனர். காவிரி நாட்டில் சமயத்தொண்டு செய்த இயேசு சமயத் திருச்சபையார் அம்மன்னர் சீற்றத்திற்கு ஆளாயினர். சாஜி என்னும் மராட்டிய மன்னன் தஞ்சையிற் பணி செய்த இயேசு அடியாரைச் சிறைக் கோட்டத்திலடைத்துத் துன்புறுத்திஞன். இவ்வாறு சமயத் தொண்டர்க்குத் தவறிழைத்த சாஜி மன்னனைத் தஞ்சை நகர் "நீரோ" என்று கிறிஸ்துவ நிருபமொன்று குறிப்பிடுகின்றது. சாஜி அரசனுக்குப்பின் தஞ்சையை ஆளத் தலைப்பட்ட சரபோஜி மன்னன் தொடக்கத்தில் சமயப் பொறுமையுடையவன் போற் காணப்படினும் நாளடைவில் தன் கொடுமையால் முன்னவனை நல்லவனுக்கிஞன்.

கிறிஸ்துவ சமயத் திருச்சபையை வேரறுப்பதாகத் தஞ்சை மன்னர் வஞ்சினம் பூண்டமையால் அவர் தம் ஆட்சிக்குட்பட்ட நாட்டின் எல்லையாயமைந்த கொள்ளிட நதியின் வடகரையில் திருக்கோயில் அமைத்து இயேசு அடியார் சமயப்பணி செய்ய விரும்பினர். மதுரையில் அரசுபுரிந்த நாயக்க மன்னர்க்குத் திறை செலுத்திய அரியலூர் மழவராயரது ஆளுகையில் அமைத்த ஏலாக்குறிச்சி என்னும் சிற்றூரில் இயேசு சமயத்தினர் திருச்சபை நிறுவித் தொண்டு புரியத் தொடங்கினர். அக் குறுநில மன்னன்



அரியலூர் மழவராயர் வீரமாமுனிவர்க்கு வழங்கிய மானியத்திற்குரிய சிலா சாசனம்.

ஏலாக்குறிச்சித் திருக்காவலூரில் இயேசு சமயத்தார் திருக்கோவில் எடுத்து இடையூறின்றி வழிபடும் பொருட்டு நான் கெல்லே குறித்த ஓரிடத்தை நன்கொடையாக வழங்கி அதனைச் சாசன வாயிலாக உறுதி செய்தான்.

**அச்சாசனமாவது:-** ஸ்ரீ சாலிவாகன சகாப்தம் ஆயிரத்து அறுநூற்று ஐம்பத்தேழு இராக்ஷத வருஷம் ஆடிமாதம் 26ஆம் தேதி (5—8—1734) ஸ்ரீமது ராஜமான்ய ராஜ ஸ்ரீ அரியலூர் அரசினையிட்ட ரங்கப்ப மழவராயர், ஏலாக்குறிச்சித் திருக்காவலூரில் வீராண தேவன் வழிக்குக் கிழக்கு, கோவிலூர் வழிக்கு மேற்கு, குட்டைக்குத் தெற்கு, பெரிய ஏரிக்கு வடக்கு. இதற்குட்பட்ட யாவும் சர்வேஸ்வரன் கோவிலுக்குச் சிலாசாசனமாகத் தந்தோம். சந்திராதித்தரும், கல்லும் காவிரியும் புல்லும் பூமியு முள்ளளவும் சுகமே இருக்கவும். இந்தத் தருமத்துக்கு யாதாம் ஒருத்தன் விகாதம் செய்தால் கங்கைக் கரையிலே காராம் பசுவைக் கொன்ற தோஷத்திற்கும் போகக் கடவன்.

மழவராயர் வழங்கிய இடத்தில் எளியதோர் கிறிஸ்துவக் கோவில் எழுந்தது. தஞ்சை மன்னரது வன்கண்மைக்கு ஆற்றாது மனந்தளர்ந்த கிறிஸ்தவர்க்குக் காவலூர்க் கோவிலும் சபையுமே தாரகமாய் அமைந்தன. கொள்ளிட நதியில் வெள்ளமற்ற நாட்களில் தஞ்சைக் கிறிஸ்தவர் அவ்வாற்றைக் கடந்து போந்து காவலூர் மடத்திலமைந்த சமய போதகரிடம் அறவுரை கேட்டு மீள்வாராயினர்.

## தஞ்சை நாட்டில் பஞ்சம்

இங்ஙனம் தோன்றிய ஏலாக்குறிச்சி நிலையத்திற் பணியாற்றிய இயேசு சமய அடிகளுள் தலைசிறந்தவர் வீரமாமுனிவராவர். அம் முனிவர், மராட்டிய மன்னர் புறப்பகையாலும் தரங்கம்பாடித் தேனிய சபையாரது (The Danish Mission) அகப் பகையாலும், இயேசு சமயத் தொண்டு மாசுறுதலை அறிந்து மனம் வருந்தினர்.

அக்காலத்தில் தென்னாட்டில் கொடும் பஞ்சம் வந்துற்றது. தஞ்சை மாநகரில் பிழைக்கவந்த தென்னாட்டு மக்களிற் பெருந்தொகையினர் உண்ண எவ்வகை உணவுமின்றி வீதிகளில் மயங்கி வீழ்ந்து மாண்டனர். சாலைகளிலும் சோலைகளிலும் நிலங்களிலும் புலங்களிலும் இறந்துபட்ட மாந்தர் எண்ணிறந்தவர். மாதேவிப்பட்டணம் என்னும் ஊரில் இறந்தவரைத் தனித்தனி எடுத்து அடக்கம் செய்ய இயலாது கட்டை வண்டிகளில் அடுக்கிச் சென்று ஊர்ப் புறத்தே அகழ்ந்த பொதுக் குழிகளிற் புதைத்தனர். சேது நாட்டினின்றும் போந்த மாந்தர் சிலர் தம் பிள்ளைகளை விற்று வயிறு வளர்ப்பாராயினர்.

### திருக்காவலூரில் அடைக்கல மாதா

இங்ஙனம் பசியென்னும் தீப்பிணியால் நலிவுற்ற ஏழை மாந்தர்க்குத் தரங்கம்பாடித் தேனிய சபையார் உண்ண உணவளித்து ஒல்லும் வகையில் ஆதரித்தார்கள். 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' எனக் கருதிய ஏழை மாந்தர் அச்சபையின் உபதேசியர் செல்வி பார்த்துச் செய்த சமய போதனையைச் செவிபிலேற்று அவர் பணித்தவாறொழுகத் தலைப்பட்டார், பஞ்சத்தின் கொடுமையைத் தீர்த்தற்பொருட்டும், தேனிய சபையார் வசப்படாமல் தம் சமயத்தினரைக் காத்தற்பொருட்டும், வீரமாமுனிவர் திருக்காவலூரில் புதியதோர் வழிபாடு இயற்ற விரும்பினார். சென்னையைச் சார்ந்த மயிலாப்பூரில் வீற்றிருந்த ஆயரின் ஆணைபெற்று வீரமாமுனிவர் தேவ மாதாவின் திருவுருவைக் காவலூரில் அழகுற நிறுவினார். அற்றார்க்கும் அலந்தார்க்கும் அருந்துணையாக நின்று, அரந்தை கெடுத்து வரந்தரும் திறம் வாய்ந்த அவ்வன்னையை "அடைக்கல மாதா" என்று அழைத்தார். அம்மாதாவின் அடிகளில் நறுந்தமிழ்ப்பாமாலை அணிந்து மகிழ்ந்தார்.

---

# திருக்காவலூர்க் கலம்பகம்

## மூலமும் — உரையும்

### காப்பு

#### கட்டளைக் கலித்துறை

**பாற்கடல் கன்னிச்சங் கிங்க ணரிதில்ப யந்தளித்த**
**மேற்கடல் தேவ திருமுத்தம் பூண்டு விரிதமிழ்ப்பா**
**நாற்கடல் தொல்லந் துறைசேர்ந்து காவலூர் நங்கையெனும்**
**நூற்கடல் தேவமு தள்ளி நுகர்வானு வன்றிடவே.**

விரிந்த தமிழிலுள்ள வெண்பா, அகவற்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் நால்வகைப் பாக்கள் பாவினங்களாகிய கடலினது ஓர் அழகிய துறையைச் சேர்ந்து, அங்கு வேத நூற் கடலிடத்து விளங்கும் திருக்காவலூர் நங்கை என்னும் நூலாகிய அமுதத்தை மனமாகிய கையால் அள்ளி, அறிவாகிய வாயால் உண்ணும்படி நான் ஒரு கலம்பகத்தைச் சொல்லத் தொடங்குகின்றேன். அது நன்ருக நிறைவேறுதற்பொருட்டு அருள்நலம் என்னும் கடலிடத்துள்ள அந் நங்கையாகிய கன்னிமரியாள் என்னும் சங்கானது இவ்வுலகத்திலே, அருமையுறப் பெற்ற வானுலகென்னும் கடலிடத்து விளங்கிய இறைமகனென்னும் திருமுத்தை மனமொழி மெய்களால் துதிக்கின்றேன்.

## நூல்

### மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா

### — நான்கடித் தரவு இரண்டு —

பார்மேவும் பழிநீப்பப் பகர்ந்தடங்காப் பரிவுள்ளிச்
சீர்மேவும் திருவுளத்தைத் தெளிந்தமரர் உளம்பனிப்ப
உருவில்லான் உருவாகி உலகில்ஒரு மகனுதிப் பக்
கருவில்லாக் கருத்தாங்கிக் கன்னித்தாய் ஆயினையே!

மண்ணுலகம் துயர்நீங்க மன்னுயிர்கள் சிறந்துவப்ப
விண்ணுலகம் புகழ்ந்தேத்தி வியந்தலர்சே வடிவருட
வான்தளங்கள் புறங்காப்ப வாரனசர் பணிகேட்ப
மீன்தளங்கள் அணிமதிபோல் விண்ணரசாள்
ஆயினையே!

### — நான்கடித் தாழிசை ஆறு —

தண்சுடர்க்கால் மதிக்குழவி தாங்கியபூ அடிவிளங்கத்
தெண்சுடர்க்கால உடுஅணைந்த திருமுடிகொள்
சிரம்இமைப்பப்
பணியுயிர்த்து மனங்குளிர்க்கப் பரிதியுடுத்
துடல்இலங்கத்
தனியுயிர்த்தும் அரசணியாத்தரிப்பதுநின் விருதாமோ?

கனைபூத்த சோணாட்டுக் காவிரியின் வடகரைமேல்
சினைபூத்த நிழற்பொழில்வாய்ச் சிங்கநெடுங்
கொடிநிழற்றும்
தருக்காவல்ஊரகத்துத்திகழொளிவாய்மணிக்கோயில்
அருட்காவல் இயற்றிநம்மை அளிப்பதுநின்
தயையாமோ?

உள்ளுருவாக் கவசமென உத்தரியத் துடன்மருள்தீர்
தெள்ளுருவாம் மணிமாலை சிறந்தேத்தும் கைந்நீட்டி
வாய்பொய்யா மறைத்திசையாம் வடதிசையே
தனிநோக்கித்
தாய்பொய்யா அடைக்கலமே தருவதுநின் புகழாமோ?

கான்பொதுளும் பூம்புகையும் கமழ்பூவும் மணந்தேங்க
மின்பொதுளும் ஒளிமணியார் விமானத்துள்
எழுந்தருளிப்
பார்பூத்த வினையறநீ பயந்தநலத் திவ்வுலகும்
சீர்பூத்த வானெனப்பச் செய்வதுநின் சிறப்பாமோ?

தாண்மலரே தலைஅரும்பத் தரும்பணிகேட்
டுளம்பனிப்பச்
சேண்மலரே உன்வரத்தால் திருக்கடலூ டினிதாழ்ந்து
வானவரும் கரைகாணு மனந்தேற்ருப் புன்பாவால்
ஈனவருள் யான்நிந்தற் கியைந்ததுநின் திறமாமோ ?

யாழ்குரலே இனிதென்னு ஈன்ருட்கே தன்மகன்சொல்
தாழ்குரலே இனிதென்ற தகைமைத்தாம் மனதிரங்கித்
துவர் வாய்ப்பொங் கலைமணிபோல்
தொடர்புளதாய் நீஎன்றன்
உவர்வாய்ப்புன் புகழுரைகொண்
டுவப்பதுநின் பரிவாமோ ?

## — நாற்சீர் ஓரடி அராகம் எட்டு —

உயருல கடிதொழ உயிரினு முவகையை
துயருல குளியுள துகளொழி உறுதியை
உலகினை அருளிய ஒருவனை அருளினை
அலகினை அறுவரம் அமைதனி அரசினை
வினையிடும் இருள்அற வெயிலிடு மறையினை
முனையிடு பகைஅற முயலிடும் உடலினை
மறைஅருள் இறைவனை மறைவில அருளினை
இறைஅருள் கதியினை இனிதருள் துணையினை.

## — ஈரடித் தாழிசை ஆறு —

ஆதியிலா அந்தமிலா அனைத்துயிர்க்கும் காரணற்கே
ஓதில்எலா நிகர்கடந்த உற்பத்தி ஆயினைநீ !

பூவாதி மூவுலகின் புலத்தடங்கா வரையொழிக்கும்
தேவாதி தேவனை நின்திருவயிற்றில் அடக்கினை நீ !

வானவர்க்கும் தெளியாத வடிவொளியான்
வினைஇருள்நீத்
தீனவர்க்கும் தெளிவதற்கே என்னுருவொன் ருக்கினைநீ!

மூவுலகும் மூவிரலால் முகந்தேந்து முதலோனைத்
தேவுலகும் வியந்திறைஞ்சச் செங்கரமேல் ஏந்தினைநீ !

பொருள்சுரந்தின்உயிர்க்கெல்லாம்பொழிந்தூட்டி வளர்த்தோனை
அருள்சுரந்த திருக்கொங்கை
அமுதூட்டி வளர்த்தனை நீ!
அனைத்துலகும் ஏவலைக்கொண் டசைத்ததனி
ஆணையினுன்
நினைத்துலகும் வியப்புறஇந் நிலத்தேவல் கொண்டனை
நீ!

— அம்போதரங்கம் —

ஈரடிப் பேரெண்

உந்தையை ஈன்றுநீ ஒருவற் கிங்கரும்
வந்தையோ டன்னையும் மகளும் ஆயினை!
கனியரும் பயனொடு கலந்த பூவினைத்
தனியருட் கன்னியும் தாயும் ஆயினை!

— நான்கடி இடையெண் —

தொற்பழி உரகம் மிதித்தனை.
துகட்பழி உலகில் துடைத்தனை.
கற்பழி அலகை அடக்கினை.
கதிக்கத வகல இயக்கினை.

— எட்டடிச் சிற்றெண் —

விண்தி றந்தனை.
எண்தி றந்தனை.
பான்அ ணிந்தனை.
மீன்அ ணிந்தனை.
மதிப தத்தினை.
கதிப தத்தினை.
அருள்வ லத்தினை.
பொருளி டத்தினை.

தனிச்சொல்
என ஆங்கு

— அகவற் சுரிதகம் —

தண்திருக் காவலூர்த் தடம்வளர்ந் தொளிபெற
மண்திரு மலர்அடி வைத்தனை எங்கணும்
வினைஇராப் பரந்து விளைந்த அவாஇருள்
தனைஇற மறையொளி தருந்திருப் பகலோன்

வந்துயிர் விளக்க வருநாள் இதுவென
நந்துயிர் உய்ய நகைக்கதிர் பரப்பிக்
கொதித்தனைத் திருளினைக் கொய்தீங்
குதித்தனைநீயோர் உதய மீனே.

## உரு இல்லான் உரு ஆகி உலகில் ஒரு மகன் ஆதல்

அருவனான கடவுள் மக்களது பாவப்பழியைப் போக்க சொல்லில் அடங்காத அன்பினால் நினைந்து, வானவர் அத்திருவுளச் செயலுக்கு உள்ளம் நடுங்கவும், உருவம் உள்ளவராகி இவ்வுலகில் ஒரு மகனைப் பிறக்க, இவ் வுலகியலின்படி கொள்ளும் கருவில்லாது கருக்கொண்டு கன்னித்தாய் ஆயினை!

## மண்ணும் விண்ணும் போற்றும் மாட்சி

மக்கள் துயர் தீரவும், பிற உயிர்கள் சிறந்து மகிழவும், தேவதூதர்கள் உன்னைப் புகழ்ந்து போற்றி உன் சேவடி களைத் தொழவும், வானவர் சேனை உன்னைப் புறஞ்சூழ்ந்து காக்கவும், வானுலகில் அரசராய் வாழ்பவரும் உன் ஏவலைக் கேட்கவும். நட்சத்திரக் கூட்டங்களை அணிந்த சந்திரன்போல, விண்ணரசி ஆயினை!

## விமலியின் விருதுகள்

உனது திருமேனியில் குளிர்ந்த கதிர்களைத் தரும் இளம் பிறைச்சந்திரன் தாங்கிய தாமரையை ஒத்த பாதம் விளங்குவதும், தெளிந்த கதிர்களைத் தரும் நட்சத்திரங்கள் சேர்ந்த முடிகொண்ட சென்னி சிறந்து தோன்றுவதும், அன்பர் நடுக்கம் நீங்கி இதயத் தாமரை குளிர சூரியனை ஆடையாக அணிந்து இலங்குவதும் ஆயினை. இவற்றைத்தாமே கடவுளை ஈன்ற நீ உனது அரசுக்குரிய விருதுகளாகப் பெற்றனை? நமது அன்னை சூரியனை உடுத்தது தன்னை அலங்கரித்துக் கொள்வதற் கன்று. அன்பர்களின் இதயத் தாமரையை மலரச் செய்வ தற்கே என்பது புலப்பட, “பனி உயிர்த்து மனங் குளிர்க்கப் பரிதி” என்றனர்.

## அருட்காவல் நிறை தயை

சோழ நாட்டில், ஒலி தங்கிய காவிரி ஆற்றின் வட கரையில் பூஞ்சோலைகளாலும், உனக்கு உரிய சிங்கக் கொடியாலும் நிழல் செய்யப்படுகிறது காவலூர். இத் திருக்காவலூரின் அழகிய கோவிலில் வீற்றிருந்து எம்மைக் கருணையோடு காவல் செய்வது, தாயே! உன் தயை காரணமான செயல் அல்லவா? மரியன்னை தாவீதன் மரபினள். தாவீதன் சிங்கங்களைக் கொன்ற செம்மல். சிங்கக்கொடி ஏந்தியவன். எனவே, அவன் மரபில் வரும் அருளரசிக்கும் இச்கொடி உரிமையாயிற்று என்க.

## அற்புத அடைக்கலம்

சொற்கள் பொய்யாத வேதத்தையுடைய வடதிசையை நோக்கி இருந்து, குண்டுகள் ஊடுருவிச் செல்ல இயலாத கவசம் எனத்தகும் உத்தரியத்துடனும், பாவ மயக்கம் தீர் வதற்கேற்ற தெளிந்த இரத்தின செபமாலையுடனும் கரம் நீட்டி, தாய் போலும் தப்பாத அடைக்கலம் அளிப்பது உன் புகழ் அன்றோ? திசை காட்டிக் கருவிக்கு இலக்காயிருப்பது வடதிசை. அதுபோலவே நம் உள்ளக் கருவிக்கும் இலக் காய் அமைய வேண்டியது சத்திய மறை என்னும் திசையே.

## நேரில் காணும் திருக்கோலம்

வாசனை நிறைந்த அழகிய புகையும், பரிமளிக்கும் மலரும், மணந்தந்து நிறைய, நட்சத்திரங்களைப் போல நெருங்கிய ஒளிமிகுந்த இரத்தினங்கள் பொருந்திய தேர் மீது எழுந்தருளி இருந்து, இவ்வுலகினரைப் பிடித்த தீவினைகள் ஒழியும்படியாக, நீ கடவுளைப் பெற்ற நன்மை யைக் கொண்டு இவ்வுலகத்தையும் வானுலகத்தை நிகர்க்கச் செய்வது உனது சிறப்பாக இருக்கின்றதோ?

## புகழ் நீந்தத் தந்த திறம்

உயர் வரங்கள் பெற்ற வானவரும் உனது பதமலரைத் தம் தலையிற் சூட்டி, உன் பணி கேட்டு உளம் நடுங்குவர்.

வான்மலர் போல உன்னிடத்துப் பொருந்திய வரங்கள் காரணமாக நீ கொண்ட சிறப்பாகிய கடலிலே அழுந்திக் கரை காணுது திகைப்பர். அப்படி இருக்க அப்பெருங் கடலை இழிவுற்ற மனிதருள் நான் என் புன்பாவால் நீந்தத் துணிந்தது உனது திறத்ததாக உளதோ ?

## மைந்தனின் மழலை மொழி

யாழின் இசையும் இனியது என்று கொள்ளாது தன் மகனது இழிந்த மதலைக்குரல் இனியது என்று கொள்வது தாயின் தன்மையாம். உயர்ந்தோர் உரைத்த இத் தன்மையதாக, ஞான உறவுள்ள தாயாகிய நீ என் மீது இரங்கி என் திருந்தா நாவின் புன்புகழுரையைக் கடலில் தோன்றிய முத்தைப்போல ஏற்றுக்கொண்டு களிப்பது உனது பேரன்பினுல் அல்லவா ?

## அன்னையின் அருள் திறங்கள்

உயர்ந்த வானுலகோர் உனது பதந்தொழுமாறு அங்குள்ள புனித ஆத்துமாக்களைக் காட்டிலும் நீ மிகுந்த மகிழ்ச்சி உடையவளாக இருக்கின்ருய். துன்பம் பொருந்திய உலகில் பாவங்களை ஒழிக்கும் வல்லமை உடையவளாக இருக்கின்ருய்.

உலகின்கண் உலகங்களை உண்டாக்கிய ஒப்பற்ற கடவுளை நீ பெற்றருளினை. கணக்கற்ற வரம் அமைந்த ஒப்பில்லாத ஆட்சி உடையவளாக இருக்கின்ருய்.

தீவினை தருகின்ற அஞ்ஞான இருள் நீங்க ஞான ஒளி தருகின்ற வேத வடிவாக இருக்கின்ருய். பகை தரும் சத்துருக்கள் ஒழியப் போர் பூணும் மேனியை உடைய வளாக இருக்கின்ருய்.

சத்திய வேதத்தைக் கொடுத்த கடவுளைக் கண்ணுக்குப் புலப்படும் படியாகக் கொடுத்தாய். கடவுளால் கொடுக்கப்படும் மோட்ச கதியினை இன்பமாக எமக்குக் கொடுக்கும் துணையாக இருக்கின்ருய்.

## தாயின் ஆற்றல் கண்டு வியத்தல்

ஆதியும் அந்தமும் இல்லாதவரும் எல்லா உயிர்க்கும் காரணமானவருமான கடவுளுக்கே நீ உற்பத்தி இடம் ஆயினை. ஒதில் எலாம் நிகர்கடந்த-சொல்லப் புகுவோமாயின் எல்லாவற்றையும் ஒப்பில் கடந்த இந்த உற்பத்தி இடம் யாவற்றையும் ஒப்பிலே கடந்தது என்க.

பரலோக பூலோக பாதாளம் என்னும் மூன்று உலகங்களின் இடத்திலும் அடங்காத, அளவைக் கடந்த தேவாதி தேவனை உனது திருவயிற்றில் அடக்கினை.

சம்மனசுகளாலும் தெளிந்தறியப் பெருத ஒளி வடிவினனாகிய இறைவனை ஈன மனிதரும் பாவ இருளை நீங்கித் தெளிந்துணருகின்ற தன்மையில் என்னையொத்த மனித உருவிலே அளித்தனை.

மூன்று உலகங்களையும் மூன்று விரல்களால் எடுத்துத் தாங்கிய ஆதிபரனை வானுலகத்தவரும் வியந்து வணங்கும்படியாக உன் செவ்விய கையிலே ஏந்தினை. மூன்று விரல்கள் என்றது கடவுளது திறம், நீதி, ஞானம் என்பவற்றைக் குறிக்க.

உண்ணும் பொருளை உண்டாகச் செய்து அவற்றை ஈன மனிதர்க்குச் சொரிந்தூட்டி அவர்களை வளர்த்தோனாகிய இறைவனை நீ அன்பாற் சுரந்த திருக்கொங்கை அமுதூட்டி வளர்த்தனை. ஈன்உயிர்-ஈனஉயிர்.

எல்லா உலகங்களிலும் ஆணை செலுத்தி இயக்கும் ஒப்பற்ற ஆணைச் சக்கரத்தையுடையவனை உயர்ந்தோரும் கருதி அதிசயப்படும்படியாக இப்பூமியிலே ஏவல் கொண்டனை. உலகும் - உயர்ந்தோரும். "உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே"

## அன்னை மகள் ; கன்னித்தாய்

உன் தந்தையாகிய இறைவனை நீ பெற்றெடுத்தும் அவ்வொருவனுக்கே மிக்க பெருமையோடு தாயும் மகளும் என்ற நிலையில் இருக்கின்றாய்.

பழத்தோடு கூடிய மலரைப்போல நீ கன்னியுந் தாயுமாக இருக்கின்றாய்.

## பழி தீர்த்த செயல் திறன்

பழமையான பாவப் பழியைக் கொணர்ந்த பாம்பை மிதித்தாய். பூமியிலேயுள்ள பாவப் பழியை ஒழித்தாய். கற்பை அழிக்கும் பசாசை அடக்கினாய். வானுலகக் கதவு திறக்குஞ் செயல் நடத்தினாய்.

## விண்ணேற்பு முதலிய பேறுகள்

மேகத்திலேறி மோட்சஞ் சென்றாய். மூன்று என்னும் கடவுள் தத்துவத்தினை, அதாவது, திரித்துவத்தினை வெளிப்படுத்திக் காட்டினாய். சூரியனை ஆடையாக அணிந்தாய். நட்சத்திரங்களை முடியாகத் தரித்தாய். சந்திரனை மிதியடியாகக் கொண்டாய். மோட்ச கதிரைய உடையவளாக இருக்கின்றாய், அருள் சுரக்கும் வல்லமை பெற்றிருக்கிறாய். மோட்சவாசிகளில் மேலான இடத்தையுடையவளாய் இருக்கின்றாய்.

## விடி வெள்ளி

மேற்சொன்ன வகையாக அனைவரும் புகழ குளிர்ந்த திருக்காவலூர் மேன்மை மிகுந்து விளங்க உனது பாதங்களை அங்கே வைத்தாய். பாவம் என்னும் இரவையும், அதற்குக் காரணமாக எங்கும் பரவி இருக்கின்ற ஆசை என்னும் இருளையும் அறுக்கின்ற சத்திய வேதமாகிய ஒளியைத் தரும் இறைவனாகிய கதிரவன் இவ்வுலகமாகிய ஆகாயத்தில் வந்து விளங்கச் செய்ய வருகின்ற காலம் இது என்று உணரவும், அழியும் உயிர்கள் பிழைக்கவும்,

இன்பம் என்னும் கதிர்களைப் பரப்பி துன்பம் என்னும் இருளை யெல்லாம் ஓட்டி இவ்வுலகில் தோன்றும் ஒரு விடி வெள்ளியைப் போன்று நீ தோன்றினை!

## நேரிசை வெண்பா

மீனே தலைஅரும்ப வெண்மதியே தாள்அரும்பப்
பானே உடல்அரும்பப் பாங்குருவைத் - தான்நேர்
உடைத்தாள் திருக்காவல் ஊரகத்து வைத்தாள்
துடைத்தாள் வினைத்துயரைத் தொக்கு. 2

## பவந் துடைத்த பரம நாயகி

நட்சத்திரங்கள் தலையில் விளங்கவும், வெண்ணிலவு காலில் ஒளிரவும், சூரியன் மேனியில் இலங்கவும், அழகிய வடிவினை ஒப்பிலாத தன்மையில், உள்ளவளும் அவ்வுருவினைத் திருக்காவலூரில் வைத்தவளுமான தேவ அன்னை பாவத் துன்பங்கள் அனைத்தையும் நீக்கியவள்.

பாங்கு உருவை — அழகிய வடிவத்தினை ; தான் நேர் உடைத்து ஆள் — தான் ஒப்புக் கடந்து ஆள்கின்ற.

### — கட்டளைக் கலித்துறை —

தொக்க நலமெலாம் பெய்திடி யாதருள் தோய்முகிலாப்
புக்க நிழல்கொண் டிருள்புக வில்பொழில்பொங்குலைநீர்
ஒக்க வரையா வரங்கொண் டுவரில வோர்நிலையா
அக்க மகிழக்கண் டேன்திருக் காவலூர் அங்கனையே. 3

## இடியாத மேகம்; இருளாத சோலை

நன்மைகள் அனைத்தும் சேர்ந்து இடியாது பெய்த அருள் மேகமாகவும், இருள் இல்லாது நிழல் மட்டும் கொண்ட சோலையாகவும், கடல் நீர் போல இவ்வளவு என்று வரையறுக்கக் கூடாத வரங்கொண்டதும் உவர்ப்பு இல்லாததுமான ஒரு நிலைக் கடலாகவும், திருக்காவலூரில் ஒரு நங்கையை என் கண்கள் மகிழும்படிக் கண்டேன்.

அங்கனை - நங்கை ; பொங்கலை நீர் - பொங்கிய அலை யோடு கூடிய நீர்.

— பதின்மூன்று சீர்க்கழில் நெடிலடி ஆசிரியச் —

சந்த விருத்தம்

அங்கனை வரும்அரு மறையறை அயிர்வன இழியுளம்
உயிருண ஐயை இயக்கினை பொய்யை
விலக்கினை மெய்யை விளக்கினை ஒளி வேந்தே !
இங்கனை வரும்அரும் மிடிமடி இழிவெழு துயரயர்
வொழிகுப இன்பம் உயிர்த்தனை துன்பம்
ஒழித்தனை இம்பர் களித்தனை உயிரிடாய்ச்
சங்கனை அனநின கரமிகு வனவின மணியணி
குவர்அவர் தாவரு நோயற மேவரு
மானுற யாவரும் நேரிற வாழ்வரால்
பங்கனை அனநின இருதிரு அடிசிரம் அடியன
மணியிய பாவிகள் அண்டினை காவலில்
ஒன்றினை மேவியும் உன்றனைக் காட்டாயோ ? 4

## தாயே உன்னைக் காட்டாயோ ?

யாவர்க்கும் அருமையான திருமறையால் சொல்லப் பெற்ற பேரின்ப இனிப்பை மிக இழிவுடைய எங்கள் உயிர் இவ்வுலகில் சுவைக்கும்படியாக இறைவனை எம்மிடத்து அனுப்பினவளே ! பொய்ம்மையை நீக்கினவளே ! மெய்ம் மையை விளங்கச் செய்தவளே ! இத்தன்மைத்தான ஒளி தரும் சூரியனே !

இங்கு எவர்க்கும் ஒழித்தற்கரிய வறுமையும் சாவும் தாழ்வும் பலவகையாய் எழும் துன்பங்களும் எங்களை நீங்க, மிக்க மகிழ்ச்சியை எமக்கு அளித்தவளே ! இங்கு பேரின்ப மகிழ்ச்சி யடைந்தவளே !

சங்குகளை ஒத்த உனது கையிலுள்ள முத்துச் செப மாலையைத் தம் உயிரைப்போலக் கருதி அணிபவர்கள் தம் பகையும் கொடும் பிணியும் நீங்கிப் போகவும் பெறுதற்கரிய

வடிவம் பெறவும் அதனால் நிகரற்று வாழ்வார். ஆதலினாலே, மறுவற்ற அன்னம் போன்ற உன் திருவடிகளை உன் அடியார்களாகிய நாங்கள் தலைமேல் தரித்துக் கொள்ளப் பாவிகளாகிய எங்களை நெருங்கித் திருக்காவலூர் தங்கினை. நீ இவ்விடத்தே வந்த பின்னரும் எமக்கு உன்னைக் காட்டாயோ அன்னையே ?

— பதினான்கு சீரடி கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் —

தனைக்காட்டத் தன்திறஞ் சீர்தயை ஞான
மற்றருந்தன் தகுதி காட்டத்
தகும்வழியால் தகாச்செல் வோன்உனை படைப்பக்
கருதிப்பின் தரணி எங்கும்
உனைக்காட்ட இரவி மதிஉடு வினங்கள்
நவமணிமற் றொளியின் சால்பும்
உரிமணமூ வகைமலர்ப் பூஒண் கனிதேன்
அமுதினிமை உகுத்த யாவும்
மினைக்காட்டப் பெய்த முகில்வியன் கடல்நீர்
இவ்வழகு வேய்ந்த வெல்லாம்
விண்ணிடத்தும் மண்ணிடத் தும்விருப்பங் கொண்
டுனைஉள்ளி விதித்தான் அன்றோ ?
நினைக்காட்ட எழில்காட் டும்இவை கண்டுன்
னடிதொழுநான் நிறைய வாழ
நினைக்காட்டா யோமரி யேதிருக் காவ
லூர்நிலையே நிமலத் தாயே !

## உனது பேரழகைக்கண்டு பெருவாழ்வு பெறுவேன்

மரியே, திருக்காவலூரில் நிலையாய் உறைபவளே! மாசற்ற அன்னையே! தனக்கு எவ்வுவமையும் தகாமல் யாவற்றையும் கடந்து செல்பவனான இறைவன், தன்னை உலகுக்குக் காட்டவும், தனது வன்மை சிறப்பு தயை ஞானம் மற்றும் இத்தகைய தன் அரிய தகுதிகளைக் காட்டவும், தக்க முறையால் உன்னைப் படைக்கக் கருதி, உனது உயர்வைப் பூமி எங்கும் காட்டவும் விரும்பி

உன் நிமித்தமாக சூரியன் சந்திரன் நட்சத்திரங்கள் நவரத்தினங்கள் ஒளியுடைய ஏனைய பொருட்கள், கொடிப்பூ, கோட்டுப்பூ, நீர்ப்பூ என்று பகுக்கப்பெற்ற மூவகை மலர்கள், நன்மை அமைந்த கனிகள் தேன் அமுதம் முதலிய இனிமை தரும் பொருட்கள், மின்னைக் காட்டி நீரைப் பொழியும் மேகம், விரிந்த கடல் ஆகிய அழகு பொருந்திய இவைகள் எல்லாவற்றையும் விண்ணிலும் மண்ணிலும் படைத்தான். உனது, வண்ணம் காட்டும் இவற்றைக் கண்டு உன் பாதத்தைத் தொழுகின்ற நான் நன்மையால் நிறைந்து வாழ உன்னைக் காட்டாயோ அன்னையே!

— கட்டளைக் கலித்துறை —

**தாயுனைக் கொண்டான் அனைத்தும்**
**படைத்தவோர் தந்தையன்னுன்**
**காயெனப் பூவெனத் தன்தரு மாட்சியைக்**
**காட்டுவபோல்**
**சேயுனைக் காட்டலின் இவ்வள வுன்புகழ் செப்புவரார்?**
**ஓயில காவல் இறைவி பொறுயென் உரைவெளிறே. 6**

## உன் புகழ் உரைப்பவர் யார்?

வளம் ஒழிதல் இல்லாத திருக்காவலூரிலே எழுந்தருளியுள்ள இறைவியே! எல்லாவற்றையும் படைத்த ஒரு தந்தையைப் போன்ற இறைவன் தனக்குத் தாயாக உன்னைத் தெரிந்து கொண்டான். அத்தகைய உன் மகன், காய்களும் மலர்களும் தம் மரத்தின் பெருமையைக் காட்டுவதுபோல, உன் பெருமையைக் காட்டுகிறுன். இந்த மாட்சிமையுடைய உனது புகழை எடுத்துச் சொல்ல வல்லவர் யாருளர்? அன்னையே! ஆசையால் சொல்ல முனைந்த என் அறியாமையைக் காட்டும் சொற்களைப் பொறுப்பாயாக.

ஓயில காவல் - ஓய்வு இல்லாத திருக்காவலூர்; வளம் ஒழிதல் இல்லாத திருக்காவலூர். காயும் பூவும் மரத்தின் பெருமையைக் காட்டுதல்போல, திவ்விய சேசு தேவ

அன்னையின் பெருமையைக் காட்டுகின்ருர். பொருய் என் உரை வெளிறே — என் வெளிறு உரை பொருய், என் அறியாமையைத் தெரிவிக்கும் சொற்களைப் பொறுப் பாயாக.

## புய வகுப்பு

### — ஆசிரிய வண்ண விருத்தம் —

வெளிமதி கதிருடுக்குல மணிநிதி ஒளிமுகத்தவை
மலர்கனி யமுதுமற்றைய பலஉல குளவனைத்தையும்
ஈறிலா தெங்கணும் அருளிப் பயந்தன

வெளியமை சுரர்முதற்பல வினையமை நரரினத்தொடு
விரிபல உலகனைத்தினும் உளபல உயிர் அனைத்தையும்
நாளுமா றின்றி யரிதுயிர்த் தமைந்தன

வினைவிளை புவிபகைத்தன முழுதுள துகள்துடைத்திட
விரிமுகில் இடியிடித்தரி துயர்மலை முடிஒளித்திட
மாரிமா றென்றிவ் வுலகிற் பொழிந்தன

விரவிய விரகம்முற்றிய வினையொடு வெகுளிபற்றிய
அழல்எழு முகில்இயற்றிய சுடும்எரி யுலகழற்றிய
மாரியால் ஐம்புரம் எரியச் சினந்தன

தெளிமறை யவர்செலப்பிரி கடலிரு மதில்எனக்கடி
திருபுடை எழநிறுத்தின நிலைஎழு திரைகவிழ்த்தெதிர்
நேரலார் நைந்துயிர் ஒழியக் கடிந்தன

திகிரிய துயர்குவட்டிழி திரைநிலை யுறநிறுத்துபு
மலைமிசை மலைஅடுக்கென அலைமிசை அலைஅடுக்குபு
யோருதான் எனுநதி நடைதடுத் துயர்ந்தன

செருமிகு செறுநர்மொய்த்துறை முகில்தவழ்
அரண்மதிற்சுவர்
பொடிஎழ அடிபெயர்த்தொரு படையில
நகர்தகர்த்திரு
ஞாலமே அஞ்ச மிகுகத் தெதிர்ந்தன.

சிதவழி சிதைசினக்கரன் அரசுடன் உயிரறப்பல
கரிபரி அலதுமுப்படி யுறழவும் அபயர்முற்றறு
நூறுநா றன்றெழிய வதைத் தெறிந்தன

ஒளி ஈழும் உருள்நடத்தின நிலையுற வுருள்நிறுத்தின
பிறகுற உருளிழுத்தன பகலிடை உருள் ஒளித்தன
மாயிரா வென்றுல கிருளக் கரந்தன

உயரிய வரைமுகட்டிடை யழலெழ இடிமுழக்குடன்
அதிர்வன உலகுவப்புற இருசிலை மிசைதிருத்திய
வேதநூல் அன்புடன் எழுதிப் பரந்தன

உலகுயிர் கனியவொத்துரு உடலுறி அடைசயக்கொடி
எனவொரு சிலுவைநட்டிட உயர்மலை முகடுபற்றுளி
வானுளோர் அஞ்சி வெருஉறச் சிவந்தன

ஒருவில படைஎனப்பொறை ஒருபொழு
தெமதுயிர்ப்பகை
எனமுடி விலஉடற்றிய வெறியின முழுதடக்கிய
வாகையே கொண்டிடர் உலகிற் பரிந்தன

களியற உடலுணக்கிய பிணிஅற மிடிபெருக்கிய
துயரற வினைஇயற்றிய குறையற வரிதியக்கிய
ஈரவா யுண்ட புதுமையிற் சிறந்தன

கடிதெழு வளிஅடக்கின பகமலை புவிநடுக்கின
பகலிடை வெளிஇருட்டின கனல்குளி ரிடநிலைத்தன
நீருமா ஐந்தையு மரிதிற் புரந்தன

கதிபெறு மறைஉரத்தொடு கொடையருள்
தவநலத்தொடு
பொறைதுணி வறவயத்தொடு பொருள்நய
நலமனைத்தையும்
ஞாலமீ தெங்ஙனும் மலியப்பயந்தன

கசடிடர் முழுதொழிப்பன ஒழிவில கனியுமிர்ப்பன
நரககல் கதவடைப்பன கடைஇல கதியில்உய்ப்பன
காவலூர் அங்கனை மகன்நல் புயங்களே. 7

## அன்னைமரி புதல்வனின் திருத்தோள் ஆற்றல்

இச்செய்யுள் புயவகுப்பு. புயவகுப்பாவது தோளின் ஆற்றலை வகுத்துக் கூறல். ஈண்டு தேவதாயின் புதல்வனுடைய நல்ல தோள்களின் அருஞ்செயல்கள் அணி பெறக் கூறப் பெற்றுள்ளன.

அவை, வெண்மதியும் கதிரவனும் நட்சத்திரக் கூட்டமும் இரத்தினங்கள் முதலிய ஒளிவுடைப் பொருள்களும் மலர் கனி அமுதம் முதலியனவுமாகிய உலகில் உள்ள யாவற்றையும் அவ்வவற்றிற்குரிய இடங்கள் தோறும் அருளிச் செய்தன.

வானுலக சம்மனசுகள் முதல், பல வகைப்பட்ட தொழிலமைந்த மனிதரோடு பரந்த பலவகைப்பட்ட உலகங்களிலுமுள்ள பல உயிர்களையும் என்றும் மாறுதலின்றி அருமையாகப் படைத்தன.

தீவினை விளைந்த இப்புவியைப் பகைத்து அங்கு எவ்விடத்தும் பரவிய பாவ அழுக்கைக் கழுவித்துடைக்க பரந்த மேகங்கள் இடிஇடித்து, அரிதாக உயர்ந்த மலையின் சிகரமும் நீரினுள்ளே அமிழ்ந்த, நாற்பது நாள் மழையைப் பொழிந்தன.

காமநோய் மிகுந்து அத்துடன் சினமும் கலக்க, தீ எழுதற்குரிய மேகங்களால் உண்டாக்கப் பெற்ற நெருப்பு மழையால் சோதோங் கோமோரா முதலிய ஐந்து நகரங்களும் எரிந்து போகச் சினங்கொண்டன.

மனந்தெளிந்த யூதர்கள் நடந்து செல்ல, பிரிந்த கடல் விரைவில் இரு மதில்களைப்போல இருபக்கத்திலும் எழும்பி நிற்கச் செய்தன.

யூதர்களை எதிர்த்த பகைவர் வருந்தி உயிர் நீங்க நிலையாய் எழுந்து நின்ற அலைநீரை மூடிக்கொள்ளும்படி செய்தன. லெபனன் மலையுச்சியிலிருந்து வரும் நீரை நிலைபெற நிறுத்தி மலைமீதுள்ள மலையடுக்கைப் போல அலைகளின்மேல் அலைகளை அடுக்கி யோர்தான் நதியின் நடையைத் தடுத்தன.

போரையே தொழிலாகக் கொண்ட பகைவர் தங்கியிருந்த கோட்டையின் வானளாவிய மதிற் சுவர்களை

புழுதியாய் எழும்படி யாதோர் ஆயுதமுமின்றி அடியோடு பெயர்த்து எரிக்கோ என்னும் நகரத்தைத் தகர்த்து நிலம் நடுங்க அப்பகைவரைச் சினந்து எதிர்த்தன.

ஞானவழி சிதைந்த சினக்கரன் என்பவனுடைய ஆட்சியுடன் உயிரும் நீங்க அவன் தன் யானை குதிரைகளை யும் அல்லாமல் பல ஆயிரம் படை வீரரையும், யூத அரசன் அவன்மீது படை எடுத்தபோது அழிய வதைத்துப் போக்கின.

வெயில்தரும் உருளாகிய சூரியன் யாவர்க்கும் நன்மை செய்து ஆகாயத்தில் திரியச் செய்தன. சோசுவனுக்காக ஓரிடத்தில் நிறுத்தின.

எசேக்கியா என்னும் அரசனுக்காகப் பின்னே இழுத்து விட்டன. இசரவேலரை அடிமைத்தனத்தினின்றும் மீட்க பகலிலே இராஇ நள் பரவும்படியாக மறைத்தன.

உயர்ந்த சீனாய் மலையின் சிகரத்தில் இடிமுழக்கத்தோடு நெருப்பு இறங்கியபோது பயந்து நடுங்கிய இசரவேலர் மகிழச் சத்திய வேதநூலை அன்புடனே இரு கற்பலகை களில் எழுதிப் பரந்தன

இவ்வுலகில் உள்ள மக்கள் ஞானத்தில் முதிரத் திரு வுள்ளம் கொண்டு அவர்களின் வடிவுகொண்டு ஒப்பற்ற சிலுவையைத் தாம் பெற்ற வெற்றிக்கொடியாக உயர்ந்த கபால மலையின் உச்சியில் நாட்டச் சுமந்த காலத்தில் வனாவர் அஞ்சி நடுங்கும்படியாகச் சிவந்தன.

எம் உயிர்ப்பகையாகி எப்போதும் எம்மை வருத்திய பேய்க் கூட்டத்தை அடக்க நீங்காத ஆயுதங்களாக பொறுமை உபவாசம் முதலாகிய தவ வொழுக்கத்தைக் கொண்டு இவ்வுலகில் அப்பேய்களால் விளையும் துன்பங் களை அறுத்து நீக்கின.

2

உடலை வாட்டிய நோய்கள் நீங்கவும் வறுமையைப் பெருக்கிய துன்பங்கள் ஒழியவும் தீவினைகளால் வரும் குறைவு தீரவும் அருமை தோன்றக் கருணையால் செய்த புதுமைகளால் சிறந்தன.

கடலில் வேகத்தோடு எழுந்த காற்றை அடக்கின. சிலுவையில் உயிர்விட்ட காலத்தில் மலைகள் பிளக்கும்படி பூமியை நடுக்கின. பகற்காலத்தில் ஆகாயவெளி இருளடையச் செய்தன.

நபூக்கன் மூட்டிய சூளை நெருப்பு சாத்திராகு, மேஷாகு, அபேத்நேகோ என்னும் யூதர் மூவர்க்கும் குளிர்ந்திருக்கச் செய்தன. பஞ்ச பூதங்களை வேறுபடுத்தியதன்றியும் அவ்வந் நிலையில் நிற்கும்படி அருமையாகக் காத்தன.

மோட்சகதி பெறுதற்குக் காரணமான சத்திய வேத ஞானத்தோடு ஈகை கருணை முதலியவற்றையும் தவம் இன்பம் பொறுமை தெளிவு ஆகியவற்றையும் அறத்தின் வன்மையோடு வாய்மை நீதிகளையும் மற்றெல்லா நலன்களையும் உலகம் எங்கும் நிறைத்தன.

குற்றங்கள் துன்பங்கள் முழுமையும் நீக்குவன. முடிவற்ற மோட்சத்தில் செலுத்துவன.

ஆண்டவன் செய்யும் அற்புதச் செயல்களை அவர்தம் தோள் செய்ததாகக் கூறுவதைக் கவிக் கூற்றாகக் கொள்க.

## தவம்

### — கட்டளைக் கலித்துறை —

புயங்க உருவால் வினை நஞ்சு உமிழ்ந்து புழுங்கியபேய்
உயங்க மிதித்துத் தவத்தால் வென்றுயெனஒண்மதியம்
மயங்கார்பகையினுக் கஞ்சிவந் துன்றவ
வாகையிற்றுன்
முயங்க அடைக்கலம் கொண்டதோர் காவலூர்
மூதுயிரே. 8

## நிலவு அடைக்கலம் அடைந்ததோ ?

திருக்காவலூருக்குப் பழமையான உயிரானவளே ! ஒளி பொருந்திய நிலவுதான் மயங்கி வருந்தத் தக்க மிகு பகையாகிய இராகு கேதுக்களாகிய பாம்புகளுக்கு அஞ்சி பாம்பின் உருக்கொண்டு பாவநஞ்சு கக்கி மனம் வெதும்பிய பேயை நீ உன் தவத்தால் மிதித்து வென்ருய் என்று உனது தவ வெற்றியில் தானும் கலந்துகொள்ள உன் திருவடியில் வந்து அடைக்கலம் கொண்டதோ அன்னையே ?

இராகு கேதுக்கள் சந்திரனுக்குப் பகை என்பது நூல் வழக்கு.

— நேரிசை வெண்பா —

உயிராந் தயையாளை ஓம்பநந்தத் தாளை
அயிரா மறைமொழி யாளைப்-பயிராரும்
சிந்துசேர் காவலூர் சேர்த்தாளைப் பாடினேன்
இந்துசேர் தாள்சேர யான் 9

## திருவடி பெறவேண்டும்

எமக்கு உயிராகும் தயை கொண்டவளும் எம்மை இடையருது காப்பவளும் ஐயத்திற்கிடமில்லாத சத்திய வேதத்தை உணர்த்துபவளும் பயிர் விளைவு நிறைந்த காவிரி பொருந்திய திருக்காவலூர் சேர்ந்தவளுமான அன்னையை அவள் தன் திருவடிகளைப் பெறுதற்குப் புகழ்ந்து பாடினேன். இந்துசேர்தாள் — சந்திரன் பொருந்திய அடி.

— கலிநிலைத் துறை —

யான் அரும்பும் பதத்தழகி மதி அரும்பும் பதத்தழகி
இனியவில்வாய்
பான் அரும்பும் படத்தழகி தேன் அரும்பும் படத்தழகி
பகலிற்ரெல்கா
மீன் அரும்பும் சிரத்தழகி விண்ணரும்பும் சிரத்தழகி
விரிவான் வீட்டைத்
தான் அரும்பும் முகத்தழகி தயை அரும்பக் காவனலூர்
தங்கினளே. 10

## தயையுடன் தங்கிய தாய்

நான் நன்மை பெறுதற்கான சொல் அழகியும் திங்கள் இலங்கும் திருவடி அழகியும் இன்பஒளி அமைந்த கதிரவன் ஒளிரும் உடை அழகியும் தேன் துளிக்கும் விருதுக் கொடி அழகியும் சூரியனைல் ஒழிந்து தளராத உடுக்கள் விளங்கப் பெற்ற சிரத்தழகியும் விரிந்த மோட்ச இன்பத்தைக் காட்டும் முக அழகியுமான அன்னை தன் தயை தோன்ற நல்ல திருக்காவலூரிலே வந்து தங்கியருளினாள்.

— தாழிசை —

தங்கள்தேக மதங்கள்தீர மறைகள்தே யுகத்
தாழ்வெலாம்
மங்கவேத அறங்கள்தேர மனங்கள்தேர
வழங்கிவான்
அங்கிலாபம் அடைந்துவாழ அடங்கலே
திருக்காவலூர்
நங்கைசேவடி நம்பிநாளும் நயந்துசூடுக
நாடியே. 11

## நங்கை சேவடி நயந்து ஆடுக

தங்கள் உடம்பின் மதங்கள் ஒழியவும் பாவங்களனைத்தும் குறைகள் யாவும் கெடவும் சத்திய வேதப் புண்ணியங்களில் நிலைபெறவும் உளந்தெளியவும் நல்வழி நடந்து மோட்சத்தில் பயன் பெற்று வாழவும் யாவரும் திருக்காவலூரில் எழுந்தருளிய மாதரசியின் திருவடித் தாமரைகளை நம்பித் தேடி என்றும் விரும்பித் தங்கள் தலையில் சூடிக்கொள்வார்களாக.

— வஞ்சி விருத்தம் —

நாடிய மேற்கதி நலங்காணு
வாடிய தென்உளம் மலிநெஞ்சே!
தேடிஅ ணங்கறு திருக்காவல்
பாடிஅ ணங்கடி பணியாயோ? 12

## நெஞ்சே வாடுகின்றது ஏன்?

வீண் எண்ணங்கள் மலிந்த மனமே! யாவராலும் தேடப்பெற்ற மேலான மோட்ச கதியின் இன்பத்தைத்

தரும் துறையைக் காணது மெலிவதனுல் என்ன பயன் உண்டு? நீ உண்மையான பயனை அடையவேண்டு மானுல் துன்பத்தை நீக்கும் திருக்காவலூரில் எழுந்தருளி யுள்ள தேவ அன்னையின் திருவடிகளைத் தேடி வணங்கு வாயாக.

அணங்கறு—அணங்கு+அறு = துன்பத்தை நீக்கும் திருக்காவலூரில் உறையும் தேவ மாது.

## காலம்

### — ஆசிரிய விருத்தம் —

பணியாத காமமுதிர் வேனிற் காலம்
பட்டாற்று தழுங்கட்கார் கால மாகி
கணியாத நரகச்ச முகுக்குங் கூதிர்க்
காலத்துள் நடுங்கியபின் வினையும் நோயும்
தணியாத பனிமுன்பின் காலமும் போய்த்
தவஞானம் பூப்பஇள வேனிற் காலம்
அணியாத திருக்காவ லூராள் அன்னை
அடிக்கடிமைப் பட்டுற்ற கால மாலோ. 13

## தவஞானம் பூக்கும் இளவேனிற்காலம்

தாழாத காமத்தை உண்டாக்கும் முதிர் வேனிற் காலம் ஒழிந்து, துன்பம் பொருது கண்ணீர் விட்டழும் கார் காலமாகி, அளவிடப் பெருத நரக பயம் சொரியும் கூதிர்க்காலத்தில் மனம் நடுங்கிய பின், தீவினை குறையாத முன் பனிக்காலமும், பிணி தணியாத பின் பனிக் காலமும் நீங்கி, தவமும் அறிவும் மலர, எவராலும் அலங்கரித்துச் சொல்ல இயலாத சிறப்பமைந்த திருக்காவலூரை ஆள் கின்ற அன்னையின் திருவடிகட்கு அடிமைப் பட்டுற்ற காலமே இளவேனிற் காலம் ஆகும்.

ஆல், ஓ, அசைகள்.

இதனுல் ஆறுவகைக் காலமும், அவ்வக் காலத்தின் தன்மையும், அவை தொடர்ந்து வருமுறையும் உணர்த் தப் பெற்றன. இளவேனிற் காலமாகிய வசந்தகாலம் அன்னையின் திருவடிகட்கு அடிமைப் பட்டுற்ற காலம் என சிறப்பித்துரைக்கப் பெற்றது. ''சித்திரையோடு வைகாசி சிறந்த நல்ல இளவேனில்''

## இடைச்சி

— ஆசிரிய விருத்தம் —

**மால் உகுத்தசெஞ் சொல் இடைச்சியே**
**வாய் அமிர்தமோ டெய்தல் உள்ளியே**
**பாலும் தீரும்நூல் வாய் அமிர்தெனுப்**
**பால் கலந்தநீர் விற்ப எய்தினுய்**
**நீலம் உண்டநின் கண்ணில் ஒன்றுமெய்ந்**
**நீர்மை யன்றிஇங் குன்பொய் செல்லுமோ ?**
**சீல அன்னம்மாள் காவ லூரிலே**
**சேர்ந்த பாலின்நீர் தோன்றி நாணுவாய். 14**

## செஞ்சொல் இடைச்சியே !

மயக்கும் செவ்விய சொற்களைக் கொண்ட இடைச்சியே உனது சொல் அமுத குணம் உடையது எனக் கருதி, பாலும் நீரும் (நிகண்டு முதலிய) நூற்களில் அமுதம் என்று நவிலப்படுவது உணர்ந்தே பாலொடு கலந்த நீரையும் நீ விலை கூற வந்தாய். நீலோற்பல மலரை ஒத்த மை உண்ட உனது கண்களில் பொருந்திய உண்மையே யல்லாமல் இங்கு உன் பொய் செல்லுமோ ? செல்லாது, ஒழுக்கத்தையுடைய அன்னம் ஆள்கின்ற திருக்காவலூரில் கலப்பிடமான இப்பாலில் நீர் பிரிக்கப்பெற்று நீ நாணமடைவாய்.

நீலம் உண்ட நின் கண் ஒன்றும் மெய் இல்; இங்கு நீர்மையன்றி உன் பொய் செல்லுமோ ? சீலம் அன்னம் ஆள்கின்ற காவலூரில் சேர்ந்த பாலின் நீர் தோன்றி

நாணுவாய் எனப் பிரித்து பாவம் என்கிற நஞ்சை உண்ட உன்னிடத்தில் ஒரு மெய்யும் இல்லை; இவ்விடத்து மெய்ம்மை செல்லுமேயன்றி உன் பொய் செல்லாது. ஒழுக்கத்தையுடைய அன்னம் போல்பவளாகிய தேவ மாதா ஆள்கின்ற இத்திருக்காவலூரிலே நீ சேர்ந்த தன்மையால் நன்மை உனக்கு உண்டாக இப் பொய்ம்மைக்கு இனி நீ வெட்கம் அடைவாய், என்று பொருளுரைக்கலாம்.

சிலவகைப் பெண்களைப் பார்த்துக் காமுற்ற இளைஞர் தம் காமக் குறிப்புத் தோன்ற அவர்களோடு சொல்லாடும் உலகியல் தழுவியதாக வரும் பாடல்களில் இப்பாட்டு இடைச்சியார் என்ற தலைப்பில் வருவது. இடைச்சாதி பெண் மீது காமுற்ற ஓர் இளைஞன் கூற்றுக அமைவது இது. சுவாமி வீரமாமுனிவர் இடைச்சியார் என்ற தலைப்பிலே மேற்படி சம்பிரதாயக் காமக் குறிப்பு உரையாடலை விடுத்து அறிவுக்கு விருந்தாகும் அரிய உரையாடலை சிலேடை நயம்பட அமைத்திருப்பது நோக்குதற்குரியது.

நீர் கலந்த பால் என்னுது "பால் கலந்த நீர்" என்றது கலப்பில் நீரின் மிகுதி தோன்றுதற்கு. நீர் கலந்த பாலைக் கண்டவிடத்து "இது என்ன ஒரே தண்ணீர்" என்று கூறும் வழக்கியலோடு இது பொருந்தி யிருத்தல் காண்க.

## மறம்

### — தாழிசை —

**நாணி பூட்டிய சாபமேந்திய வீரவெங்கர வேடனுர்**
**நாணவுட்சுடு தீயசொற்கொடு நம்மை எள்ளினர்**
**ஆரடா ?**
**சேணிபூட்டிய கொம்பரேந்திய தேறலூட்டிய**
**காவலூர்ச்**
**சீரிஞள்ஒரு தேவமான் ஒரு சீயமேகரு உற்றகால்**

பாணிபூட்டிய வெங்கடார்மலை பற்றிஎங்குடில்
எய்தினள்
பாதம்ஊன்றிய வாயில்தாமரை பூத்தகாடென வாயடா
தூணிபூட்டிய அம்புபோலவள் புக்கசிற்றில
அலர்ந்தபூத்
தூயதேனுக இன்னும்வாடிலை சூழ்ந்துவாழ்த்திட
வண்டரோ 15

## வெல்லை மலையின் மாண்பு

இறைவன் திரு அவதாரஞ் செய்தது வெல்லை மலையில், அவ்வெல்லை மலையிலிருந்த ஓர் மறவன் மற்றொரு வேடனை நோக்கிக் கூறுவதாக இச்செய்யுள் அமைந்தது. இது மறம் என்னும் துறையின் பாற்படும். வெல்லைமலை மறவன் தன்னை இகழ்ந்த வேறொரு வேடனை நோக்கிக் கூறுகின்றான் என்றறிக. அவன் கூறுவது:

நாணேற்றிய வில்லை வீரம் பொருந்திய கையிலே கொண்ட வேடனாகிய நான் நாணும்படியாக என்னை இகழ்ந்தவன் நீ யாரடா? திருக்காவலூரில் எழுந்தருளிய ஒரு தெய்வமான் சுதனாகிய சிங்கத்தைக் கருக்கொண்ட காலத்தில் எங்கள் மலையை விரும்பி எமது சிறு இல்லத்திற்கு வந்தாள் என்பதை அறியாயோ? அவள் பாதத்தை வைத்த அவ்வீடு தாமரை மலர் பூத்த காட்டைப்போல் ஆயிற்றே! அம்புக்கூட்டில் நுழைந்த அம்பைப்போல் அவள் புகுந்து வாழ்ந்திருந்த சிறிய வீடாகிய ஒரு மலரானது வானவராகிய வண்டுகள் சூழ்ந்து வாழ்த்தும்படி தூய அற்புதங்களைத் தேன் துளிகளாகத் துளித்துக் கொண்டு இன்னமும் வாடவில்லையே!

எங்குடில் என்றது வெல்லை மலையில் சுவாமியைத் தேவமாதா பெற்ற குகையை; அது சுவாமி மனிதவுருவங் கொண்ட காலத்து வானவர் ஆயர் முதலியவர் வந்து நிறைய, தாமரை பூத்த காடென விளங்கிற்று. அவள் புகுந்த சிற்றில் நசரேத்து நகரிலே திருக்குடும்பம் வசித்த வீடு. அவ்விடாகிய மலர் வாடவில்லை. அது இத்தலி நாட்டில் லொரேத் என்னுமிடத்தில் அழியாது அற்புதமாய் விளங்குகின்றது என்க.

மலைக்கு விசேடணமாக நீரையும் மலரையும் கூறும் பான்மை பற்றி "பாணி பூட்டிய வெங்கடார்மலை" என்று கூறப்பட்டது. நீரால் அழகு பெற்று மலர்களோடு இலங்குகின்ற எங்கள் மலை என்றாயிற்று.

— வஞ்சித்துறை —

வண்டிமிரும் வாய்மலர்க்காக்
கண்டிமிரும் காவனலூர்
பண்டினிதாள் பாவைபணிந்
தண்டினரே அண்டரரோ 16

## வானுகத்தவர் இவர் எனல்

வண்டுகள் ஒலிக்கும் மலர்கள் வாய்ந்த சோலைகள் இடந்தோறும் வளரப்பெற்ற திருக்காவலூரைத் தொன்று தொட்டு இனிதாக ஆளும் நங்கையை வணங்கி அண்டின வரே வானுலகத்தவர்.

வண்டிமிரும் வாய் மலர்க்கா - வண்டு இமிரும் வாய் மலர்க்கா - வண்டுகள் ஒலித்திருக்கப் பெற்ற இடமுடைய மலர்கள் வாய்ந்த சோலைகள். கண்டிமிரும் காவனலூர் - கண் திமிரும் நல் காவல் ஊர் — இடங்கள் தோறும் சோலைகள் வளரப்பெற்ற நல்ல திருக்காவலூர்.

— கட்டளைக் கலித்துறை —

அண்ட வெள்ளம் புலியேந்த அரக்கவிழ
அம்புயத்தாள்
கண்ட கண்விம் மிதங்கொண் டிமைப்பாமோர்
கதிர்க்கலையாள்
விண்ட வழ்மீன் முடியாள் திருக்காவலூர் மேவரசாள்
மண்ட ழுகுண் டகல்உம்பர் கள்என்றும்
மகிழ்வனவே. 17

## கண்கள் கண்டு மகிழும்

வானத்திலுள்ள வெள்ளிய சந்திரன் தாங்கிய செந் நிறத்தோடு மலர்ந்த தாமரை மலரையொத்த திருவடி களைக் கண்ட கண்கள் வியந்து, விளக்கம் பொருந்திய

ஒப்பற்ற கதிரவனுகிய ஆடையை உடையவளும் வானத்தில் தவழ்கின்ற நட்சத்திரங்களாகிய முடியை உடையவளுமாகிய திருக்காவலூர் அரசியன் மிக்க அழகினை உண்டு பூவுலகில் வானவரைப் போல மகிழும். கண்கள் அவள் அழகினை உண்டு வானவரைப் போல மகிழும் என்பதாம்.

— ஆசிரிய விருத்தம் —

மகிழார் உலகில் அணுகார் கதியின்
மடிவார் துயரில் அருளார் உன்தாள்
புகழா தவரே பணியா தவரே
புடைநீ காவா துய்யா உயிரே
திகழார் மணிபோல் அணுபூஞ் சினைக்காத்
திருக்கா வனநல் லூரூர்ந் தவரே
நிகழா வருளும் இகழா மருளும்
நிசியற் றுயிரே விளங்கும் பானே. 18

## உயிரில் விளங்கும் ஒளியே : உன்னையன்றி உய்தலில்லை

ஒளி பொருந்திய இரத்தினங்களைப் போன்ற அழகைச் செய்கின்ற மலர்களை உடைய கிளைகள் வாய்ந்த சோலைகளைக் கொண்ட சிறந்த நல்ல திருக்காவலூரை அடைந்தவர் அருளால் விளங்கி, மருளை இகழ்ந்து, பாவ இருள் நீங்க அவர் உயிராய் விளங்கும் சூரியனே! அருள் நிறைந்த உனது பாதத்தைப் புகழாதவரும் வணங்காதவரும் இவ்வுலகில் மகிழ்ச்சி அடையார்; பரகதியில் சேரார்; துன்பத்தில் மடிவார்; பக்கத்திலிருந்து நீ காப்பாற்றுமல் உயிர்கள் பிழையா.

— தாழிசை —

பாலெழி பூம்பொழில் நீழலே, பாவொளி புட்குரல் ஓதையே
தேன்இழி மும்மலர் வாசமே சேர்ந்தணி செய்திருக் காவலூர்
வான்இழிந் திங்குற உம்பரும் வானுற இம்பரும் வீதியாய்
மீன்எழில் ஊர்சிற நாயகி வீற்றிவண் எய்திய காலையே 19

## விண்ணுக்கும் மண்ணுக்கும் வீதி சமைத்தனள்

சூரிய கதிரை ஒழித்த பூஞ்சோலையும், பாட்டுக்கள் ஒலிக்கத்தக்க பறவையின் நாதமும், தேன் ஒழுகும் மும் மலரின் வாசனையும் சேர்ந்து அணி செய்கின்ற திருக் காவலூர், நட்சத்திரங்கள் அழகாகத் தவழப்பெற்ற சிரத்தையுடைய அரசி பெருமையுடன் இவ்விடத்து வந்து சேர்ந்த காலத்தில்தானே வானவர்கள் மோட்சத்திலிருந்து இறங்கி இங்கு வரவும், இவ்வுலகத் தார் மோட்சத்திற்குப் போகவும் வழியாயிற்று.

— ஆசிரிய விருத்தம் —

**காலையுடு மாலைவிது ஒத்திருள் கெடுத்தருள்**
**கொடுத்துயிர் களித்தல் நன்றே**
**சோலை அணி காவலினள் கோவிலினள் சோதிமடி**
**சோமனடி தாரைமுடி யாள்**
**வேலைஅலை வற்றனும் மிடர்கனல் குளிர்ப்பினும்**
**விருச்சிகன் இருட்டிடினும் நான்**
**மாலைஇருள் திங்களொரு பாதியிரு பாதமொரு**
**வாதவிரு மாலையொரு வேன்.** 20

## பாத மலையைப் பற்றிக்கொள்வேன்

சோலைகளால் அலங்கரிக்கப் பெற்ற திருக்காவலூரை யுடையவள் தேவனுக்கு ஆலயமானவள், சூரியனாகிய ஆடையையும். சந்திரனாகிய பாதத்தினையும், நட்சத்திர மாகிய முடியையும் உடையவள், விடிவெள்ளியையும் மாலை மதியத்தையும் போன்று மக்களின் மன இருளை அழித்து, வேண்டும் வரந்தந்து அவரை மகிழ்வித்தல் நன்றாயிருக் கிறது. கடல் அலை நீர் வற்றினும் வன்மையுள்ள நெருப்புக் குளிரினும் கதிரவன் இருளினும் நான் உனது பாதங்களாகிய மாலையை ஒருபோதும் நீங்கேன்.

"மாலை இருள் திங்கள் ஒரு பாதி இரு பாதம்" என்பதால் மாலைக்காலத்து எழும் சந்திரனது ஒரு பங்கினை மிதித்த அன்னையின் பாதங்களின் உயர்வு உணர்த்தப் பெற்றது.

### கைக்கிளை

— கட்டளைக் கலித்துறை —

ஒருவா திங்கள் குளிர்ம்பூந் தானணிந்தாள்
ஒருகலையாய்த்
திருவாய் முகமொத் தாயார்ந்த கலையாய்ச்
செகங்குளிர்க்கும்
தருவாய் நிழற்காவல் ஊர்வதிந் தாயினித்
தான்சுடவோ
மருவா தெக்காலமும் இங்கிலைக் கைக்கிளை
மாலையதே 21

## சந்திரனே உனக்குச் சுடும் தன்மை உளதோ?

ஒரு தலைக்காம வயத்தவரைச் சந்திரன் சுடும் என்பது நூல் வழக்கு. அது தேவ அன்னையைச் சார்ந்திருக்கும் இயல்பால் சுடுந் தன்மை இழந்தது குறித்து ஒருவன் கூறுகின்றான்;

"சந்திரனே ஒற்றைக் கலையையுடைய உன்னைத் திருத்தாயாகிய தேவ அன்னை தன் குளிர்ச்சி பொருந்திய மலர்ப்பாதத்தில் நீங்காமல் தரித்துள்ளாள். நிறைந்த கலைகளோடு நீ அவளது முகத்தை ஒத்திருக்கின்றாய். இவ்வுலகைக் குளிர்விக்கும் அத்தேவதாயான தருவினால் வாய்ந்த நிழலையுடைய திருக்காவலூரில் தங்கினாய், ஆதலால் சந்திரனே உனக்குச் சுடுதற்கு இயலுமோ? எக்காலும் உனக்குப் பொருந்தாது. ஒருதலைக் காமமாகிய நோயும் இங்கு இல்லையாம்.

— மடக்குத் தாழிசை —

மாலை[1] வாங்க வந்தனன் மாலை[2] தந்து போயினான்
மாய[1] மாற வந்துதான் மாய[2] மேறி ஏகினான்
வேலை[1] யுண்டும் ஆண்டருள் வேலை[2] நல்கி
னான்கையில்
விண்டு[1] யிர்த்து மீண்டடி விண்டில்[2] ஊன்றி ஏறினான்

**பாலை[1] புக்கு நோற்பகை பாலை[2] நீக்கி நோற்றனன்**
**பாசம்[1] விக்கு பாசமாய்ப் பாச[2] மாய்ந்து மாய்ந்தனன்**
**காலை[1] வேந்தன் ஒத்தநின் காலை[2] யார் அறிந்துள்ளார்**
**காவலார்ந்த காவலூர்க் காவலாய காந்தையே 22**

மாலை[1] -மயக்கம், மாலை[2] - வேத ஒழுங்காகிய மாலை
மாயம்[1] - தீமை, மாயம்[2] - மாய், அம்-கொல்லத்தக்க நீரையுடைய கடல்

வேலை[1] - கடல், வேலை[2] - சமயம்
விண்டு[1] - மலையில், விண்டில்[2] - மேகத்தில்
பாலை 1 - பாலை நிலம், பாலை[2] - உரிமை
பாசம்[1] - அன்பு, பாசம்[2] - பேய்
காலை[1] - காலை நேரம், காலை[2] - கான்முளையை, மகனை

## நின் திருக்குமரன் பெருமையை அறிவார் யார்?

சோலையின்கண் இருள் தங்கிய திருக்காவலூர்க்குக் காவலாகிய நங்கையே, உனது மகன் பாவ மயக்கத்தைத் தீர்க்க வந்தவனாகிய வேத ஒழுங்கைத் தந்துபோனான். கடலிலே காற்று தீமையாக மாற கொல்லத்தக்க நீரையுடைய அக்கடலில் ஏறிச் சென்றனன். தன் சீடராகிய இராயப்பர் கடலால் உண்ணப்பட்டவராகியும் அவ்விடத்தில் தனது கிருபையால் உரிய சமயத்தில் தன் கையை நீட்டி அவரைக் காப்பாற்றினான். மலைக் குகை வீட்டில் பெற்றும், மேகத்தில் கால் வைத்து வானுலகு சென்றான். பாலை நிலத்தில் சென்று ஏரோதனிடம் உண்டான பெரும் பகை உரிமையை ஒழித்து அவனைப் பொறுத்தான். அன்பினால் திருவுள்ளத்தில் தெளிந்து பசாசினைக் கட்டுகின்ற கயிறாக மரித்தான். காலையில் எழும் சூரியனை ஒத்த உனது திருக்குமாரனின் பெருமையை அறிந்துள்ளவர் யார்?

வண்டு

— நேரிசை வெண்பா —

காந்தட்கைக் கஞ்சத்தாள் காவிக்கண் ணும் பல்வாய்
வேய்ந்தலந்த காவனலூர் மென்கொடியே-ஈந்தமது
உண்ணளிகாள் சொன்மினி ரொத்துளதோ பூவுலகிற்
பண்ணளிபூந் தீந்தேன் பனித்து 23

## வண்டுகளே சொல்லுங்கள்

கையாகிய காந்தளும் பாதங்களாகிய தாமரையும் கண்களாகிய குவளையும் வாயாகிய ஆம்பலும் பொருந்தி மலரப் பெற்ற திருக்காவலூர்த் தேவ அன்னையாம் மென் கொடி அம்மலர்களால் கொடுக்கின்ற தேனை உண்ணும் வண்டுகளே பூவுலகில் குளிர்ச்சி பொருந்திய பூக்களி லுள்ள மதுரம் பொருந்திய தேனை ஒத்திருக்கின்றதோ? வருந்தி ஆராய்ந்து சொல்லுங்கள்.

— நேரிசை யகவல் —.

பனிமதுப் பதுமம் தன்னிகல் மறந்து
குனிமதிப் பிறைமேல் கொங்குமிழ்ந் தவரவும்
தொல்லையந் தற்பகை யொழிந்துசூ டொழிந்து
எல்லையும் என்னுளத் திளம்பனி விசவும்
தொற்பகைப் பரிதி சுடரமுன் றேலா
நற்பகல் நண்ணிய உடுஒளி நல்கவும்
அவைஒருங் கணிதே வருங்கொடி அலரிருச்
சுவைஒருங் கமைகனி சுமந்துயர் நிமிரவும்
பெருந்திருக் கலாபப் பீலிக ளாடும்
அருந்திருக் காவலூ ரகத்துக் கண்டேன்
கண்டுளம் பிணித்தகுங் கனிதேன்
உண்டுளம் பிரிவினில் ஊழியும் அரிதே 24

## தேவ கொடியும் தீங்கனியும்

அழகிய பெரிய தோகையையுடைய மயில்கள் ஆடு கின்ற அருமையான திருக்காவலூரிடத்து, குளிர்ச்சி

பொருந்திய தேனையுடைய தாமரை தன் பகையை மறந்து வளர்ந்த சந்திரனாகிய பிறைமேல் வாசனையை உமிழ்ந்து மலரவும், சூரியன் தன் பழைய பாம்பின் பகையை நீங்கி வெப்பம் நீங்கி என் மனத்தில் இளமை பொருந்திய குளிர்ச்சியை வீசவும், பழமையாகிய பகையையுடைய சூரியன் ஒளிவிட அ.தன் முன்பு தோல்வி அடையாமல் நண்பகலில் பொருந்திய நட்சத்திரங்கள் பிரகாசத்தைத் தரவும், சந்திர சூரிய நட்சத்திரங்களை ஒருங்கே தரித்த அருமையான தேவகொடி தன் மலர் அழியாது சுவையெல்லாம் தங்கிய ஒரு கனியைத் தாங்கி மேலே நிமிர நான் பார்த்தேன். அங்ஙனம் பார்த்து என் மனத்தைப் பிணித்து அக்கனி சொரியும் தேனை உண்டேன். இனிமேல் என் உள்ளம் இப்பெரிய அனுபவத்தை என்றும் பிரிதல் இல்லை.

தேவகொடி என்றது தேவதாயையும் அலரிருவென்றது கன்னிமை கெடாமையையும் கனி என்றது தேவசுதனையும் கனிதேன் என்றது அருட்கொடையையும் முறையே உணர்த்திற்று.

குறம்

— ஆசிரியச் சந்த விருத்தம் —

அரித்தை அறிந்த திடத்தை அறைந்த
  குடித்தி அருங்குறம் அம்மே கேள்!
வரித்தன வண்டணி பற்றிய அங்கை
  வரிக்குறி கண்டுழி காவனலூர்
தரித்த அணங்கு மிதித்தெழு திங்கள்
  தரித்த பதந்தொழு கையேநாப்
பரித்த வணங்கிய பற்றள ஒண்பொருள்
  பற்றி ஒருங்குயிர் வாழ்வாயே 25

**பதந்தொழு கையே!**

இது குறம் குறத்தி ஒரு நங்கையின் கை பார்த்துக் கூறுவதாகப் பாடப் பெறுவது. திருக்காவலூரில் உள்ள ஒரு பெண்மணியின் கைபார்த்து அவள் கூறுகின்றாள்:

அம்மா பச்சை குத்துதலை அறிந்தவளும் உண்மையை உரைப்பவளுமான குறத்தியாகிய எனது அருங் குறத்தைக் கேட்பாயாக. சித்திர வேலைப்பாடமைந்த பொன் வளையல் அணிந்த உன் கையிலுள்ள இரேகைகளாகிய குறியைக் கண்டவிடத்து, வானில் எழும் சந்திரனை மிதித்த திருக்காவலூர்த் தெய்வப் பெண்ணின் பாதங்களைத் தொழுகின்ற கையே இவை. உனது நாவும் சிரமும் அவளை முறையே புகழ்ந்து வணங்கிய ஆசையின் அளவு நீ நன்மைப் பொருள் பெற்று வாழ்வாயாக.

— கட்டளைக் கலித்துறை —

வாழா வழங்கா வினைக்கடல் நீந்தா வருந்துவிர்காள்
தாழா திருக்காவ லூர்சென் றணுக தழங்கியநீர்
ஆழ்ஆர் கலிக்கள வுண்டேனும் இல்லை அமரர்தொழும்
கேழ்ஆர் அடியணங் கின்புறும் கேண்மை
கிளர்கடற்கே 26

## அலைகடலுக்கு அளவுண்டு ;
## அன்னை அன்புக்கடலுக்கு அளவில்லை

வாழாமலும் பிறர்க்கு வழங்காமலும் தீவினை என்னும் கடலை நீந்திக் கடவாமல் வருந்துபவர்களே! காலந் தாழ்த்தாது திருக்காவலூர் சென்று அதை ஆளும் தலைவியின் திருவடிகளைச் சேருங்கள். முழங்கும் ஆழ நீர்க் கடலுக்கு அளவு உண்டாயினும் வானவர் வணங்கும் திருவடிகளையுடைய அத்தேவமாதின் உறவால் மிகும் பேரின்பக் கடலுக்கு அளவில்லை.

— நேரிசை வெண்பா —

கடற்கரை சூழ்நாணுக் கருத்தழிக்கும் பாவ
உடற்கரை சூழாவி உளைவீர் - மிடற்கரைகொண்
டாவலூர் வான்கதிசேர்ந் தாங்குவப்பிர் நாயகிசேர்
காவலூர் சேர்ந்தக் கடை. 27

## வான்கதி சேர்ந்து மகிழ்வீர்

கடல்போல எல்லைசூழத் தோன்றுமல் உள்ளதும், நல்ல நினைவைக் கெடுக்கின்றதுமான, பாவத்தைக் கொண்ட உடலாகிய கரை சூழ்ந்த உயிர் வருந்துவோரே, நீவிர் வானரசியின் திருக்காவலூரை அடைந்தால் உறுதிச் சொல்லாகிய ஞானபோதம் பெற்று எவரும் விரும்பிச் செல்கின்ற மோட்ச கதியைச் சேர்ந்து அங்கே மகிழ்வீர்.

மிடற்கரை கொண்டாவலூர் - மிடல் கரைகொண்டு ஆவல் ஊர். வான்கதி சேர்ந்தாங்குவப்பீர் - வான்கதி சேர்ந்து ஆங்கு உவப்பீர்.

— ஆசிரியச் சந்த விருத்தம் —

கடைந்த மணிஅணி கடந்த வடிஒளி
கலந்த உருவொடு நீபயந்
தடைந்த திருமகன் அகன்ற பொழுதுயிர்
அகன்ற உடல்என நோவஉள்
உடைந்த உனதிடர் உணர்ந்து நமதிடர்
உழங்கல் ஒழியிய காவலூர்
மிடைந்த அருள்நலம் விளைந்த திருமகன்
மிளிர்ந்த வடிவடி காட்டவே 28

## திருவடிகாட்டுக

திருக்காவலூரில் பொருந்திய அருள் மயமான அன்னையே! கடைந்தெடுக்கப் பெற்ற இரத்தினங்களின் அழகை வென்ற பேரழகுடன் ஒளி கூடிய வடிவோடு நீ பெற்றெடுத்த திருக்குமரன் மூன்று நாட்களாய் உன்னைப் பிரிந்தபோது உயிர் நீங்கின உடல்போல வருந்த மனமுடைந்த உனது துன்பத்தை எண்ணி எங்களுடைய துன்பமும் கலக்கமும் ஒழிய இவ்வுலகில் நன்மை உண்டாதற்கேதுவாகிய உனது திருக்குமரனுடைய மிளிர்ந்த அழகினையுடைய பாதங்களைக் காட்டுக.

காட்ட என்பது வியங்கோள் பொருளில் வந்தது.

— கட்டளைக் கலிப்பா —

காட்டில் நிற்பினும் மூவுல கேந்திய
கையி லேஅடை நின்மகன் ஏந்திஅன்
பூட்டி இன்சுவை யாகஐ யாயிரர்
உண்டுவாழ விருந்து வழங்கினுன்
நாட்டில் ஆண்டுநின் காவலி தாகவே
நாகு திங்கள் அணிபணி தாளிஉன்
வீட்டில் என்னை விளித்தொரு நாளையோர்
விருந்து அளிப்ப எனக்கிரங் காய்கொலோ? 29

## விருந்து செய்ய இரங்காயே !

இளஞ் சந்திரனுகிய அணிகலன் கொண்ட பதத்தினளே! உனது திருக்குமரன் வனத்தில் இருந்தாலும் மூன்று உலகங்களையும் ஏந்திய தன் கையால் அப்பங்களைத் தாங்கி இனிய சுவை அவற்றில் உண்டாக ஐயாயிரம் பேர் புசித்து வாழும்படி அன்புடன் ஊட்டி விருந்து செய்தான். உனது திருக்காவலூர் இதுவாக, நீ நாட்டிலிருந்து ஆட்சி செய்தும், ஒரு நாளைக்கு என்னை அழைத்து உனது வீட்டில் எனக்கு விருந்து அளிக்க இரங்காயோ ?

சேசுபரன் ஐந்து அப்பங்கொண்டு ஐயாயிரர்க்களித்த அற்புதம் இங்குக் குறிக்கப்பெற்றது. நினது மகன் காட்டிலிருந்தும் ஐயடை கொண்டு ஐயாயிரம் பேருக்கும் விருந்து வழங்கினன். நீ நாட்டிலிருந்து எனக்கு ஒருவனுக்கு ஒரு நாளைக்கு விருந்து தருதல் அரிதாமோ தாயே என்றபடி.

### இரங்கல்

— ஆசிரிய விருத்தம் —

இரங்கொழியா வினைக்கடல் நீந்த உன்அன்
பெனும்மிதவை ஏறிமறை விளக்கே நோக்கி
நெருங்கொழியா அவாவிரவின் நீந்தி அப்பால்
நீஆளும் திருக்காவ லூர்சென் றின்பம்

ஒருங்கொழியா மனத்திருளே ஒழிந்து மேல்வாழ்
உம்பர்நாட் டெழுங்கரையைக் கண்டேன்
என்றேன்
மருங்கொழியா ஆதவனும் மதியும் மீனும்
வந்தணிந்த உன்வடிவம் கண்ட போதே 30

## நின் வடிவங்கண்டபோது வானுலகக் கரையுங் கண்டேன்

என் தேனே! நீ ஆட்சி செய்யும் திருக்காவலூர் சென்று இடையில் நீங்காது சூரியனை ஆடையாக அணிந்து சந்திரனையும் நட்சத்திரங்களையும் காலணி தலையணியாகப் பூண்ட உனது திருவுருவத்தை நான் பார்த்தபோதே அஞ்ஞானம் அடர்ந்த நீங்காத ஆசை என்னும் இரவிலே அழுதற்கேதுவாகிய நீங்காத பவக் கடலை நீந்த உன் அன்பு என்னும் தெப்பத்தில் ஏறி வேத விளக்கையே பார்த்து அக்கடலைக் கடந்து அப்புறம் இன்பம் யாவும் நீங்காமல் மன இருள் மட்டும் நீங்கி இனி நான் வாழவிருக்கும் வானுலகத்திற்குச் செல்லுதற்கான கரையைக் கண்டேன்.

## தழை

— கட்டளைக் கலித்துறை —

போதவிழ் பூங்கொடியாய்ச் செங்கதிர் பூண்டாள்
பொற்றழையா
மீதவிழ் மின்தழையாகக் கொண்டாள்
மஞ்ஞையாய் வெண்மதியைத்
தாதவிழ் தாமரைத் தாள்தழை யாவுற்ருள் தாயரசாள்
சீதவிழ் முத்தழை நிழலில் காவலூர் சீர்த்ததுவே. 31

## முத்தழை நிழலில் காவலூர் சிறந்தது

எமக்குத் தாயாகிய திருக்காவலூர் அரசி பருவத்தில் மலர்ந்த பூங்கொடியாகக் கதிரவனை அழகிய தழையாகக் கொண்டாள். மயிலாக மேலே ஒளி விரியப் பெற்ற நட்சத்திரங்களைத் தழையாகக் கொண்டாள். மகரந்தப் பொடிகளை அவிழ்க்கும் தாமரை மலராக வெள்ளிய சந்திரனைத்

தழையாகக் கொண்டாள். குளிர்ச்சி விரியப் பெற்ற இம்மூன்று தழைகளினுடைய நிழலில் திருக்காவலூர் சிறப்புப் பெற்றது.

அம்மானை

சீர்த்ததிருக் காவல்நல்லூர்த் தேவணங்கு
தாட்கமலம்
நீர்த்ததிருத் திங்கள்மேல் நின்றனகாண் அம்மானை
நீர்த்ததிருத் திங்கள்மேல் நின்றனவென் றுமாகில்
ஆர்த்ததிரு வண்டுவப்ப ஆங்கலரா அம்மானை ?
போர்த்ததிருச் சோதிஇன்பப் போதலரும் அம்மானை

போதலரும் தன்சினைக்காப் பூங்காவ லூர்அரசி
ஆதவனைத் தூசாய் அணிந்தனள்காண் அம்மானை
ஆதவனைத் தூசாய் அணிந்தனளென் றுமாகில்
மாதலர்பூ மேனிநலம் வாடாதோ அம்மானை ?
மாதருள்நீர் மூழ்கிரவி வாய்குளிரும் அம்மானை

வாய்குளிர்பூங் காவல்நல்லூர் வாழவரம்
பெய்இறைவி
மீகுளிர்வாய் மீன்முடியை வேய்ந்தணிந்தாள்
அம்மானை
மீகுளிர்வாய் மீன்முடியை வேய்ந்தணிந்தாள்
ஆமாகில்
தூய்குளிர்வாய் மீன்கதிர்முன் தோன்றுமோ
அம்மானை ?
தூய்குளிர்வாய்ச் சார்ந்தார்க்குத் தாழ்வில்லை
அம்மானை 32

## வினாக்களும் விடைகளும்

வினா: மிருபுகழ் அமைந்த நல்ல திருக்காவலூரிலே எழுந்தருளிய தேவ பெண்ணினுடைய பாதங்களாகிய தாமரை மலர்கள் குணம் பொருந்திய அழகிய சந்திரன் மேல் நின்றன. குணம் பொருந்திய சந்திரன்மேல் நின்றனவென்று சொன்னோமானால் தாமரைக்குச் சந்திரன் பகையாகவே ஆரவாரிக்கும் அழகிய வண்டுகள் களிக்க அவை மலராதோ?

விடை: மலரும், மலரும். அவள் போர்த்துக் கொண்ட அழகிய சூரியனால் இன்பத் தாமரைகள் அவசியம் மலரும்.

வினு : அரும்புகள் பொருந்திய குளிர்ந்த கிளைகளை யுடைய சோலைகளாற் பொலிந்த நல்ல திருக்காவலூரின் அரசி சூரியனை ஆடையாக அணிந்தாள். சூரியனை ஆடையாக அணிந்தாள் என்று சொன்னேமாயின் அவளு டைய நொய்மையின் மேனிக்கு வெம்மை பொருந்தா தாகவே அந்நங்கையின் அலர்ந்த பூவையொத்த திரு மேனியின் சீர்மை வாடிப்போகாதோ ?

விடை : வாடிப்போகாது. அவளது கிருபை என்னும் நீரில் மூழ்கிய சூரியன் அவ்விடத்தில் குளிர்ச்சியைப் பெறும். எனவே திருமேனிக்கு வாட்டம் இல்லை.

வினு : இடமெலாம் குளிர்ந்த பொலிவுள்ள நல்ல திருக்காவலூரிலே தன்னை அடுத்தவர் வாழும்படி வரம் பொழிகின்ற அரசி ஆகாயத்திலுள்ள குளிர்ச்சி பொருந் திய நட்சத்திர முடியை அணிந்தவளாயின் சூரிய வெளிச் சத்தில் நட்சத்திரங்கள் தோன்ருதாகவே பரிசுத்தமான குளிர்ச்சி வாய்ந்த அந்த நட்சத்திரங்கள் அவளது போர்வையாகிய சூரியன் முன் தெரியுமோ ?

விடை : அவ்வன்னையின் குளிர்ந்த இடத்தைச் சார்ந் தார்க்குக் குறைவில்லை. ஆதலின் சூரியன் முன்னும் அந் நட்சத்திரங்கள் விளங்கித் தோன்றும் என்க.

— நேரிசை வெண்பா —

**மானெய்தான் வான்பெற்ருன் வான்பெருன் காவலூர்**
**மானெய்தான் மானுய் வரம்பெற்றுத் - தான்அரியை**
**ஆனைமுனர் வைத்தீன்ருள் ஆயிரம்வாள் வேந்தனையோர்**
**தானையாக் கொண்டெழுந்தாள் தான் 33**

## காவலூர் மான் எய்தான் வாள் பெருள்

பெண்ணை நாடாதவன் மோட்சத்தை அடைந்தான். ஆனுலும் திருக்காவலூரை ஆளும் அற்புதப் பெண்ணை அடையாதான் மோட்சம் அடையான். ஏன் ? அவள் ஓர் பெண்ணுகியும் பிற மாதர்களைப் போலன்றி அளவற்ற

தேவ வரங்களை அடைந்து கடவுளாகிய சிங்கத்தை மாடுகள் அடையும் கொட்டிலில் பெற்றவள். ஆயிரங் கதிர்களை யுடைய சூரியனை ஆடையாகக்கொண்டு எழுந்தவள். ஆனைமுனர் வைத்தீன்ருள் — ஆன் ஐ முன்னர் வைத்து ஈன்ருள் - மாட்டின் அழகிய இடத்தில் ஈன்று வைத்தவள்.

— ஆசிரிய விருத்தம் —

தானுகத் தடங்காதாய் மேனுகத்
    தடங்காவார் தனையன் தாயோ
டுனுகத் தானுகத் திழிந்துதவ
    எழுந்துதவ உரிமை காட்டி
வானுகத் தேனுகத் திருவரங்கள்
    தருவரங்கே வந்தா ரன்ருே
கானுகப் பூநாகத் தரும்புதிரு
    விரும்புதிருக் காவ லூரே 34

## காவலூரே மலர் பொழிந்து வரவேற்க!

எவரும் விரும்பும் திருக்காவலூரே! மேலாகிய வானுலகத்திலும் அடங்காத சுதனுகிய கடவுள், தான் உடம்பில் அடங்காத பொருளாகியும், எமக்கு நன்மையைத் தர வானுலகிலிருந்து இறங்கி தசையுள்ள மனித உடம்பைக் கொண்டு பூமியில் அவதரித்து, தம் தாயுடனே மிகவும் உரிமை காட்டி, வானுலகத்தார்க்கே உரிமையான அப்படிப் பட்ட தேனைப்போல திருவரங்களைக் கொடுப்பவராக அவ்விடத்தே வந்தனர் அன்ருே? வாசனை உண்டாகப் பல மலர்களையும் புன்னையின் அரும்புகளையும் நீ பொழிவாயாக.

— ஆசிரிய விருத்தம் —

காவல் அகத்தாளும் தேவ முகத்தாளும்
கடவுள் உயிர்த்தாளும் மடவுள் உயிர்த்தாளும்
ஓவல் அறுத்தாளும் ஆவல் வெறுத்தாளும்
உலகு புரிந்தாளும் அலகு பரிந்தாளும்

தேவ வரத்தாளும் காவ கரத்தாளும்
திசையை அளித்தாளும் நசையை ஒளித்தாளும்
பாவி கணித்தாளும் ஆவி பிணித்தாளும்
பண்டினை அற்ருளும் தொண்டனை உற்ருளே 35

## என் அகத்தும் உறைவாள்

திருக்காவலூராகிய இடத்தை உடையவளும், இறை மகனுக்கு உறைவிடமானவளும், அத்தேவனை ஈன்ற வளும், மடமை பொருந்திய மனத்தை நீங்கினவளும், வருத்தத்தை அறுத்தவளும், ஆசையை வெறுத்த வளும், உயர்ந்தோரால் விரும்பப்பட்டவளும், மேன்மை யின் அளவை அறுத்தவளும் எல்லையற்ற மேன்மையுடை யவளும் அபயந்தந்து காக்கும் கையினையுடையவளும், எத்திக்கிலும் உள்ளவர்களை மீட்டவளும் ஆசையை நீக்கியவளும் பாவியாகிய என்னைக் காப்பாற்ற எண்ணிய வளும், எனது உயிரைத் தன் பாதத்தில் கட்டியவளும், பழமையான வருத்தத்தை நீக்கியவளுமாகிய அன்னை என் அகத்தும் எழுந்தருளினள்.

— ஆசிரிய விருத்தம் —

தாளணிந்த மதிமுதலாத் தமியனுமக்
  கமலத்தாள் தாங்கி லேனே ?
கோளணிந்த குழலணிதார் குடைவண்டாப்
  புகழ்பாடி மதுவுண் ணேனே ?
வாளணிந்த வினைப்படைவெல் வலிச்சிங்கம்
  ஈன்றவொரு மானாய் வந்தாள்
கேளணிந்த காவனலூர்க் கிளர்புனத்துப்
  பசும்புல்லாக் கிடவேன் நானே ? 36

## பசும் புல்லாகும் பேறு கிடைக்குமோ ?

தீவினையாகிய வாளைத் தரித்த பேய்ப் படையை வென்ற கடவுளாகிய வலிய சிங்கத்தைப் பெற்ற ஒரு மானாகி இங்கே வந்துள்ள அரசியின் பாதங்களை

அணிந்து கொண்ட சந்திரன் முதன்மையாகத் தாங்கியிருக்க, ஆதரவின்றித் தனித்திருக்கிற நானும் அக்கமல பாதங்களைத் தாங்கமாட்டேனோ? நட்சத்திர முடியைத் தரித்த அவளது கூந்தலில் அணியும் மலர்களைக் குடையும் வண்டாக நான் அவளது புகழைப் பாடி அம்மலரிலுள்ள தேனை உண்ணேனோ? அவளது உறவைப் பெற்ற நல்ல திருக்காவலூரில் உள்ள கொல்லையில் ஒரு புல்லாகக் கிடக்க மாட்டேனோ?

— கட்டளைக் கலித்துறை —

கிடந்தேன் வினைக்கடல் மூழ்கிநீ தூக்கும் கிளைத்ததுயர்
கடந்தேன் நீயாள்திருக் காவலூர் சேர்ந்தேன் கடிமலர்க்கா
நடந்தேன் அறம்பொருள் இன்பம் எதிர்கொண்டே நண்ணியுள்தான்
அடைந்தேன் இனிவி டடையேனோ வென்னுயிர் ஆர்ஒளியே 37

## வீடு அடையும் விருப்பங்கொண்டேன்

என் உயிராகப் பொருந்திய ஞான சூரியனே! பாவம் என்னும் கடலில் மூழ்கிக் கிடந்தேன். அப்பொழுது நீ கை கொடுத்துத் தூக்கவே முன் என்னை நெருங்கிய துன்பங்களையெல்லாம் விட்டு நீங்கினேன். நீ அரசு செய்யும் திருக்காவலூரை அடைந்தவனாகி மணங்கமழ் மலர்ச் சோலையில் நடந்தேன், அறம் பொருள் இன்பமும் எதிரே வர அவற்றைக் கொண்டேன். இனி மோட்ச வீட்டை அடைய மாட்டேனோ?

## சமூக உல்லாசம்

— ஆசிரிய விருத்தம் —

ஒளியுளி எனஇன மணிஅணி கொடிகொணர்
வானவர் நூறுஞ் சிறந்த தொருபால்
உயிர்தரு நிழலமர் ஒளிதரு குடைகொணர்
வேறொரு நூறுந் திரண்ட தொருபால்
உருமணி அணிஉரு வினர்இடு வெளிவழி
சாமரை நூறுஞ் செறிந்த தொருபால்

துளியுளி முகில்என முரசொடு பறையொடு
பாடினர் நாமம் புகழ்ந்த தொருபால்
துளையுள குழலொடு குரல்உகள் நலமொடு
வீணைகள் யாவும் தெளிந்த தொருபால்
தொனிஉள அலைஅலை வனஎன மணிஅணி
வானவர் காலம் பணிந்த தொருபால்

வெளியுளி இருள்அற வெயிலர செழுமென
ஆதவன் ஆருங் கலிங்க வடிவாள்
வினைஅற மனைஉற மருளட அருளிட
வாகன மாமிந் தெழுந்து வரவே
விரைவடி வடிவடி உறையுறு மறுவறு
காவன லூரில் வதிந்து அணுகினுள்

களியுளி அருள்பொருள் நிகழ்புகழ் கலைநிலை
நாடுவிர் யாருந் துதைந்த துயராய்க்
கழலில கரமில மகரில நிகரில
நோகுவிர் யாவரும் திரண்டு மருவீர்
கருணையள் கதியினள் கனிவினள் கடையிலள்
பூவடி நாளும் பணிந்து தொழுவீர் 38

## பூவடி நாளும் பணிந்து தொழுவீர்

கண்ணிருள் கெட சூரியன் ஆகாயத்தில் எழுவது போல நாம் பாவத்திலிருந்து நீங்கி மோட்சம் அடையும்படி நமது மன இருள் போக்கி அருள் தர ஆதவனை ஆடையாகக் கொண்ட அழகி, மழை வளங் கொண்டு குற்றமற்ற திருக்காவலூரினிடத்தே ஒரு பக்கம் சோதி மண்டலம் என்னும்படி மிக்க மணிகளால் அலங்கரிக்கப் பெற்ற கொடிகளைக் கொணர்ந்த நூறு வானவரால் சிறந்ததாகவும், ஒரு பக்கம் உயிர் தரும் நிழலைக் கொடுக்கும் கதிர்க்குடையைக் கொணர்ந்த வேறே நூறு வானவரால் கூடப்பட்டதாகவும், ஒரு பக்கம் மேகமென முழங்கும் முரசுகளோடும் பறைகளொடும் அவன் திருநாமத்தைப் பல சம்மனசுகளும் பாடிப் புகழ்

பெற்றதாகவும், ஒரு பக்கம் துளைகொண்ட புல்லாங்குழல் முதலிய குழல்களும் ஏழு நரம்பு வீணைகளும் ஏனைய வீணைகளும் ஒலிக்கப் பெற்றதாகவும்,. ஒரு பக்கம் அலைகள் அலைவது போல முத்துமாலையை அணிந்த வானவர் கூட்டம் அணி அணியாக வந்து அவள் பாதங்களை வணங்கப் பெற்றதாகவும் வாசனை பொருந்திய தன்னழகிய திருவடித் தாமரைகளை அவற்றின் வாகனமாகிய சந்திரன் மேலெழுந்து வர வந்து தாங்கி நமக்கு அன்மையளாயினள் அருளையும் பொருளையும் புகழையும் கலையையும் நிலையையும் தேடுவோரே! கைகால் இன்றியும் மக்கட் பேறின்றியும் மிக்க துயர் கொண்டு வருந்துவோரே! நீவிர் யாவரும் அவளை அடுத்து கருணையளாக, மோட்சந் தருபவளாக, முடிவில்லாத இன்பம் உடையவளாக விளங்கும் அவள் திருவடித் தாமரைகளை எப்பொழுதும் வணங்கிக் கும்பிடுவீராக!

— நேரிசை வெண்பா —

தொழுவார் தொழுவாரில் தொல்பகை நோய்தீரா
தழுவார் அருவார் இங்கில்லை - செழுமாதின்
நாவலினை உற்றுர் இழிகுலத்தா ரேனும்வான்
காவலரை ஒப்பார் களித்து 39

## வான் காவலரை ஒப்பார்

அழுகின்றவர்களே! திருக்காவலூர் அன்னையைத் தொழுகின்றவர்களுக்குள்ளே பழமையான பகையும் துன்பமும் தீராமல் அழுபவர்கள் இங்கே இல்லை. மாண்புமிக்க இந்நங்கையின் திருக்காவலூர் சேர்ந்தவர்கள் இழிகுலத் தோற்றமுடையவராய் இருந்தாலும் களிப்புக் கொண்டு வானுலகத்து அரசரை நிகர்ப்பர்.

— விருத்தம் —

களிவி ளைத்தனள் கலிவ தைத்தனள்
கதிஅ மைத்தனள் ஆயினுள
வெளிவி ளக்கின வெயில்உ தித்தன
விரைமு கத்தன காவலூர்

உளிஉ தித்துளி உடல்இ டுக்கணும்
உயிர்அ லக்கணும் நீத்தவா
விளிவி னைத்தன இகல்வ டுப்பகை
இடர் ஒருப்பட ஒழியுமே. 40

## இடர் ஒருப்பட ஒழியுமே

உலகில் உள்ளோர்க்கு மகிழ்ச்சியை உண்டாக்கின வளும் வறுமையைக் கொன்றவளும் மோட்சம் கிடைக்கச் செய்தவளுமாகிய தேவ அன்னை வானத்தை விளங்கச் செய்த சூரியனைப் போல வந்து வாசனையுடைய இடம் வாய்த்த திருக்காவலூரிடத்தே தோன்றிய போது உடலின் துன்பமும் உயிர்த் துன்பமும் நீக்கி ஆசைப் பெருக்கால் இகழ்ச்சியை உண்டாக்கிய ஏவாளால் வந்த வன்மைமிகு பாவத்தால் ஆகிய பலவகைத் துன்பங்களும் ஒருப்பட ஒழியும். அன்னை வதியும் திருக்காவலூரை அடைந்தார்க்கு அல்லல்கள் அனைத்தும் ஒருப்பட ஒழியும் என்க.

- கட்டளைக் கலித்துறை -

ஒழியா முதலாய்த் தேவாதிக்க நீதிதான் உற்பவமாய்
அழியா தொருவற் கேதாயு மகளுமாய் ஆயமுதாய்ப்
பழிநாக வெவ்விடம் மாற்றும் மருந்தாய் பரகதிக்கோர்
வழியாய்த் துணையாம் நமைக்காப்பக் காவலூர்
வைகினளே 41

## நம்மைக் காக்கக் காவலூரில் தங்கினாள்

தேவ ஆதிபத்தியங் கொண்ட நீதி சொரூபன் தனக்குக் கெடாத முதல்வன் ஆகியும் தன்னிடத்தில் உற்பத்தியாகியதனால் அவ்வொருவனுக்கே கன்னிமை கெடாமல் மகளுந் தாயுமாகி, பூமியின்கண் அமுதமாய்ப் பாவப் பாம்பின் கொடிய நஞ்சை மாற்றும் மருந்தாய் விளங்கும் நம் அன்னை நம்மைக் காக்க, பரகதிக்கு ஒரு வழித் துணையாகவும் அமைந்து திருக்காவலூரிலே தங்கி யிருக்கின்றாள்.

— மருட்பா —

வைகல் எனவந்து மன்னுயிரார் கங்குலறும்
வைகலைச்செய் தேஒளியை வாய்த்துயிர்த்தே
வைகினுள்
காவலூருறை காதலார் துறை
ஓவலிர்களி ஓதியாரொளி
தெளித்தநூலி திறத்தசீலி
களித்தமாலை கயத்தவேலை
மந்திர மறைமொழி மண்டல குறையொழி
சந்திர வடியினள் சந்துடு முடியினள்
காதல்நாயகி கதிதரும்
வேதநாயகி மெல்லடி அணிவமே 42

## மெல்லடி அணிவோம்

திருக்காவலூரிலே தங்கிய ஆசை பொருந்திய மோட்ச வழியும் வருத்தத்தை அறுக்கும் மகிழ்ச்சியும் ஞானமாகிய ஒளியையுடைய சூரியனும் மனத்தைத் துப்புரவாக்கிய வேத நூலுடையவளும் நற்குண சீலியும், எவரும் மகிழத்தக்க தாவிதரசன் உப்பரிகையும் மேன்மையையுடைய கடலும் மந்திரத்தில் கூறப்படும் சொல்லும், பூமியின் குறைதீர்க்கும் சந்திரனை மிதித்த பாதத்தாளும், அழகிய நட்சத்திர முடியாளுமானவள், மக்களுள் தோன்றிய பாவத் துன்பம் என்னும் இரவின் முடிவான விடியற்காலம் ஆனது என்னும்படி ஒரு விடிவெள்ளிபோல பூமியில் தோன்றி அவ்விரவு நீங்குதற்கேதுவான நாளைச் செய்யும் தேவ சூரியனைக் கர்ப்பங் கொண்டு பெற்றுத் தங்கினவளேயாம். அன்புள்ள தலைவியும் வேதத் தலைவியுமான அவ்வன்னையின் மேன்மை பொருந்திய திருவடிகளைத் நம் தலைமீது அணிந்து கொள்வோம்.

— ஆசிரிய விருத்தம் —

அணிவ ளங்களுள் மணிவ ளங்களுள்
அருள்து தைத்தனள் மருள்வ தைத்தனள்
பணிவ வங்கணுள் கணிய ணங்கணுள்
பழிவி லக்கவும் வழிது லக்கவும்

துணிய வீரமா அணிய வாரமாய்
சுருதி வாயினுள் பருதி வேயினுள்
கணிஅ லங்கலாள் மணிவி லங்கலாள்
காவ லூரினுள் தேவ நாரியே 43

## காவலூரின் தேவப்பெண்

திருக்காவலூரிலே ஆள்கின்ற தேவப் பெண்ணனவள் அழகாகிய மாட்சிமை பொருந்திய மோட்ச இடத்தை உடையவள். நலஞ் செய்யும் அழகிய கண்களை யுடையவள். தேவ கிருபையை நம்மிடம் நெருங்கச் செய்தவள். பேயை வதைத்தவள். பேப்பாம்பு மக்களின் நன்மையைத் திருடிய காலத்து அவர்க்குக் கணிக்கப்பட்ட துன்பங்கள் சேராதவள். நமது பாவப் பழியைத் தீர்க்கவும் நல்வழியை விளக்கவும் துணிந்த அன்பினை யுடைய தாய். அழகிய முத்துமாலை. வேதம் விளங்கும் வாயினள். சூரியனை ஆடையாக அணிந்தவள். இரக்க முடையவள். நீங்காத அழகுடையவள்.

— ஆசிரியச் சந்த விருத்தம் —

நாரி இவள் நயம் வாரி இவள் தயை
நாரி இவள் திரு மாரி இவள் உறை காவலூர்ச்
சாரி வரவரு தேரின் இருபுடை
தாரின் அமரர்கள் வேரிமதுமலர் தாழ்விலா
வாரி இமிர்குழல் தேரி எழுபுகழ்
மாரி கொடிகுடை மாரிகவரிகள் வாயெலாம்
நேரில் எழில்எழு காரின் ஒலியலை
நீரின் ஒளிமிகு தேரின் இவள்வரும் அரவமே. 44

## தேர்க் காட்சி

அன்பின் வடிவினளும் இவ்விடத்தே இன்பக் கடலு மாகிய இந்நங்கை தேவ கிருபைக்கு காரணியான தேவ மாதா. இவள் வீற்றிருக்கப்பெற்ற சிறந்த மேகம் இவ்

வன்னை தான் வசிக்கின்ற திருக்காவலூரில் பவனி வருதற்குரிய இவளது தேர். அத்தேரின் இருபக்கங்களிலும் மாலையையுடைய சம்மனசின் கூட்டமும் பரிமளத் தேனைப் பொழியும் மலர்க்கூட்டமும் உள. இன்பங் குறையாது பெருங்கடலைப்போல் ஒலித்தல் யாதெனில் குழலிசையும் அச்சம்மனசுகளாற் சொல்லப்படும் புகழ் ஒலியுமாம். பொருந்திய மற்றவைகள் கொடிகள் குடைகள் சாமரைகள். ஒப்பில்லாத அழகுடனே எழுகின்ற அன்னை பவனி வரும் தேரின் ஒலி மேகத்தின் ஒலியையும் கடல் ஒலியையும் மிஞ்சி எழும் ஒலியாகும்.

— நேரிசை வெண்பா —

அரவம் படஎழுந்தாள் ஆகம் படுத்தும்
அரவம் படச்சி றடியால் - அரவத்தால்
பாருலகும் பேருலகும் பாவனையாத் தான்அணுகி
நேரொளியுங் காவனலூர் நீர் 45

## அன்னையின் வருகையால்

நல்ல மனத்தைக் கொல்லும் பாம்பு வருந்த அதனைச் சினந்து அதன் தலையை நசுக்கிய திருவடியையுடைய தேவ அன்னை ஆரவாரம் உண்டாகும்படி திருக்காவலூரில் எழுந்தாள். பூவுலகத்தாரும் பெரிய வானுலகத்தாரும் பாக்களால் அலங்கரிக்க இயலாத அவ்வன்னை ஆரவாரத்துடன் வருவதால் நல்ல திருக்காவலூரின் தன்மை நிகரற்று விளங்கும்.

## இரங்கல்

— ஆசிரிய விருத்தம் —

நீராரும் தடமே தடஞ்சூழும் நியமே
நியமாளும் திருவே திருச்சேரும் காவல்
ஊராரும் பொழிலே பொழிலாரும் உழையே
உழைபாயும் கனியால் களியேனோ நானே

ஆராரும் துயரால் துயரேற வழியுற்
றறியாத கதியில் கதியான மதியோர்
தாராரும் அடியே கதிராரும் மடியே
தாராரும் முடியே உயிர்மாசில் சுடரே ! 46

## மாசில் சுடரே! மகிழேனோ நான்?

சந்திரனுக்கு ஒப்பற்றதோர் மாலைபோல் தங்கிய திருவடிகளும், சூரியனாகிய ஒளிதங்கிய ஆடையும் நட்சத்திரங்கள் தங்கிய முடியும் பொருந்திய என் உயிரைப் போன்றவளே சுடுதல் முதலிய குற்றம் அற்ற சூரியனே! நீர் நிறைந்த தடாகங்கள் உனது திருக்கோவிலைச் சூழ்ந்திருக்கின்றன. உனது திருக்கோவில் செல்வத்தை உரிமையாகப் பெற்றிருக்கின்றது. செல்வம் பொருந்திய காவலூர் சோலைகளே நிறையப்பெற்றுள்ளது. அச்சோலை மான்களைக் கொண்டது. மான்கள் மகிழ்ச்சியால் சோலை மான்களைக் கொண்டது. மான்கள் மகிழ்ச்சியால் பாய்வன. நான் பூமியில் தங்கிய துயரால், துயரமிகு அல்வழியுற்று அழியாது ஞான ஒழுக்கத்தால் பரகதியினை உரிமையாக்கிக்கொள்ள மகிழேனோ?

### — நேரிசை வெண்பா —

சுடர்முடியாய் ஓர்குகையுள் நீஈன்ற தோன்றல்
படர்முடி யார்வந்து பணிந்தார் - இடர்முடியா
தின்றுணர்வார் காவனலூர் எய்திப் பணியாரோ
குன்றும் எனக்கொண்ட கோது 47

## காவலூர் எய்துக

விளங்குகின்ற முடியையுடைய அன்னையே! ஒளி படர்ந்த மகுடத்தையுடைய வேந்தர்கள் ஒரு குடிலில் வந்து நீ பெற்ற திருக்குமரனை வணங்கினர்கள். துன்பம் தீராது இப்பொழுது உணர்பவர் தாம் கொண்ட குற்றம் குறையுமெனக் கருதிக் காவலூரை எய்தி வணங்கமாட்டாரோ?

— கட்டளைக் கலித்துறை —

கோதென யாவும் உளத்தறக் கொய்மினீர்
கோள்முடியாள்
போதென பூத்தசெந் தாளணிந தேத்தவே பொய்ப்
பொருள்சேர்
காதலும் காமமும் கோபமும் காவல் களிச்செருக்கும்
தீதெனச் சேரா திருக்காவ லூர்அம்மன் சிரடியே 48

## காம குரோத கோபம் களைவீர்

நட்சத்திரங்களாகிய முடியையுடைய அன்னையின் தாமரை மலரெனப் பூத்த செவ்விய திருவடிகளைத் தலைமேல் தரித்துத் துதிக்கக் குற்றம் என்னும் யாவும் உமது மனத்தில் நீங்க அவற்றை அறுங்கள். திருக்காவலூரில் எழுந்தருளியுள்ள அத்தாயின் நன்மை பொருந்திய திருவடிகள் பொய்யாகும் பொருள்களில் சேரும் ஆசையும், மோகமும் வெகுளியும் தன்னையுடையவர்க்குச் சிறையை யொத்த மயக்கத்தால் வரும் மதமும் ஆகிய இவை யாவும் தனித்தனி தீதென்று அதனையுடையவரைச் சேரா.

காவல்களிச் செருக்கு : கர்வம் - தான் பெரியவன் என்ற மயக்க உணர்ச்சியால் வருவது ; அம்மயக்க வுணர்ச்சியே அதனை உடையவனுக்கு ஒரு சிறையாம். எனவே காவல் களிச் செருக்கு என்றார்.

... வஞ்சிப்பா ...

சீர்விளக்கிய செல்வியாய்ப்
பார்விளக்கிய பாவையே
தென்காவிரி திரண்டொலிப்ப
மன்காவிரி மலர்கமழப்
பூந்தாதகில் புடைநிழற்றத்
தீந்தாதகில் சினைகுளிர்ப்ப
அருட்காவலூர் அமைந்தளிப்பத்
திருக்காவலூர் சேர்ந்தனளே

சேர்ந்தபின்
நானே பூண்பழி நைய வெண்மதி
தானே பூண்பதம் தான்தா ராளோ
திருவடி ஒளிஉளம் தெளிஉறக் கண்டால்
கருவடி இருள்அறக் கண்டு
வருவடி மலரடி வான்கதி அந்தமே 49

## சீர்விளக்கிய செல்வி

வானச் செல்வத்தை விளக்கிக் காட்டிய செல்வியாகிப் பூமியை விளங்கச் செய்த நங்கையே ஓர் ஊரில் இருந்து நம்மைக் காக்கக் கருதி, அழகிய காவிரி வெள்ளத்தால் திரண்டு ஒலிக்கும், நிலைபெற்ற சோலைகள் இதழ் விரிந்த மலர்களைக் கொண்டு கமழவும், பூக்கள் மலிந்த அத்தி மரங்கள் பக்கங்களிலே நிழலைச் செய்யவும், அகில் மரங்கள் இனிய மகரந்தங்களாலும் அரும்புகளாலும் குளிர்ச்சி உண்டாக்கவும் திருநாவலூரில் சேர்ந்தனள்.

அவ்வாறு சேர்ந்த பின்னர், நான் கொண்ட குற்றங்கள் கெட வெள்ளிய நிலவு அணிந்த தனது பாதங்களைத் தாராளோ? அழகிய பாதங்களின் ஒளியை என் மனந் தெளியக் கண்டால், கருமை தோய்ந்த இருள் நீங்கி, பரிமளிக்கும் அத்திருவடித் தாமரைகளே எனக்கு மேலான பரகதிக்கு அழகாகும்.

## சித்து

— ஆசிரிய விருத்தம் —

அந்தமிலா அன்னமிலா ஆடையிலா
நல்குரவுற் றழல்நைந் தீர்காள்
சுந்தரனு நிழற்காவல் ஊரிருக்கும்
அருஞ்சித்தன் தொழிலைக் கேண்மின்
இந்ததின்வெண் கலமூன்றும் செம்பொன்னும்
கஞ்சத்தாள் இரண்டும் சேர்த்திச்
சந்ததம்வெண் பித்தளையும் இரும்புஞ்செம்
பொன்னுக்கித் தருவன் கண்டீர் 50

## சித்தன் செயலைக் காண்க

இச்செய்யுள் சித்து என்னும் துறையில் அமைந்தது. இரசவாதம் வல்லவனைக் கூறுகின்ற முறை சித்து, இதில் இரசவாதத்தொடர்பான பொருளுடன் சிலேடை நயத்தில் பிறிதொரு பொருளும் பொருந்தப் பாடுவர்.

## இரசவாத சம்பந்தமான பொருள்

அன்னமும் ஆடையுமின்றி முடிவற்ற வறுமை நெருப்பில் வருந்துவோரே; செல்வம் பொருந்திய திருக்காவலூரில் அழகனை அருஞ்சித்தன் செயலைக் கேளுங்கள். கரியின்மேல் வெண்கலப் பாத்திரங்கள் மூன்றையும், ஒரு செப்புப் பானையையும் வெண்கலத் தாம்பாள் இரண்டினையும் சேர்த்து அவற்றுடன் வெள்ளைப் பித்தளையையும் இரும்பையும் எப்பொழுதும் செம்பொன்னைச் செய்து கொடுப்பான்.

சித்தன் மேற்குறித்த தாழ்ந்த உலோகப் பொருள்களை உயர்ந்த உலோகமாகிய பொன்னாக்கித் தருவான் என்க.

## சிலேடை நயத்தில் பிறிதொரு பொருள்

நல்கு உரவு உற்றும் - கடவுளால் தரப்பெற்ற அறிவைப் பெற்றிருந்தும்; அன்னமிலா ஆடையிலா - சோறுண்ணாமல் உடை தரியாமல்; அந்தமிலா அழல் நைந்தீர்காள் - முடிவற்ற வருத்தம் அடைபவர்களே! சுந்தரனு நிழற் காவலூரிலிருக்கும் அருஞ்சித்தன் - குளிர்ந்த திருக்காவலூரில் எவர்க்கும் அழகனை அருஞ்சித்தன்; தொழிலைக் கேண்மின் - செயலைக் கேளுங்கள். இந்ததின் வெண்கலம் - சந்திரனாகிய வெள்ளிய அணிகலன் மீது; ஊன்றும் செம்பொன் - ஊன்றிய செம்பொன் போல; தும்பஞ்சம் - ஒளி விடுகின்ற தாமரை மலர்ப் பாதங்கள்; இரண்டிலும் சேர்த்தி - இரண்டிலும் சேர்த்து: சந்ததம் - என்றும்; வெள் பித்தளையும் - அறிவின்மையாகிய

பைத்தியங் கொண்டிருப்பவளையும்; இரும்புஞ்செம் - பெரிய திரட்சிகொண்ட; பொன் - பொன்னைப்போல; ஆக்கித் தருவன் - வேண்டும் நன்மை செய்து தருவான்.

சித்தன் அறிவற்ற பைத்தியக்காரியையும் திரண்ட பொன்னைப்போல் ஆக்கி, அவள் வேண்டிய நன்மைகளை அளிப்பான். பொன் போல் ஆக்குதல் - நல்ல இயல் புடையவள் ஆக்குதல். இது அவன் தொழில். உண்ணு மலும் உடைஅணியாமலும் உடலை வருத்தி தத்துவஞானி என்று பெயர் பெற வருந்துவோரே, உங்களை நல்லவ ராக்கி நீங்கள் விரும்பும் நன்மைகளை இச்சித்தன் அருள்வான் என்க.

சம்பிரதம்

— கட்டளைக் கலித்துறை —

ஈரிடத் தியத்தை வெட்டிட வெள்ளியாய் ஈவன்தரா
நேரிடப் பித்தளை மாசறப் பொன்னென நேர்நிறையாய்
நீரிடும் வித்தைக் கிவையாக்கிக் காவலூர்
தீர்த்தினிதாள்
நாரியின் கண்ணீரந் துன்பேனிச் சம்பிரதம்
நான்செயவே 51

## நாரியின்கண் இரந்து உண்பேன்

நீங்கள் கலப்பு உலோகமாகிய தராவைப் போல வெண்மையான பித்தளையைக் குற்றமற்ற தங்கம் என்று கொள்ளும்படியாகச் சரி எடையாகக் கொடுக்கும் வித்தை யுடையவர்களா? சரி. நான் காரீயம் வெள்ளீயம் என்னும் இரண்டு ஈயத்தையும் நீங்களே வெட்டிச் சோதித்துக் கொள்ளும்படியாக வெள்ளியாகவே கொடுப் பேன், இத்தகைய சம்பிரதத்தைச் செய்து திருக்காவலூர் என்னுந் திருப்பதியை ஆளும் நங்கையினிடத்தில் இரந்து உண்பேன்.

இது சம்பிரதம் செய்வோம் என்பவரை நோக்கிச் சொல்லப் பெற்றது.

இதன் உட்பொருள் வருமாறு; எங்களுக்கு நேரும் ஆசைப் பெருக்கமும் வறுமையும் நீங்கும்படியாகப் பொன் அருள்வாயாக என்று இரப்போர் கேட்க யாவருக்கும் ஒப்பான மாண்போடு அவர்களுக்குப் பொன்னைக் கொடுக்கும் தர்ம சிந்தனையான அறிவுள்ள உங்களுக்கு உயிரை அறுக்கும் பாவத்தை அறுத்தொழிக்கக் குருவாகி உங்களுக்குக் கெடாத வேத காரியங்களை நான் தருவேன். இத்தகையவற்றைச் செய்து திருக்காவலூர் என்னும் திருப்பதியை ஆளும் நங்கையிடத்து இரந்து உண்பேன்.

பித்தனைக்கு இரதி எனப்பெயருண்டு. அப்பெயரில் பித்தனைக்கு ஆசைப் பெருக்கம் எனப் பொருள் உரைக்கப் பெற்றது. மாசு - சிறுமை, அதாவது வறுமைச் சிறுமை. வெள்ளி - சுக்கிரன் எனவே குரு. சம்பிரதம் சித்து; சித்தாவது ஞானம்

— நேரிசை வெண்பா —

நாணு தயைதளிர்ப்ப ஞான நிழல்குளிர்ப்பத்
தேனுர் வரம்அரும்பச் சீர்கனிய — வானும்
அஞ்சலிசெய் உன்தாள் அருட்காவல் நாயகியே
எஞ்சிலதோர் சோலை எனக்கு 52

## உன் திருவடி ஒரு சோலை

திருக்காவலூரில் எழுந்தருளிய அருள் நிறைந்த தலைவியே வானவரும் வணங்கிய உன்னுடைய பாதம் எனக்குப் பலவகைப் பட்ட கிருபை துளிர்க்கவும் ஞான நிழல் குளிர் செய்யவும் தேனைப்போலப் பொருந்திய வரங்கள் முகைப்பவும் நன்மை கனியவும் குறையில்லாத ஒரு சோலையாகும்.

— எழுசீரடி ஆசிரிய விருத்தம் —

நக்கன முத்தே ஒப்ப முகைத்தே
நக்கு நிழற்கா காவனலூர்
புக்ககொ டிக்கே தக்க எழிற்கோர்
பொற்பு வமித்தே புகழ்வாரார்?

அக்கம லர்க்கே முத்து நகைக்கே
அத்த முதற்கே அரிதாகத்
தொக்கள விற்கே மிக்க கவிற்கே
தொக்க வணைத்தே தோற்பனவே 53

## அவள் அழகிற்கு உவமையுண்டோ?

விளங்கிய முத்துக்களையே நிகர்த்து அரும்பிட்டு நகைக்கும் நிழலையுடைய. சோலை சூழ்ந்த திருக்காவலூரில் புகுந்த பூங்கொடியையொத்த தேவ கன்னிக்கே தகுதியான அழகிற்கு ஓர் அழகை உவமைப்படுத்தித் துதிப்பவர் யார்? அவளது கண்மலர்கள் முத்துப் பற்கள் கை முதலிய உறுப்புக்கள் இவற்றுள் ஒவ்வொன்றிற்கே உவமானம் இல்லாததாக அவளது உடல் அழகிற்கு உலகில் தங்கிய யாவும் தோற்றுப்போகும் என்க.

### மடக்கு

— விருத்தக் கலித்துறை —

அனமாடும் தடவாயில் நலமாடும் மடக்கோவில்
மேலார்ந்த
கனமாடும் கொடியாடக் கணமாடும் முடியானைக்
காண்பேனே
மனமாடும் மறவாழி வடிவாக அறவாழி சேர்ந்தாடப்
புனமாடும் திருக்காவற் புனமாடிப் பெருக்காவ
லாற்றேனே? 54

## தாயைக் காணும் ஆசை

அன்னப் பறவைகள் விளையாடும் பெரிய வாயிலையும் மடத்தையும் கொண்டு நலம் செய்யும் கோவில்மேல் தங்கிய மேகத்தினிடத்து ஆடிய கொடியைப்போல நான் களிப்பினால் கூத்தாட நட்சத்திரங்கள் ஆடிய முடியானைக் காண்பேனோ? என் மனத்தில் அசையும் பாவக் கடல் வடிந்துபோகவும் புண்ணியக் கடலைச் சேர்ந்து அதிலே நான் முழுகவும் தோட்டஞ் சூழ்ந்த திருக்காவலூரிலுள்ள நீரில் குளித்துத் துன்பத்தை மிகுவிக்கின்ற ஆசையை ஆற்றேனோ?

— வெளி விருத்தம் —

ஆற்றார் களிப்ப வினைத்தீ ஆற்றுமேல் நாயகியே
தேற்றார் தெளிப்ப மறைநூல் தேற்றுமா நாயகியே
மாற்றார் வினைநீத் துயிர்நோய் மாற்றும்வான்
நாயகியே
ஊற்றார் காவன லூர்க்கின் பூற்றுமா நாயகியே 55

## பாவம் தணிக்கும் பரம நாயகி

நீரூற்று அமைந்த திருக்காவலூர்க்குப் பேரின்ப ஊற்றாகிய செல்வம் பொருந்திய நாயகி, வருந்தினவர் மகிழ பாவ நெருப்பைத் தணிக்கும் மேன்மையுடைய நாயகி, தெளியாதவரைத் தெளிவுள்ளவராகச் செய்ய வேத நூல்கொண்டு தெளிவிக்கும் வல்லமை பொருந்திய நாயகி, பகைவரின் போரை நீக்கி ஆன்மாவின் பிணியைப் போக்கும் வானுலக அரசி.

— காப்பியக் கலித்துறை —

மானார் அஞ்ச வஞ்சனி மண்பேய் மயலஞ்சக்
கானார் காவ லூரிடை கண்டேன் ஒருமானை
மானார் ஏதோ வித்திற மென்றேன் மடமானாய்
வானோர் ஏத்தும் கோளரி ஈன்றான்
வரத்தென்னார் 56

## இவள் யார் ?

பகைவர்கள் பயப்படவும் பெண் மண் பேயால் வரும் மயக்கம் பயப்படவும் ஒரு பெண்ணைத் திருக்காவலூரில் கண்டேன். “இவள் யார் ? ஒரு பெண்ணுக்கு இப்படிப் பட்ட மேலான தன்மை இருப்பது ஏது ?” என்றேன். அங்கிருந்தவர் “கன்னியர் மடத்திற்கே உரிய ஒரு கன்னியாகவிருந்து தான் பெற்ற வரங்களால், வானவரால் வணங்கப்பெறும் சிங்கமாகிய கடவுளைப் பெற்றவன் இவள்” என்றனர்.

— நேரிசை வெண்பா —

தாராகத் தண்மதிப்பூந் தாளணிய என்நெஞ்சே
ஆராய்ந்து நின்குறைகண் டஞ்சற்க — பாராயோ
வானுள்வாள் காவலூர் வந்தெழுந்தாள்
தாளணியாக்
கூனுங் குறைமதியைக் கொண்டு 57

## நெஞ்சே அஞ்சாதே

என் மனமே தேவ அன்னையின் திங்கள் மிதித்த திருவடித் தாமரைகளை நீ மாலையாக அணிந்து கொள்வதற்கு ஆராய்ந்து உனது குறையைக் கண்டு நீ அஞ்சாதே. வானுலகத்தை ஆள்பவளாகிய அவ்வன்னை வளைந்த குறை பொருந்திய சந்திரனைக் காலணியாகக் கொண்டு திருக்காவலூரில் எழுந்தருளினுள். அதனை நீ பார்.

— தாழிசை —

கொண்டலாடி விலங்கல்கொண்ட
குளிர்ந்தகொண்டல் பரந்தெழாக்
கொடிபடர்ந்து வளர்ந்தமுல்லை நகைத்துவாச
முகைத்துராய்
உண்டுதேறல் உமிழ்ந்தகொம்பர் ஒசிந்துவண்டு
முழங்கலோ
டுளியொருங்கு மகிழ்ந்துகானம் உகைத்துநீரிய
காவலூர்
விண்தளங்கள் விரும்பியண்டி விளங்கிமண்டி
விசும்புலாம்
விதுவணிந்த பதங்கள்தாழ விழைந்துபாட
வணங்கிநாம்
அண்டநூலி வியந்தசூலி விரிந்தசீலி வழங்குதே
அரியமாரி பரந்தவாரி புரந்தநாரி
தொழேங்கொலோ 58

## நாம் வணங்கிக் கும்பிடாதிருக்கின்றோமே ?

மலைகளைத் தமதிடமாக்கிக் கொண்ட குளிர்ந்த மேகங்கள் காற்றால் அசைந்து பரந்து எழும்பக்கண்டு அங்கே கொடிகள் படர்ந்து வளர்ந்த முல்லைகளின் பூங்கொம்புகளின் மேல் நின்ற வண்டுகள் ஒலிப்பதுடன் இடமெல்லாம் மகிழ்ந்து இசைப்பாட்டின் சிறப்புப் பொருந்திய திருக்காவலூரில் வானுலகின் சம்மனசுக் கூட்டம் ஆசையுடன் வந்து அவ்வூரை ஆளும் அரசியின்

சந்திரனை அணிந்த பாதங்களை வணங்கி அன்புடன் துதித்துப் பாடுகையில் வானுலகத்திற்குரிய வேத நூலை யுடையவளும் வியக்கத்தக்க கர்ப்பம் அடைந்தவளுமான மான விளங்கிய ஞான ஒழுக்கத்தனையுடையவளும் நன்மை யைப் பொழியும் தெய்விக மேகமும் வரம் பெருகிய கடலு மாய் இவ்வுலகத்தைக் காத்த அன்புள்ள நாயகியை இவ் வுலகத்திலிருக்கும் நாம் வணங்கிக் கும்பிடாதிருக் கின்றோம். இது என்ன பேதமை!

## தென்றல்

— பதினான்கு சீரடி விருத்தம் —

கொல்லா அலர்ந்த படநிழல் நாடிக்
கொண்டெலி வந்து புக்கொடுங்க
கொழுந்தழல் புழுங்கிப் பேயின் தேர் உந்திக்
கொதித்துலாம் சுடுவன சுரத்துத்

தொல்லா விஞ்சும் திருவடி யாளே
துன்னிய வேல்வை அவ்வனமே
தொடைஅணி பூண்ட மணமகள் ஆகத்
தொகைநகை முகநகைத் துவப்ப

ஒல்லா அருவித் திம்புல் ஓட
ஒசித்துவண் டினங்கள் யாழொலிப்ப
உயர்குயில் பாடத் துணைமயில் ஆட
உலாவிய நறுஞ்சிறு காலே

செல்லா ஒளிப்பத் திருப்புகழ் தொழுமத்
தெரிவையாள் காவலூர் எய்தித்
தீவினை அழற்றும் என்மனம் குளிர்ப்பத்
தென்றலே ஊர்திஓய் விலவே. 59

## தென்றலே! ஓய்வின்றித் தவழுக!

தென்றலே! பழமையாய் மிகச் சிறந்த பாதங்களை யுடைய தேவதாய், எலிகள் வெயிலால் கொல்லப்படாமல்

நிழலைத் தேடி அலைந்து பாம்புகள் விரித்த படநிழலில் புகுந்து ஒதுங்கும்படி நெருப்பு எழும்பிக் கானலைத் தந்து கொதித்து உலாவச் சுட்டிருந்த பாலைவனத்தை அண்டின போது அவ்வனம் மாலையையும் அணிகலங்களையுமுடைய ஒரு திருமணப் பெண்ணாக ஒள்ளிய முகத்தில் சிரிப்புத் தோன்றவும் அவ்விடத்திற்குப் பொருந்தாத அருவி ஆறாகிய நன்னீர் ஓடவும், வண்டினங்கள் மலரை அசைத்து வீணை வாசிக்கவும், குயில்கள் பாடவும் துணையாக மயில்கள் வந்து ஆடவும் அங்கே நல்ல தென்றல் உலாவியது. அந்தத் தென்றலுக்கும் பெயரில்லாமல் உன் பெயரே வழங்கும் படியாக நீ என் மனம் குளிரும்படியாக ஓய்வில்லாமல் ஊர்வாயாக.

கடுஞ் சுரத்திலும் கொடுமையுடையது என் மனது. சுரத்தைக் குளிர்விக்கும் தென்றலினும் என் அகத்தைக் குளிர்விக்கும் தென்றலே பெயர் பெற்று விளங்கும் என்பது தோன்ற "சிறுகாலே செல்லா ஒளிப்ப" என்றும் "என் மனங் குளிர்ப்பத் தென்றலே ஊர்தி ஓய்விலவே" என்றும் கூறினர்.

— எழுசீரடி ஆசிரிய விருத்தம் —

ஓய வணங்கிடர் ஓய நெடும்பிணி
ஓய உடன் றிடு பேய்
காய வருந்திய காம அறந்துயர்
காதல் அழுங்கிய நோய்
தேய வழங்கிய தேக மலங்கொடு
தீய ஒருங்கற வே
நேய அணங்குறை காவன லூர்நிழல்
நேடி வதிந்துறை வீர் 60

## திருக்காவலூரில் தங்கி வதிவீராக

அச்சம் தரும் வறுமை முதலிய துன்பமும் நாட்பட்ட நோயும் கலகம் செய்யும் பேயும் ஒழியவும் தன்மையுடையவர் மெலியும்படி உண்ணும் காம நோயால் உண்டாகும்

அருந்துன்பமும் ஆசை என்னும் பிணியும் குன்றவும் சோம்பல் முதலிய உடலையடுத்த குற்றமும் மற்றைப் பாவங்களும் அடியோடு நீங்கவும் நீங்கள் யாவரும் அன்புள்ள தேவ அன்னை வாசஞ் செய்யும் திருக்காவலூர் நிழலைத் தேடி அங்கே தங்கி வாசஞ் செய்வீராக.

ஊசல்

— எண் சீரடி ஆசிரிய விருத்தம் —

உறைவழங்கும் காவனலூர் அரசாள் ஈன்ற
ஒப்பிலரூ லோன்அடிதாழ்ந் தரும்பா வல்லீர்
துறைவழங்கும் சீர்எழுத்தே அசையில் தீட்டித்
தொடைவிருத்தம் கட்டில்அடிப் பந்தம் பூட்டி
நறைவழங்கும் கலிவெள்ளைச் சவரம் விசு
நாளும்அருள் பாவைமகற் காட்டிர் ஊசல்
முறைவழங்கும் தாழிசையால் வஞ்சி பாட
மொய்த்த மயில் அகவலினே டாட்டிர் ஊசல் 61

இதுவும் அது

ஆட்டிஅருட் செல்விஎனும் தேவதாயாம்
அருங்கன்னி நலம்பாடி ஆட்டிர் ஊசல்
காட்டியநல் தவவிட்டில் பொறிகள் என்னும்
கதவடைத்தே ஒழுக்கத்தாள் கடுகிப் பூட்டி
ஈட்டியதே வருள்வரித்த உளத்தில் மஞ்சம்
ஏந்தியஅன் பெனுங்கயிறிட் டாட்டிர் ஊசல்
நாட்டியசெல் வத்திணையாக் காவலூராள்
நங்கைதரும் புகழுறைந்தே ஆட்டிர் ஊசல் 62

## திருக் குழந்தை ஊஞ்சல் பாட்டு

அரும் பாவலரே! உரிய காலத்தில் தப்பாது பெய்யும் மழை பொழியப் பெற்ற திருக்காவலூரில் வீற்றிருக்கின்ற மோட்ச அரசி ஈன்ற ஒப்பற்ற வேதநூலைத் தந்த கடவுளின் பாதங்களைப் பணிந்து எங்கும் பரந்த அவனது புகழ் என்னும் எழுத்தையே அசையாக எழுதிக் கொடுக்கப்

படுவதாகிய விருத்தம் என்னும் கட்டிற்கு அடிகள் என்னும் கயிற்றைப் பூட்டி, அப்புகழாகிய பரிமளத்தை வீசும் கலிப்பா வெண்பா என்னும் வெண்சாமரம் வீச எப் போதும் இரக்கத்தைக்கொண்ட அத்திருக்காவலூர் அரசி யின் மகனை ஊஞ்சலில் இட்டு ஆட்டுங்கள். அவனுடைய குணங்களைச் சொல்லும் அலங்காரம் பொருந்திய அகவற்பா தாழிசை வஞ்சிப்பா முதலியவற்றைப் பாட ஊஞ்சல் ஆட்டுங்கள்.

அருட்செல்வி, தேவஅன்னை, அருங்கன்னி, இவளது உபகாரங்களைப் பாடி ஊஞ்சல் ஆட்டுங்கள். உணர்த்தப் பெற்ற நல்ல தவம் என்னும் வீட்டிலிருந்து ஐம்பொறிகள் என்னும் கதவுகளை அடைத்து, ஒழுக்கம் என்னும் தாழ்ப் பாளை விரைந்து பூட்டிச் சேர்த்த தேவ அருள் என்னும் துகில் விரிக்கப் பெற்ற மனம் என்னும் கட்டிலின்கண் அன்பு எனும் கயிற்றைப் பூட்டி ஊஞ்சல் ஆட்டுங்கள்.

— நேரிசை வெண்பா —

**ஊசல் கொண்டாடி உயிர் வருந்த யாவருமே**
**பாசங் கொண்டாடுமவாப் பட்டலைவார் -**
**பூசல்கொண்**
**டார்த்திடமே லோர்புகழும் அன்னையாள்**
**காவனலூர்**
**நீர்த்தடமே ஆடா நிலைக்கு. 63**

## ஞான நீராட்டுப் பெற்று நலம் அடைவீர்

யாவரும் தம் பாவத்தைக் கழுவி விளங்கும்படி சம்மனசுக்களால் துதிக்கப்படும் தேவ அன்னை ஆளும் திருக்காவலூரில் குணத்தைக் கொண்ட திருச்சபையில் ஞானநீராட்டுப் பெறுவீராக. அதனைப் பெறாத நிலையில் உமது உயிர் வருந்தும்படி பாவம் என்னும் ஊஞ்சலில் ஆடிப் பேய்கள் கொண்டாடும் ஆசையுடையவராக வருந்துவீர்.

— தாழிசை —

நிலையான திலையென்று நிலையாக நின்றுள்
நிகராத அருள்கொண்டு துணையாய திலதேல்
சிலையான மலைநைந்து சிதராடி நலியத்
திரையான கடல்நின்று திடளுக நிலையா
அலையாத நிலமென்று நடவாய தறிவேல்
அலர்ஆரும் நிழல்கொண்டுவளர்காவல் அமர்ஊர்த்
தலையான அனைஎன்று தமியோரும் மலையாத்
தயவாக நிலைதந்து திதியாக வெளிதே. 64

## அன்னையின் துணை இல்லையேல்

சகாயியான தேவ அன்னை, நமக்கு உறுதியான துணை இவ்வுலகில் இல்லையே என்று இரங்கி ஒப்பற்ற அருள் கொண்டு இங்கு நிலையாய் இருக்கின்றாள். இவள் இவ்வாறு இங்கு நிலைத்திராவிடில், கல்மலை புழுதியாகச் சரியும்; அலைகடல் முத்துப் பிறப்பித்தல் முதலிய தன் தொழிலைச் செய்யாமல் கரையில் நிற்காமல் வேறுபடும்; காற்று அசைவின்றிக் கிடக்கும். இவள் இங்கே நிலைத்த தனால் ஆதரவின்றித் தவித்த நாமும் வருந்தாமல் இருக்கின்றோம். பயிர்கள் தக்க நீரைக்கொண்டு வளர் கின்றன. பொலிவுள்ள திருக்காவலூரில் தாய்போல் தயவாய் இவள் நமக்கு உறுதியைத் தந்து காப்பாற்றுதல் நமக்கு எளிதாகக் கிடைத்திருக்கின்றது.

— கட்டளைக் கலித்துறை —

எளியர்க்கிரங்கி கதியேற வாஞேர் இடும் வடமோ ?
தெளிவற்ற தீவினைக் கொய்தெறும் பாசமோ ?
தேவருளால்
களிஅன் புயிரைப் பிணிக்கும் தலைகொலோ ?
காவனலூர்
உளிநங்கை அங்கையில் ஏந்து மணிமாலை
ஒப்பிலதே 65

## நிகரில்லாத செபமாலை

திருக்காவலூரில் எழுந்தருளிய நங்கை தன் அழகிய கையில் ஏந்திய ஜெபமாலை எளியராகிய எமக்கு

வானுலகத்தார் இரங்கி நாம் மோட்சம் ஏறிச் செல்ல இட்ட வடமோ? தெளிவில்லாத கொடிய செயலாம் பாவத்தை அறுக்கும் பாசமோ? தேவ கிருபையால் மகிழும் அன்புடைய உயிரைப் பிணிக்கும் பிணிப்போ? அது நிகரில்லாதது.

மடக்கு

— எழுசீரடி ஆசிரியச் சந்த விருத்தம் —

ஒப்பநிகரில நூலி உற்றவரமொரு வேலி
ஒத்தவரைவில சீலி கதிசேரச்
செப்பமருளிய வேதி சித்தமருளறு சோதி
சித்திவிளைவன நீதி திரைசூழ
எப்பகையுமொழி வாகை உத்தரணிநனி ஓகை
இத்தரணிவிளை ஈகை அரசாள
அப்பதியர்தொட ராவல் இப்பதியர்தொடர் காவல்
அப்பதியிலமர் தேவ மகள்தானே. 66

## தேவ மகள் திறம்

வானுலகினர் வாசஞ் செய்யும் தலமாய் இவ்வுலகினர் ஆவலோடு தேடப்பெற்ற திருக்காவலூரில் அரசாள அமர்ந்த தெய்வப் பெண் ஒப்பற்ற அழகைக் கொண்ட ஞான நூலை உணர்த்துபவள்; தானடைந்த வரமாகும் ஒப்பற்ற வேலை உடையவள்; தேவமகள் என்னும் தனது மாண்பிற்கேற்ற அளவற்ற ஞான ஒழுக்கமுடையவள்; யாவரும் பரகதியைச் சேர்தற்கான வழியைக் காட்டும் வேதத்தையுடையவள்; மனமயக்கத்தை அறுக்கும் கதிரவன்; மகிழ்ச்சி விளைதற்கு உரியதோர் உண்மை; கடற்போற் சூழ்ந்த தம் பகைவர் அனைவரையும் வென்ற ஞானவீரர் அணியும் வெற்றிமாலை; பேரின்பத்தை இவ்வுலகில் விளைக்கும் மேகம்.

— ஆசிரியச் சந்த கலிவிருத்தம் —

மகள்என ஆதி தாயினள் வனைமுடி தாரகை சூடினன்
பகலவன் ஆகும் ஆடையள் பனிமதி நீவு தாளினள்
அகமலர் ஊரு தேரினள் அருள்தரு காவல் ஊரினள்
உகமென யாவும் நானிவள் ஒழிகிலென் ஊழி
ஊழியே 67

## திருக்காவலூரினளை நீங்கேன்

முதல்வனும் கடவுளுக்கு மகளும் தாயும் ஆனவள்; அணிமுடியாக நட்சத்திரங்களைப் புனைந்தவள்; சூரியனாகிய அழகுபெற்ற ஆடையினள்; குளிர்ந்த திங்கள் தடவித் தாங்கும் திருவடியினள்; நன்மனமாகிய மலரைத் தேராக உடையவள். இந்த அருள் பொழியும் திருக்காவல் ஊரினளை ஊழி ஊழியாக நீங்கமாட்டேன்.

— பின்முடுகு நேரிசை வெண்பா —

ஊழி ஒழியினும்நான் உன்தாள் ஒழிவேனோ
சூழிஅணி காவலூர்ச் சுந்தரியே — கேழ்இழையா
மண்டவிர்ந்த விண்தளங்கள் வந்தணிந்து
கொண்டிறைஞ்சி
எண்தவிர்ந்த இன்புமிழ்ந்த என்று. 68

## ஊழி ஒழியினும் உன்தாள் ஒழிவேனோ?

தடாகங்களை அணியாகக் கொண்ட திருக்காவலூரில் எழுந்தருளிய தேவ அன்னையே! வானுலகத்தில் நெருங்கி விளங்கிய சம்மனசுக் கூட்டங்கள் இங்கு வந்து உன்னுடைய திருவடிகளை ஒளி பொருந்திய தலை அணியாக அணிந்து வணங்கி அளவில்லாத பேரின்பத்தைக் காட்டினவள் என்று நான் அறிந்து பின்னர் ஊழிக் காலமே ஒழிந்துபோமேயாயினும் உன் திருவடிகளை ஒரு போதும் விட்டு நீங்கமாட்டேன்.

— கட்டளைக் கலித்துறை —

என்துயர்க் கின்பம் அரிதைம் பொறிக்கிரை
தேடுவைபின்
கொன்துயர் ஆற்றில வாடுவை என்நெஞ்சே
கூப்பியகை
சென்றுயர் காவலூர் நாயகி போற்றிலை
தேடிலைநொந்
துன்றுயர் கூறிலை தன்புகழ் பாடிலை ஓதிலையே 69

## துயர் நீங்குதல் அரிதானது ஏன் ?

மனமே! ஐம்புலன்களுக்கு உணவைத் தேடுகின்றாய். மேலும் துன்பங்களையே பொறாமல் வாடுகின்றாய். இவையல்லாமலும் தலைமேல் குவித்த கையோடு சென்று மேன்மை பொருந்திய திருக்காவலூர் அரசியை வணங்குவதில்லை; அவளைத் தேடுவதில்லை; வருந்தி உன் துன்பத்தைச் சொல்வதில்லை; அவள் புகழைப் பாடுவதில்லை; துதிப்பதுமில்லை. ஆதலால் என் துயர் நீங்குதல் அரிதாயிற்று.

— விருத்தக் கலித்துறை —

ஓதிமிகுந்தாள் ஓகைமிகுத்தான் உருவாக
ஆதிபயந்தாள் ஆவிஅயர்ந்தாள் அகிலாளும்
கோதிலன்என்பாள் கோதிலர்அன்பாள்
கொழுங்காவல்
சேதிமமைந்தாள் சேமமடந்தை தேரேனோ? 70

## சேம மடந்தை தேரேனோ ?

ஞானம் மிக்கவள்; மகிழ்ச்சி மிக்கவள்; கடவுளை மனித வடிவாக ஈன்றவள்; தூய ஆவியின் ஏவுதலால் துதிக்கப் பெற்றவள்; அனைத்தையும் ஆட்சி செய்யும் குற்ற மற்றவள் எனப்படுபவள்; பாவமற்றவரிடத்து அன்புடையவள்; வளம் அமைந்த திருக்காவலூர் ஆலயத்தில் வலிமையுடன் வீற்றிருப்பவள்; நலந்தருகின்ற நங்கை. இவளை நான் அறிந்துகொள்ளாதிருப்பேனோ?

மடக்கு

— எழுசீரடி ஆசிரிய விருத்தம் —

தேர்ந்தனை ஓவல் தீர்ந்தனை காவல்
திருந்தினை மருந்தினை நிகரன்
பார்த்தனை மருளின் ஈர்ந்தனை அருளும்
அரங்கினை இரங்கினை இனிதில்
சார்ந்தனை புகரேபேர்ந்தனை நிகரே
தவிர்ந்தனை அவிர்ந்தனை எனையும்
ஓர்ந்தனை இலையோ தேர்ந்தனை இலையோ
உறுப்பினை வெறுப்பினை இனிதே. 71

## பாராமுகம் ஏனோ ?

என் உயிராகிய தாயே! நீ யாவும் உணர்ந்தவளாக விலக வேண்டியதை விலகினாய். திருக்காவலூரைத் தெளிந்தாய். அமுதம் போலும் அன்பு கொண்டிருக்கிறாய். மயக்கம் நீக்கி இருக்கின்றாய். எம் மேல் இரங்கியவளாய் எமக்கு அருள்செய்ய அருள் அரங்கத்தை இன்பமாகச் சார்ந்திருக்கின்றாய். சென்மப் பாவத்தை ஒழிந்தனையாகி விளங்குகின்றாய். என்னை மட்டும் உன் மகனாக அறிந்திலையோ? என் துன்பங்களை அறியாயோ? என்னிடத்து பாராமுகமாய் இருக்கிறாய். இது நல்லதோ?

மடக்கு

— கட்டளைக் கலிப்பா —

இனிதணங்கறு தானவன் அந்தமே
இருபதந்தொழு தானம்வல் நந்தமே
முனிவர்தாழ்ந்தணி பாதவ ரத்தமே
முத்திகாட்டுமென் பாதவ ரத்தமே
தனிநலோர்பெறு வாவிய தஞ்சமே
தயவினென்னுள வாவிய தஞ்சமே
கனிபிரான்மரு வாரணம் வாழியே
காவலூர்த்தயை வாரணம் வாழியே. 72

## கருணைக் கடலே வாழ்க !

இருளால் ஆகும் வருத்தத்தை இனிதாக அறுக்கும் சந்திரன் அழகு பொருந்திய இரண்டு பாதங்களையும் தொழப் பெற்ற வானுலகில் உள்ள வல்லமையாகிய சங்கே வாழ்க ! துறவிகள் வணங்கித் தலைமேல் அணிந்து கொள்ளப்பெற்ற திருவடிகளையுடைய பொன்னே வாழ்க ! தவத்தோர்க்கு மோட்சத்தைக் காட்டும் மென்மையான கண்ணாடியே வாழ்க ! ஒப்பற்ற நல்லோர் அடைதற்கியலும் அன்னமே வாழ்க ! தயையால் என் உள்ளத்தை விரும்பிய துணையே வாழ்க ! உன் திருவயிற்றின் கனியாகிய பெருமான் மருவியிருக்கும் சத்திய வேத சமுத்திரமே வாழ்க ! திருக்காவலூரில் எழுந்தருளியுள்ள அருட்கடலே வாழ்க !

— இணைக்குறள் ஆசிரியப்பா —

வாழிய உம்பர் வணங்கிய அணங்கே
வாழிவான் ஒளியே
வாழிபார் உயிரே
ஆதியை ஈன்றனை
நீதியை ஊன்றினை
பானொளி அணிந்தனை
மீனொளி புனைந்தனை
குறைமதி மிதித்தனை
மறைமதி விதித்தனை
மேதினி காத்தனை
தீதினை நீத்தனை
கதிக்கத வாயினை
திதிக்கனி வாயினை
வானோர்க் களித்தனை
ஈனோர் அளித்தனை
தொழும்உளத் துள்ளுறை சோதியை
அழும்உளத் தாதர வோதியை
நீரகத் தம்புய நேரினை

ஆரகத் தம்பர நீரினே
வானவர் வாழ்த்தல் ஆயினே
ஈனவர் வாழ்விங் கெய்தினே
ஆவல் ஊர்வழி ஆர்திருக்
காவல் ஊர் அருங் காதலே
அன்புணர் நீஇவண் அமைந்தபின்
பொன்புணர் உலகொடு பூவுல கொத்ததே. 73

## வையகம் வானகம் ஆனது

வானவரால் வணங்கப் பெற்ற தெய்வப் பெண்ணே வாழ்க! வானுலகத்திற்கு விளக்கே வாழ்க! பூமியில் உள்ளார்க்கு உயிரே வாழ்க! கடவுளைப் பெற்றவளே! மெய்ம்மையைச் சார்ந்தவளே! கதிரவனை உடையாக அணிந்தவளே! நட்சத்திரங்களை முடியாகப் புனைந் தவளே! இளம்பிறையை மிதித்தவளே! சத்திய வேதத் தால் அறிவை உண்டாக்கியவளே! உலகில் உள்ளவரைக் காப்பாற்றியவளே! பாவங்களை நீங்கினவளே! வான் வீட்டின் கதவே! எம்மைக்காக்கும் கனிவுள்ள தாயே! சம்மனசுகளுக்குரிய மகிழ்ச்சியை மனிதர்க்குத் தந்த வளே! உன்னை வணங்கும் மனத்தில் உறைபவளே! அழுகின்ற உள்ளத்திற்கு ஆதரவு தருபவளே! தண்ணீரில் உள்ள தாமரை மலரை நிகர்த்தவளே! பூவுலகத்தில் உள்ள மோட்சமே! சம்மனசுகள் வாழ்த்த வானுலகத்தை ஆண்டு மனிதர் வாழ இங்கே வந்தவளே! ஆசையை அழித்தற்கான முறைமை பொருந்திய திருக்காவலூரில் எழுந்தருளியுள்ள அன்புடையவளே! எம்மை அன்பினால் நினைந்து நீ வந்தபின் இவ்வையகம் வானகம் ஆனது.

- கட்டளைக் கலித்துறை -

ஒத்த வடிவந்த மண்டலத் துள்ளதோ ஒரிரதம்
வைத்த மதிமின் சுடர்ஒன் ருெளிவிட மாமரியே
மொய்த்தவின் புற்றென்கண் வாழநான் கண்டனன்
மூவணிநீ
மெய்த்திறத் தேந்தித்தேர் மேல்வரும் காவலூர்
வீதியிலே. 74

## தேர்மேல் வரும் வீதியிலே

மாமரியாயே! என் கண்கள் மிகுந்த இன்பம் அடைந்து வாழும்படி சந்திரனும் நட்சத்திரங்களும் சூரியனுடன் தமக்குப் பொருந்திய ஒளிவிடவும் நீ உன் உடம்பில் அவற்றை மூன்று அணிகளாகத் தாங்கித் தேர்மேல் வரும் திருக்காவலூர்த் தெருக்களிலே ஓர் இரதத்தினுள்ளே அச்சூரியனுடனே சந்திரனும் நட்சத்திரங்களும் தம் கதிர் கள் வீசி விளங்குவதைக் கண்டேன். இந்த மூன்றும் பகை யின்றி ஒருசேர விளங்கும் அழகு வான மண்டலத்தில் உண்டோ? தாயே சொல்வாய்.

மடக்கு

— தாழிசை —

வீதிமந்திர நூலியே ஆதிதந்திர வேலியே
வென்றிதந்த மடங்கலே நன்றிதந்த அடங்கலே
நீதிசுந்தர கோலியே கோதில் அந்தர சீலியே
நிந்தைநீங்கும் அனந்தமே எந்தை இங்கருள்
அந்தமே
பாதிஇந்தணி பாதியே சோதிவந்தணி சோதியே
பங்கநீத்தலர் கஞ்சமே பங்கநீத்தமர் தஞ்சமே
ஓதிலம்பர ஞானமே ஏதிலும்பர மானமே
ஓவலீரென தன்பளே காவலூர் அரசென்பளே. 75

## வீதி மந்திர நூலி

திருக்காவலூருக்கு அரசி எனப்படுபவள் ஒழுங்கான வேத நூலை உணர்ந்தவள். பழைமையான தந்திரத் தைத் தடுத்த அரண். வெற்றியைத் தந்த சிங்கமாகிய கடவுள் நமக்குத் தந்த அனைத்து நன்மைப் பொருள். நடு நிலைமையுடைய செங்கோலை யுடையவள் குற்றமற்ற வானுலக ஒழுக்கமுடையவள். இகழ்ச்சியற்ற பொன். எம் தந்தையாகிய கடவுள், இவ்விடத்தில் ஒரு மனிதனைப் பெற்ற அழகு. பாதி நிலவை அணிந்த பாதத்தினள். நட்சத்திர முடியணிந்த சூரியன். சேற்றை நீக்கி அலர்ந்த தாமரை. பாவத்தை நீக்கி அமர்ந்த துணை. அழகிய

மோட்ச ஞானம். குற்றமற்ற வானுலகப் பெருமை. என் வருத்தத்தைத் தீர்க்கும் அன்புடையாள்.

— நேரிசை வெண்பா —

என்பவக் கான்யாறு நீந்தி எரி ஆசைத்
துன்பச் சுரங்கடந்து வாழேமோ?—அன்பிலதா
என்றுணர்ந்தாய் நெஞ்சே! இயைகாவல் ஊர் அன்னை
முன்றுணரா வாழ்நாள் முகத்து. 76

## துன்பச் சுரங்கடந்து வாழேமோ?

மனமே! இங்கு நமக்கு வேண்டியவற்றைக் கொடுக்க இயைந்த திருக்காவலூர் அன்னை நமக்கு எதிரே மலர் போல வாழ்கின்ற இந்நாளில் பாவமாகிய காட்டாற்றை நீந்திக் கடந்து ஆசையாகிய துன்பத்தையும் நெருப்பையும் தரும் பாலைவனத்தைத் தாண்டி இவ்வன்னையின் அன்பே வீடாக வாழமாட்டேமோ என்று வாடுகிறோம். இது என்ன பேதைமை!

— தாழிசை —

நாண்முகத்து நறவுலாவி நளினம்மீதில் அனம் உலாவி
நடனமாட நயனநாகர் நயநயத்த காவலூர்
பாண்முகத்து முரலவிணை பார்முகத்து வளரஓதை
பாய்முகத்து விளையஓகை பார்முகத்து நிகரிலா
தூண்முகத்து நிமிருமாடை சுடர்முகட்டில் துவசமாட
அடிதுதித்த சுரர்கள்பாட நரர்களித்து நாடமின்
பூண்முகத்து முடிவணங்கு பூமுகைத்த வடி அணங்கு
பூதலத்தில் அணுகிஆளும் பொன்நகைத்த
கோயிலே. 77

## திருக்காவலூர் - திருக்கோவில்

தேன் பொருந்திய நாள் மலராகிய தாமரையின் மேல் அன்னங்கள் உலவி நடனமாடக் கண்ட கண்கள் வானவரைப்போல அதிக இன்பத்தை அடையும்படி உயர்ந்த திருக்காவலூர் நட்சத்திர அணியைத் தரித்த முடியையும்

யாவராலும் வணங்கப்படும் தாமரை மலர் போன்ற திருவடிகளையும் உடைய தேவ அன்னை இசைப் பாட்டுப்போல ஒலிக்கின்ற வீணையினின்றும் பாட்டுக்களினின்றும் வளரும் ஓசை பாயும் இடங்கள்தோறும் மகிழ்ச்சி உண்டாகவும், பூமியினிடத்து ஒப்பில்லாமல் கம்பத்தில் உயர்த்தப்பெற்ற சீலைக்கொடிகள் சூரியன் உலவும் ஆகாய முகட்டில் தன் விருதுக்கொடிபோல் ஆடவும், தன் திருவடிகளைத் துதித்த வானவர் பாடவும், மக்கள் மகிழ்ச்சியாய்த் தேடி வரவும் பூமியில் வந்து நம்மை ஆளுதற்கிடமாய்ப் பொருட்செல்வத்தை இகழும் ஆலயமாக அமைந்துள்ளது.

மடக்கு

— எண்சீரடி ஆசிரிய விருத்தம் —

**கோயிலன் புடையாள் தாயிலின் படையாள்**
**கூன்மதி அடியாள் கோள்மலி முடியாள்**
**வாயினைத் துடைப்பாள் நோயினைத் துடைப்பாள்**
**வருந்தினர்க் களிப்பாள் மருந்துநேர் அளிப்பாள்**
**பேயடக் கடலாள் மீயடக் கடலாள்**
**பெரும்புவ னத்தே அரும்புவ னத்தாள்**
**தீயுளத் தகல்வாள் தூயுளத் தகலாள்**
**தேவவூர் வணங்கும் காவலூர் அணங்கே.** 78

## பெரும் புவனத்தில் அரும்பிய அழகி

தேவ உலகத்தாரால் வணங்கப்பெறும் திருக்காவலூர்த் தெய்வப் பெண் கடவுள் வீற்றிருக்கும் கோவில்; பெற்ற தாயினும் அன்புடையாள்; பிறைச் சந்திரனை அடியில் கொண்டவள்; நட்சத்திரத்தை முடியாக உடையவள்; பேரின்பம் கெடாதவள்; நேரிட்ட வருத்தத்தை ஒழிப்பவள்; நோயைப் போக்குபவள்; நொந்தவர்க்கு மகிழ்ச்சி தருபவள்; மருந்தினை நேராகத் தருபவள்; பேயை அடக்கும் வல்லமை யுள்ளவள்: மேலுலகத்தை அடுத்த தன்மைக் கடலாள்; இப்பெரும் புவனத்திலே அரும்பிய அழகி; பொல்லாத மனத்தை நீங்குபவள்; நல்ல உள்ளத்தை விட்டு நீங்காதவள்.

— கட்டளைக் கலித்துறை —

அணங்காலந் தாயமு தாகும் அணங்கே
அனைத்துயிர்க்கும்
மணங்காலத் தேன்காலும் காவலனை காவலூர்
வந்தெழுந்தாள்
இணங்காத வெவ்வினை ஆற்ற இத்தேவ
இருட்பொழில்செய்
உணங்கா நிழல்வனத் தூழியே காய்வர்
உளங்கெடவே. 79

## ஆலமும் அமுதம் ஆகும்

இணங்கி வாராத தீவினைகளையும் உயிர்களுக்கெல்லாம் தணிக்கும்படி தேவ அன்னையே மணங்கமழ்கின்ற தேனைப் பொழியும் சோலை சூழ்ந்த திருக்காவலூரில் வந்து எழுந்தருளினாள். மரங்களின் செறிவால் இருண்ட இச் சோலையினது நிழலைக் கொண்ட கானகத்திலே நெடு நாளாய் மனம் உடைந்து வருந்துவோரே இனி உங்கட்கு ஆலமும் அமுதமாகும். அந்நிழல் அடைந்தோர்க்குத் துன்பத்தைத் தீர்க்கும்.

ஆலமும் அமுதமாகும் என்பது ஒருவர் உங்கட்குத் தீமை செய்தாலும் அது நன்மையாகவே முடியும்; ஆதலின் இனி உங்கட்குக் கேடில்லை என்பதாம்.

— எண்சீரடி ஆசிரிய விருத்தம் —

கெடவோ எஞ்சா·தழவோ தஞ்சம்
கிளர்தாள் கஞ்சம் புனையாய் நெஞ்சே!
சுடவிஞ் சியவஞ் சகவெஞ் சுரமார்
துயரத் தினிநீ கதிபெற் றெழநாம்
படமாங் கதிரும் குழலூ டுடுவும்
பதமார் மதியும் பதமேற் றவரும்
தடமிட் டுவிளக் குபக்கா வனலூர்த்
தலமே வினளமே வினமே வரசாள். 80

## பாத தாமரை சூடுக

வானுலகிலுள்ள சம்மனசின் கூட்டமும் விரும்பி வணங்கும் அரசி கொடிய பாலை நிலத்தை நிகர்த்த நரக

வேதனையை நாம் நீங்கித் தான் இனிதாகக் கொடுக்கும் மோட்சத்தை அடைந்து வாழத் திருக்காவலூரிடத்தில் தனது போர்வையாகிய சூரியனும் கூந்தலிலிருக்கும் நட்சத்திரங்களும் பாதத்தில் தங்கிய சந்திரனும் அழகையும் தக்க பெருமையையும் தந்து விளங்கச் சேர்ந்தனள். அப்படியிருக்க அஃவளது திருவடித் தாமரையை நீ அணிந்துகொள்ளவில்லையே. இது நாம் கெடுதற்கோ? இடைவிடாது அழுதற்கோ? நீயே சொல்வாய் மனமே!

— கட்டளைக் கலித்துறை —

மேவித்த யைஅன்பெ னேர்பூட்டி வேதநூல்
வித்துவிதைத்
தாவியை வாட்டு மவாக் களைகட்டி அடைக்கலஞ்சூழ்
தாவிய வேலியாய் நல்வினை பூத்துமீன் தார்முடியாள்
காவன லூரிற்செய் பைங்கூழ்கள் பேரின்பம்
காய்த்திடுமே. 81

## நல்வினை பூத்துப் பேரின்பம் காய்க்கும்

நட்சத்திர மலர்களால் அலங்கரிக்கப் பெற்ற முடியை யுடைய தேவ அன்னை தான்தரும் அடைக்கலமே சூழ்ந்து பரந்த வேலியாக அவளது கிருபையும் அன்பும் என்கிற கலப்பைகளை விரும்பிப் பூட்டி உழுது சத்திய மறை நூலாகிய விதைகளை விதைத்து உயிரை வாட்டும் ஆசையாகிய களைகளைக் கடிந்து திருக்காவலூரிற் செய்த பயிர் புண்ணியத்தைப் பூத்து பேரின்பத்தைக் காய்க்கும்.

பாண்

— பன்னிரண்டு சீரடி விருத்தம் —

இடும்புகழே படப்பாடற் கரும்பொருளே
தேடியபாண் மகளே கேளாய்
எலாமுறைகொண் டாக்கினனே மழைத்திரள்கொண்
டழித்தனனே கடல்நீர் மூழ்கிப்

படும்புகல்தேர் நிறுத்தினனே ஏழடிபின்
இழுத்தனனே அடியே காணப்
படர்புணரி பிரித்தனனே அலைநிலைமேல்
நடந்தனனே பூங்கா ஒப்பச்

சுடும்படர்தீக் குளிர்த்தனனே பகலுமிர
வாக்கினனே தொன்னேய் நீக்கித்
துகைத்திறந்தார் எழும்பினனே மலைநடுங்கப்
பிளந்தனனே இனைய பாடி

நெடும்புகழார் நாயகிதேன் தருங்காவ
லூர்வதிந்த நயமா தீன்ற
நிமலனிவன் விளையாடும் படியிதுதான்
எவ்வுலகும் கனிய மாதோ. 82

## பாண்மகளே! பாடுதற்குச் செய்தி சொல்வேன்

பாடும் பெண்ணே! நீ இன்பந் தரும் புகழ் தோன்றப் பாடுதற்கு அருமையான பொருளைத் தேடுகின்றாய் அல்லவா? இதோ கேள்:

அரசியாகத் திருக்காவலூரில் தங்கிய பேரின்ப நங்கை ஈன்றருளிய அமல கடவுள் அனைத்தையும் வாக்கினால் ஆக்கினான். பூமியிலிருந்தவற்றை மழையால் அழித்தான். மேற்குக் கடலில் மறைய இருந்த சூரியனை ஜோசுவா என்பவருக்காக வானத்தில் நிறுத்தினான். எசேக்கியா என்னும் மன்னருக்காக அதனை ஏழடி பின்னே இழுத்தான். யூதருக்காகத் தரை காணும்படி சமுத்திரத்தைப் பிரித்தான். கடல்மேல் நடந்தான். சுடுநெருப்புச் சூளை மூன்று யூதர்க்குப் பூஞ்சோலையாகக் குளிரச் செய்தான். எஜிப்து நாட்டவரை வருத்துவதற்காகப் பகலையும் இரவைப்போல் இருளச் செய்தான். நாட்பட்ட நோயாளரின் நோய் நீக்கினான். வருந்தி இறந்தவரை உயிருடன் எழுப்பினான். மலை நடுங்கும்படியாக அதைப் பிளந்தான். எவ்வுலகினரும் இன்புற்றிருக்க இறைவன் விளையாடும் தன்மை இத்தகையதே.

நீ இவற்றைப் பாடி மிகுந்த புகழை அடைவாயாக.

— எண்சீரடி ஆசிரிய விருத்தம் —

கனிமாலை சினை ஏந்தத் தீந்தேன் ஏந்தும்
காவலூர் ஆவலூர்ந்தணுகிப் போற்றும்
பனிமாலை ஏந்திரவி கதிர்செய் மாலைப்
பற்றிரண்டாள் பற்றினர்வாழ் நாளிற் ருகத்
துனிமாலை தோன்றி உயிர்க் கந்திமாலை
தோன்றுமுன் துதிமாலை கொண்டு பைம்பொன்
நனிமாலை திருக்கோயில் இடத்தாள் தேவ
நங்கைதிரு அங்கைதரு மாலை சூடீர். 83

## செபமாலையைச் சூடுவீர்

அகப்பற்று, புறப்பற்று ஆகிய இரு பற்றினால் ஆளப்படுகின்ற ஆசையை உடையவர்களே! உங்கள் ஆயுட்காலம் முடிந்ததாக, துன்பஞ்செய்யும் நோய் தோன்றி உங்கள் உயிருக்கு மாலையும் இரவும் உளதாகும். அதற்கு முன்பே விருப்பங்கொண்டு திருக்காவலூரை அடையுங்கள். மரக்கிளைகள் யாவும் வரிசையான கனிமாலைகளைத் தாங்கும் குளிர்ச்சி நிரம்பியது அவ்வூர். அங்கே சூரியனைப்போல் விளங்கும் மேகமானவளை வணங்குங்கள். நம்மையாளும் அத்தேவப்பெண் பசும்பொன் மாலைகளோடு விளங்கும் செல்வம் பொருந்திய தன் கோவிலிலே தன் கையால் தரும் செபமாலையைத் துதித்துச் சூடிக்கொள்ளுங்கள்.

மடக்கு

— அறுசீரடி ஆசிரிய விருத்தம் —

சூடி மலர்வீழ் நீர்க்கயலே
துள்ளும் காவலூர்க்கயலே
நேடி உறைசீர்க் கலிப்புணரி
நேரா உறைநீர்க் கலிப்புணரி
ஆடி அவிர்மீன் பூண்டாளை
அண்டி மதியைப் பூண்டாளை
நாடிக் காண்கின் முகந்திருப்பீர்
நையா நாளும் முகந்திருப்பீர். 84

## அவளது திருமுகங் காண்பீர்

மலர்கள் விழ்வதுபோல, துள்ளிவிழும் கெண்டைமீன்கள் நிறைந்த தடாகங்கொண்ட திருக்காவலூர்க்கு அருகிடத்தைத் தேடிச் சஞ்சரிக்கப் பெறும் செல்வ மிகுதிக்கு நீர்க் கடல்களின் பெருக்கங்கள் நிகரிலாதன. இப்படிப்பட்ட மேன்மையயுடைய திருக்காவலூரில் எழுந்தருளியவளாய் விளங்கும் நட்சத்திரங்களை முடியாய் அணிந்த நாயகியைச் சார்ந்து சந்திரனை மிதித்த அவள் பாதங்களை விரும்பிக் கண்டால் உங்கள் முகத்தைத் திருப்ப மாட்டீர்கள். கெடாமல் எப்பொழுதும் மகிழ்ந்திருப்பீர்கள்.

— நேரிசை வெண்பா —

இருந்தேத்தல் செய்கேனே மூகைசூழ் ஏங்கி
வருந்தேன்போல் வந்துவருந் தேனே - வருந்தேவ
காவலூர் கோதைகட் கானேகைப் பற்றஎன்
ஆவிக்கோர் தேன்துளியே ஆங்கு. 85

## இருந்து ஏத்தல் செய்கேனே ?

சோலையே! இங்கு உன்னைச் சூழ்ந்து ஒலிக்கும் அரிய வண்டுகளைப் போல ஊமையாகிய நான், இவ்வுலகில் வந்த திருக்காவலூரில் உள்ள தெய்வத்தன்மை பொருந்திய மாலையினிடத்துத் தங்கி அதனைத் துதித்துப் பாடமாட்டேனே? எனது உயிர் நித்தம் அங்கே வந்து அம்மாலை பொழியும் தெவிட்டாத தேனில் ஒரு துளி யேனும் உண்ண மாட்டேனே?

மடக்கு

— வஞ்சி விருத்தம் —

ஆங்கமலத் தேங்கமலம் ஆய்நிலாத்
தாங்கவிரு பாங்கவிரு தாளெழீஇ
நீங்கவலை ஆம்கவலை நீசவென்
தீங்குவகை நீங்குவகை சேர்ந்ததே. 86

## மகிழ்ச்சி அடுத்தது

திருக்காவலூர்த் தேவ அன்னையின் திருவடிகள் சந்திரன் தாங்கப் பெற்றவை; விளங்கும் அழகுற்றவை; புனிதமானவை; வாசனையுற்றவை; தாமரை போன்றவை. இப்பாதங்கள் எழுந்தருளியதால், கடலைப்போல் மிகுந்த துன்பங்கள் நீங்க, எனது நீச பாவங்களின் வகைகள் நீங்கிய மகிழ்ச்சி என்னை அடுத்தது.

— எண்சீரடி ஆசிரிய விருத்தம் —

சேர்ந்தார் மதிபூண் சேர்ந்தாள் அவளே
சேர்ந்தாள் எனவே சேர்கா வனலூர்
ஆர்ந்தார் சுரரும் ஆர்ந்தார் நரரும்
அந்தா தியவென் வந்தாள் தொழவே
தேர்ந்தார் எவரும் தீர்ந்தார் துயரும்
தேன்றூர் ஒழுகும் தேன்தார் அணியை
நேர்ந்தார் மகிழா நின்றார் இனிதே
நேர்ந்தார் மூழ்கி நீந்தார் நெடிதே. 87

## வானவராதியர் வந்து வந்து நிறைந்தார்

நிலவு அணியாகச் சேர்ந்த திருவடிகளுடைய தேவ தாய் வந்து சேர்ந்தாள் என்று அவள் உறவினராகிய அடியார்கள் சேரப்பெற்ற திருக்காவலூரில் கடவுளையுடையவளே என்று அவள் அழகிய திருவடிகளைத் தொழுவதற்கு வானவரும் மனிதர்களும் வந்து வந்து நிறைந்தார்கள். தேன் ஒழுகும் நறுமணங் கமழும் மாலையையும் காலணியையும் ஒத்தவராகக் களிக்கின்றார்கள். அவளுடைய அன்பர் இன்பக்கடலில் மூழ்கி நெடுங்காலம் நீந்திக் கரைகாணார்.

— பதின்மூன்று சீரடி ஆசிரியச் சந்த விருத்தம் —

நெடிது லைப்பன துயரயர் வறவற
நிலைப யப்பன வருடக வருடரு
நிசிம றுப்பன பழியழி வொழிதர வாயெலாம்

கடிஉதைப்பன இவறிய நசை அசை
கடல்அ டைப்பன அமரரும் விழைவன
கதிதி றப்பன நிகரில நலமுல காரவே
துடிது வைப்பவும் இசைபெறு புகழ்எழு
தொனிதொ னிப்பவும் முடிவில தொழுபவர்
துதிஒ லிப்பவும் முகிலினும் ஒலிஎழு காவ்லூர்
படிஅ னைத்திலும் எழுநனி அருளியை
பரிவ டைக்கலம் எனஇவண் எழுவன
பனிமு கத்தெழு தொளிவிரி மதிஎழு பாதமே 48

## அன்னையின் திருவடி

திருக்காவலூரில், முரசு ஒலிப்பதாலும் புகழ் அமைந்த ஏழிசை முழங்குவதாலும் இடையறாது தொழுபவரின் தோத்திர ஒலி ஒலிப்பதாலும் மேக ஒலியினும் பேரொலிகள் எழுகின்றன. இவ்வூர் பூமியில் எல்லாம் மேன்மை அடையும்படி மிக்க அருளும் அன்பும் உள்ள உமது அடைக்கலம் எங்களுக்கு உண்டாக என்று அனைவரும் சொல்ல இங்கே எழுந்தருளியனவும் குளிர்ந்த சந்திரன் மீது நிலை பெற்றனவுமான அன்னையின் திருவடிகளால் பெருமையுற்றது. இத்திருவடிகள் நெடுநாளாய் வருந்தும் துன்பமும் மயக்கமும் நீங்க அறத்தின் முறைமையை அளிப்பவை; அருள் தங்கும்படி அறியாமை இருள் நிறைந்த இரவை நீக்குபவை. எவ்விடத்தும் பாவப் பழியும் கெடுதியும் தீரப் பேயை உதைப்பவை. ஆசை என்னும் கடலை அடைப்பவை; வானவர்களாலும் விரும்பப் பெற்றவை. இவ்வுலகினர் ஒப்பில்லாத பேரின்பத்தை அனுபவிக்க மோட்ச வாயிலைத் திறப்பவை.

### — முதலோடு இடையும் இடையோடு கடையும் அடங்கிய தாழிசை —

மதிஎழுந்த பாதமே மதிகடந்த வேதமே
மருள்மறைந்த நீதமே அருள்சிறந்த சீதமே

துதிஎழுந்த சீலியே விதிவிரிந்த மாலியே
துணைஎழுந்த சூலியே திணையமைந்த வேலியே
கதிஅரும்பு கமலமே நிதிஅரும்பும் அமலமே
கடவுள்தந்த பதவியிங் கிடவுயர்ந்த உதவியாய்
நதிவழங்கு காவலூர்ப் பதிவழங்கு காவலே
நன்னையாக முன்னையாள் என்னை ஆளும் அன்னையே! 89

## அன்னை திருவடி என்னை ஆளும்

மதியின் மீது வைக்கப்பெற்ற திருவடியே! மனித அறிவுக்கு மேம்பட்ட வேதமே! பேயினுல் மறைக்கப் பட்ட நீதியே! அருள் பொழியும் மேகமே! துதிக்கப் படும் ஞான ஒழுங்கினை யுடையாளே! வேத விதிகள் விளங்கிய சூரியனே! உலகிற்கு உதவிசெய்ய எழுந்த சூலுடையாளே! மனுப்பயிர் காக்க அமைந்த வேலியே! மோட்ச கதியாகிய அரும்பைத் தரும் தாமரைக் கொடியே! ஞான நிதி தோன்றும் பரிசுத்தமே! உன்னை வேண்டு தலால் கடவுள் தரும் பேரின்பச் செல்வத்தை இவ்வுலகில் எமக்குத் தர மேலான துணையாகி காவிரி பாயும் திருக் காவலூரில் சஞ்சரித்து எம்மைக் காப்பவளே! தாயே! உனது பழைய அடியானுகிய என்னை சந்திரன் மீது எழுந்த உன் திருவடிகளே ஆண்டுகொள்ளும்.

— நேரிசை வெண்பா —

அன்னையே நீயல்லால் அன்புற்றென் நோய்அறிந்தீங்
கென்னையே யார்யார் இனிக்காப்பார் - தொன்ஞேய்
பெருக்காவல் தீரப் பெருமருந்தா நீயாள்
திருக்காவ லூர்விளையும் தேன்.

## தாயே, நீயல்லால் துணை ஏது?

தாயே பழமையாகிய பாவப்பிணி மிகுவிக்கும் அவா என்ற நோய் தீரப் பெரிய மருந்தாக நீ ஆளும் திருக்காவ லூரில் தேன் விளைகின்றது. ஆதலால் நீயல்லாமல் இவ் வுலகில் யார் இனி இங்கே என் பிணியை அறிந்து அன்பால் என்னைக் காப்பாற்றுவார்கள்?

... பன்னிரண்டு சீரடி விருத்தம் ...

தேன்விற் றிருக்கும் பனிநறும்பூஞ்
சினைக்கா நிழற்றும் காவனலூர்
திருவிற் றிருக்கும் பொற்கோயில்
தீம்பால் கதிர்க்கூன் மதிக்குறட்டே
மின்விற் றிருக்கும் அணங்கநலாள்
விரிவாய்த் தொளிவாய் விதானத்துள்
விண்விற் றிருக்கும் தளம்தொழுது
விரும்பிச் செய்யும் பணிகேட்ப
வான்விற் றிருக்கும் ஞாயிறுபோல்
வையம் எங்கும் மருள்நீக்கி
வாழ்விற் றிருக்கும் முகிற்கையால்
வரையா நயன்பெய் வானரசாள்
தான்விற் றிருக்கும் என்மனமே
தழைப்ப நோக்க வேண்டியவள்
தயைவிற் றிருக்கும் திருவடிஎன்
தலைய வேஎன் தலையவே. 91

## அன்னையின் திருவடிகள் என் தலைமேலன

வானில் விளங்கும் சம்மனசுகள் கூட்டம் வந்து வணங்கித் தாம் செய்யவேண்டிய பணிகள் எவை என்று ஆசையோடு கேட்கும்படி வண்டுகள் தங்கி மணங் கமழும் மலர்க்கிளைகளைக் கொண்ட சோலைகளால் நிழல் செய்யப் பெற்ற திருக்காவலூரில் செல்வம் குடிகொண்டிருக்கும் திருக்கோவிலிலே இனிய அமுதக் கதிர்களை விரிக்கும் இளஞ் சந்திரனாகிய மேடையின் மேல் நட்சத்திரங்களாகிய பரந்த விதானத்தினுள் விடிவெள்ளிபோல் வீற்றிருக்கும் அழகிய நங்கையும், ஆகாயத்தில் விளங்கும் ஆதவன் இருளை நீங்குதல் போல உலகமெங்கும் மன மயக்கத்தை நீக்கி யாவர் வாழ்க்கையினையும் விளக்கி மேகத்தைப் போலக் கைம்மாறு கருதாது, கொடுக்கும் கையால் அளவிடப்பெறாத நன்மையைப் பொழியும் வானரசியும், தான் வீற்றிருக்கும் என் மனம் அருளால் தழைக்கும்படி

என்னைக் காக்க விரும்பியவளுமான தேவ அன்னையின் அருள் தங்கிய திருவடிகள் என் தலைமீது உள்ளன.

குறம்

— என்சீரடி விருத்தம் —

என்தலை எண்ணெயோ டம்மை பழங்கலையீந்
தென்குறம் அன்பொடு கேளீர் காவனலூர்
மின்தலை யாள்தரும் மாலையொ டுத்தரியம்
வேட்டனர் வேட்டலர் வீட்டற விட்டுயர்தாய்
தன்தலை மீனொடு பூணிரு வான்சுடரும்
தாமணி வாருள் உள்ளணி யாத்தெளிவார்
துன்தலை அம்புவி ஆண்டபின் அம்புலிபோல்
தோன்றினர் வானர சாளுவர் வேதமிதே. 92

## ஏன் குறம் அன்பொடு கேளீர்

அம்மா! என் தலைக்கு எண்ணெயோடு பழஞ் சேலையும் தந்து குறத்தை அன்போடு கேள்; திருக்காவலூரில் எழுந்தருளிய மாதரசி கொடுக்கும் செபமாலையையும் உத்தரியத்தையும் விரும்பி அணிந்த மக்கள் வேதத்தில் விலக்கப்பெற்ற அனைத்தையும் விலக்கி உயர்ந்த அவ்வன்னையின் தலையிலுள்ள நட்சத்திரங்களையும் அணிபவர்களைப்போல இருள் பூணாமல் தெளிவடைந்தவர்களாகி கடல் சூழ்ந்த புவியை ஆண்ட பின்னர் சந்திரனைப்போல வானுலகில் விளங்கி ஆளுவீர். இது உண்மை.

இசை மடக்கு

— தாழிசை —

வேதவிளக் கெனவந்தாள் விரதவிளக் கெனநின்றாள்
சீதமுகிற் கிணைஈந்தாள் திருவினிகற் கிணைதந்தாள்
ஓதமெனக் கரையில்லாள் உயிரின்எனக்
கருள்நல்லாள்
காதலூரக் கதியானாள் காவலூர்ப் பதியாளே! 93

## வேத விளக்கு என வந்தாள்

கடலைப்போல எல்லை இல்லாத புகழுடையவளும், என் உயிரினும் எனக்கு எல்லா நன்மையும் அருள்பவளும்,

என் ஆனச செல்லும் பரகதி ஆனவளுமான திருக்காவலூர் அரசி, மெய் மறையின் ஒளி என்னும்படி இங்கே வந்தாள். எண்ணெயால் அன்றித் தவத்தால் விளங்கும் ஒரு விளக்கைப்போல நின்றனள். மேகத்தைப் போல வரங்களைப் பொழிந்தனள்; பேரின்பச் செல்வம் உலகில் நிலை பெற்றோங்க விரும்பினள்.

## மதங்கி

— தரவு கொச்சகக் கலிப்பா —

பதிஉகிர்வெம் பருந்தெடுப்பப் பசுங்கிளிளை
பதைத்தழைப்ப
அதிஅருள்கொண் டுதவியதே வனமாளும்திருக்காவல்
துதிஅருள்ஒண் குயில்பாடத் துணைஆடும் மயில்
அல்லால்
மதிமருள்மற் றெருமதங்கி மருவாதிங்
கெழுந்தகையே. 94

### குயில்கள் பாட மயில்கள் ஆடிப்புகழும்

அழுந்தும் நகங்களைக் கொண்ட கொடிய பருந்து பசிய கிளியினை அடித்துக் கொண்டு போக அக்கிளி துடித்து "மரியே" என்று தன்னைக் கூப்பிட உடனே மிக்க அருள்கொண்டு அதற்கு உதவியாய்க் காத்த தெய்வீக அன்னம் போன்ற தேவ அன்னை இத்திருக்காவலூரை ஆள்கின்றாள். ஆதலால் அவளுடைய புகழ்ச்சியையும் அருளையும் ஒள்ளிய குயில்கள் பாடத் தம் துணையோடு மயில்கள் அன்றி அறிவு மயங்கிய மற்றொரு மதங்கி பாடவும் ஆடவும் இங்கே நெருங்காமல் அவளது தயை இங்கேயு மிருந்திருக்கின்றது.

பருந்தெடுத்த கிளி "மரியே" என்றதையும் தேவ மாதா அதனைக் காத்ததையும் - தேவமாதா பிள்ளைத் தமிழ் வாரானைப் பருவம் 2 ஆம் பாட்டில் "மின்னூர் கரத் தேந்திச் செறிந்த மொழி மாமரியெனச் செப்புதலறிப் பறவைதனை வனப் பறவை இரை சென்று கொடு போகாமலே - பூங்கிளி தனக்குயிரளித்த நற்கருணை பரிபூரணக் கொடி வருகவே" என்பதிலுங் காணக என்பார் தஞ்சை அருளப்ப நாவலர்.

— அறுசீர் ஆசிரிய விருத்தம் —

எழுந்தடிக்கீழ்க் குழவிமதி அமுதிறைப்பக்
குழலணிமீன் இமைத்துப் பூப்பச்
செழுந்திருவின் மார்பில்அணி செங்கதிரின்
ஒளிதியங்கச் செங்கை நீட்டி
கழுந்தகைவாள் வீட்டழகு காட்டுதற்கே
காவனலூர்க் கனிசென் றுளோ
அழுந்தொளிவாய்க் கெழுந்துளிவார் கமலத்தாள்
அமலத்தாள் அரும்பா நல்லாள். 95

## வானத்து அழகு காட்ட வந்தனளோ?

சந்திரன்மேல் அழுந்தி, இனிமை நிறைந்த தேன் துளிகளைப் பெய்கின்ற தாமரைபோன்ற திருவடிகளை யுடைய விமலியும், அரிய பாவிலும் இனிய நலஞ் செய்பவளு மான தேவமாதா, பரிபூரணமான மேன்மையுடைய மோட்ச வீட்டின் அழகைக் காட்டுதற்காகவே வானுலகை விட்டெழுந்து தன் பாதங்களுக்கு அடியிலுள்ள பிறைச் சந்திரன் அமுதக் கதிர்களை ஊற்றவும், கூந்தலில் அணிந்த நட்சத்திரங்கள் விளங்கிப் பூக்கவும், மாட்சிமை கொண்ட செல்வமாகிய ஒளியைத் தரும் மேனியில் அணிந்த சூரியனுடைய கதிர்கள் அசையவும் செங்கரங் களை நீட்டி திருக்காவலூரில் மனமிரங்கி வந்தாளோ?

தூது

- கட்டளைக் கலித்துறை -

அரும்பா முகைத்தேவ கன்னி தவமறி யாதனவோ
விரும்பா மனத்தூ துரைகூற உற்ருய் வியப்பனகேள்
திரும்பா முகைசேர் கனி ஒப்பக் கன்னியாய்த்
தேவமைந்தன்
தரும்பான்மை கூறும்தூ தாயினேன் காவலூர்த்
தாய்இழைக்கே. 96

## தூதுவர் பேச்சு

கன்னிமரியாள் தேவ சூல் கொள்வதற்கான செய்தியை அவளுக்குக் கூறவந்த தேவ தூதன் கபிரியேல் அவளது திருமணத் தூதனை இன்னொரு வானவனைப் பார்த்துக் கூறுவதாக அமைந்தது இச்செய்யுள்.

அரிய வானவனே! பூவின் அரும்பை நிகர்த்த தேவ கன்னியின் தவங்களை நீ அறிவாயே. அவள் விரும்பாத திருமணத்திற்கு அவளை இணக்குவதற்கான தூது சொல்லும்படி தூதனாக வந்திருக்கின்றாய் நீ. இந்த அற்புதத்தைக் கேள். திருக்காவலூரில் எழுந்தருளிய தாயாகிய தேவ அணிகலனாகிய அவளுக்கே தன்னியல்பு மாறாத பூ அரும்போடு கலந்த கனியைப் போல கன்னி யாகவே இருந்து தேவ சுதனைப் பெறுந் தன்மையைச் சொல்லும் தூதனாக யான் வந்துள்ளேன்.

மடக்கு

— எண்சீரடி ஆசிரிய விருத்தம் —

இழைவளர் கோயில் உழைவளர் தாயின்
இன்புடைக் கிழத்தி வென்புடை நிழற்றி
உழைதிரி காவின் மழைதிரி காவல்
ஊருழி சேர்ந்தாள் ஞூருழி தீர்ந்தாள்
மைநிழல் அகத்தென் பிழைஅழல் அகற்ற
வான்வரம் பொழியும் தான்வரம் பொழிவாள்
கழைபொழி வாயாள் மழைபொழி கையாள்
காவிஉண் விழிஎன் ஆவிஉண் விழியே. 97

## காவியுண்விழி என் ஆவிஉண் விழியே

தனக்கு ஓர் அணியாகத் தன் கர்ப்பத்தில் வளர்ந்த கடவுளினது ஆலயத்தின் கண் வளர்ந்தவளும், நம்முடைய சொல் முதலியவற்றால் அன்னையிலும் இன்பங்கொள்ளும் பரமநாயகியும், மான்கள் திரிகின்ற சோலையில் மேகங்கள் அம்மான்களின் முதுகிடத்து நிழலைத் தந்து திரியப்பெற்ற திருக்காவலூரில் சேர்ந்தவளும், துன்பமாகிய இடத்தை நீங்கினவளும், சுரபுன்னையின் நிழலையுடைய அத்திருக் காவலூரிடத்து என்னுடைய குற்றமாகிய நெருப்பை அவிக்க மேன்மையின் அளவைக் கடந்து தானே வரங் களைப் பொழிபவளும் கரும்புச் சாறுபோன்ற இனிமை யைப் பொழியும் சொல்லை உடையவளும் மழைபோல வரக் கதிரைச் சொரியும் கையை உடையவளுமான தேவ மாதா

வின் நீலோற்பல மலரினது தன்மையைக் கொண்ட கண்கள் என் உயிரை உண்ணும் கண்கள்.

பக்தனின் ஆவி தம்மையே பற்றி நிற்றற்கேதுவான விழிகள் என்பது கருத்து. அவள் ஆவி இடையருது அவ் விழிகளைத் தன்னிடத்தில் கொண்டுள்ள தென்பது தோன்ற அவனது ஆவியால் உண்ணப்படும் விழிகள் என்று பொருள் உரைப்பினும் அமையும்.

வலைச்சி

மடக்கு

— அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரியச் சந்த விருத்தம் —

விழிக்கயலோ குழிக்கயலோ விலைச்சிலைவான்
வலைச்சியரே! விற்ப உற்றீர்
பிழிக்கயலாம் பொழிக்கயலாம் பெருக்காவல்
திருக்காவல் பெயர்கொள் மூதூர்
வழிக்கயலுள் உழிக்கயலுண் குருகியலை
அருகியலை மதியா துற்றீர்
பழிக்கயலாம் விழிக்கயலாம் சோர்வற்றுர்
அவர்சேர்வர் பணித்த டத்தே. 98

## வலைச்சியரே கேளுங்கள்

மேன்மையைக் கொண்ட வலைச்சியரே! இங்கே விலை கூறி விற்கும்படி வந்தீர்களே! எதனை? கண்கயலையோ? குளத்தின் கயலையோ? சேல் மீன் உண்ணும் பறவை தேன் இருக்கும் சோலைகளுக்கு இடமாய் மிக்க ஆசையை விளக்கும் திருக்காவல் என்னும் பெயரினையுடைய இம் மூதூரின் வழியைச் சேல் மீனின் நிமித்தமாகக் கருதும் போதும் நல்ல குணத்தைக் கொண்டதாகி தன் பசிப் பிணியைப் பெரிதாய் எண்ணுது, கண்ணீர் விடுதற்கேது வான துன்பம் நீங்கி இருப்பவர்தாம் பாட்டின் இசை யைக் கொண்ட இவ்வழியின்கண் சேர்வார்கள் எனவே நீங்களும் உம்மைச் சேர்ந்த உயிரை அறுக்கும் பாவத்தை விலக்குங்கள்.

— எழுசீரடி ஆசிரியச் சந்த விருத்தம் —

தடமலி தருஉயர் தருமலர் தருமது
நறவுமிழ் நிழல்உமிழ் காவலூர்
இடமலி வருநயம் அருள்பொருள் இறைஅறை
மறைபொறை தயையியை ஈகையாய்
விடமலி வினைமலி மிகைஅற மிகைமலி
நசைஅற வசைஅற நோயெலாம்
படமலி தயையினள் பரவிய பரிவினள்
பரமனை அருளினள் பாடினேன். 99

## பரமனை அருளினள் பாடினேன்

வழிகளில் நிறைந்துயர்ந்த மரம் தம் மலர்கள் பொழியும் தேனால் மணங்கமழ் நிழல்தரும் திருக்காவலூரில் அருமையான பேரின்பமும் கருணையும் வாய்மையும் பெருமையும் சொல்லப்படும் வேதமும் பொறுமையும் தயையினால் இயைந்த உத்தம ஈகையும் உண்டாகவும், நஞ்சைப்போல நிறைந்த தீவினையால் பெருகிய கேடும் அவாவும் குற்றங்களும் மற்றெல்லாத் துன்பங்களும் அறும்படியும், மிகுதியாகக் கருணை கொண்டவளும் அன்புடையாளும் தேவனைப் பெற்றவளுமான திருக்காவலூர் அன்னையைப் பாடித் துதித்தேன்.

— நேரிசை வெண்பா —

பாடிப் புகழ்ந்து படர்காவல் ஊர்நங்கை
நாடி வணங்கு நரரெல்லாம் - கேடிலரே
மண்ணவருள் மாசிலராய் வாழ்ந்திவண்மற்
றெப்பிலராய்
விண்ணவருள் விற்றிருந்தோப் பார். 100

## பாடுவோர் பெறும் பயன்

மேலோரால் நினைக்கப்படும் திருக்காவலூர் நங்கையைப்பாடித் துதித்து ஆசையோடு வணங்கும் மனிதர் யாவரும் மனிதர்க்குள்ளே குற்றமில்லாதவர்களாய் வாழ்ந்து இவ்வுலகத்தில் நிகரில்லாதவர்களாய் வானவருள் வீறுபெற்றிருந்து அவ்வானவருக்கு நிகராவார். ஆதலால் அவர்கள் அழிதல் இல்லாதவர்; அமரர்.

# பாட்டு முதற்குறிப்பு அகராதி

(எண் - பக்கவெண்)